
அனுக்ரஹம்






# நான் கண்ட பூஜ்ய ஸ்ரீ மஹா பெரியவாள்



ஸ்ரீமதி நீலா சுப்ரமணியன்





Complimentry Copy

# நான் கண்ட பூஜ்ய

# ஸ்ரீ மஹா பெரியவாள்

ஸ்ரீமதி நீலா சுப்ரமணியன்

Sister of
M. S. Narayanan
2223-8565.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 1 |
| ஒரு சமர்ப்பணம் | 2 |
| ஓர் ஆர்வலரின் பார்வையில் | 3 |
| நான் கண்ட பூஜ்ய ஸ்ரீ மஹா பெரியவாள் | 5 |
| கோதாவரி ஓடம் | 47 |
| வந்தனம் | 50 |
| Profile of Smt Neela Subramanian | 52 |
| A Tribute | 53 |
| Shishya Parampara of Saint Tyagaraja | 54 |
| Picture legends | 56 |

Brothers and Sisters of Smt. Neela Subramanian and their families thank the following for their contributions in bringing out this booklet.

Mr. E. Saravanan
Ms. Yogeswari
P.S. Chandrasekaran



# முன்னுரை

மனிதகுல அறிவை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பவை இரண்டு. ஒன்று கல்வி, மற்றொன்று அனுபவம். ஒருவன் எதை முனைந்து கற்கிறானோ அதைப்பற்றிய அறிவு மட்டுமே கிட்டும். ஆனால் அனுபவ அறிவு பெற ஒவ்வொருவரும் அதை அனுபவித்தே ஆக வேண்டும் என்பது இல்லை. நெருப்பு சுடும் என்பதை அனுபவித்தவன் பகிர்ந்து கொண்டதால் நாம் எச்சரிக்கையாய் இருக்கிறோம். ஆனால் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் பெரிய மனம் வேண்டுமே!

சத்குரு த்யாகராஜ ஸ்வாமிகளின் பிரதான சீடர்களில் ஒருவரான உமையாள்புரம் கிருஷ்ணபாகவதர் வம்சத்தில் வந்தவர் திருமதி நீலா சுப்ரமணியன். வீணை நீலா என்று காஞ்சி சங்கரமட வட்டாரத்தில் அறியப்பட்டவர்.

ஸ்ரீ மஹா ஸ்வாமிகளோடு பல தலங்களுக்கு சென்று வரும் பாக்யம் பெற்றவர். அவர் தனது உன்னதமான அனுபவங்களை அவ்வப்போது எழுதி வந்துள்ளார். அவர் எழுதியதை அவரது சுயசரிதம் என்ற சொல்லுவதை விட, அவரது அனுபவத்தின் எழுத்து வடிவ உரத்த சிந்தனை என்றே கூறலாம்.

இந்த உன்னதமான அனுபவங்களை பலரும் அறிந்து கொள்ள வேண்டி தொகுக்கப்பட்டதுதான் இந்த நூல். இதைப்படிப்பவர்கள் பலரது மெய் சிலிர்க்கும் என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து அனுபவியுங்கள்.

**கி. இராமச்சந்திரன்**

# ஒரு சமர்ப்பணம்

என் மூத்த சகோதரி ஸ்ரீமதி நீலா சுப்ரமணியன் ஸ்ரீ மகா பெரியவாளிடம் மிகுந்த பக்தி உடையவராய் இருந்தார். அவர் வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னாரோ அதன்படி வாழ்ந்துக் காட்டினார்.

ஸ்ரீமதி நீலாவின் தகப்பனார் அவருக்கு வீணையும், பாட்டும் சொல்லிக் கொடுத்திருந்தார். ஸ்ரீ பெரியவாள் அவரிடம் “நீ உன் கலையை அம்பாளுக்கே அர்ப்பணம் பண்ணு. வீட்டில் வந்து யார் பாட்டுக் கற்றுக்கொள்கிறார்களோ அவர்களுக்குச் சொல்லிக் கொடு” என்று சொன்னார். அதன்படிதான் ஸ்ரீமதி நீலா வாழ்ந்தார்.

ஸ்ரீமதி நீலாவுக்கு 5 தம்பிகள், 2 தங்கைகள் உண்டு. அவர்கள் எல்லோரிடமும் மிகவும் அன்பாக இருப்பார். இவருக்கு குழந்தை பாக்கியம் இல்லாவிட்டாலும், தம்பி, தங்கைகளின் குழந்தைகளைத் தன் குழந்தைகளாக அன்போடு நடத்தினார்.

ஸ்ரீமதி நீலா தர்மத்திற்கு விரோதமின்றித் தன் கணவருக்கு வேண்டிய பணிகளையும் செய்து வந்தார். ஸ்ரீமதி நீலாவுக்கு நந்தனத்தில் ஹௌசிங்போர்டு மூலம் ஒரு வீடு தவணை முறையில் கிடைத்தது. அவர் தன் சொத்துக்கள் எல்லாவற்றையும் வேதஸம்ரக்ஷணத்திற்கே எழுதி வைத்துவிட்டார்.

ஸ்ரீமதி நீலா, ஸ்ரீ வெங்கட்ராமன் (முன்னாள் ஜனாதிபதி) அவர்கள் மனைவி எல்லோருமாக சேர்ந்து ஸுவாஸினி பிட்சை செய்வார்கள். ஆல் இந்தியா ஸுவாஸினி பிட்சை என்று இவர்கள் ஏற்படுத்தி இன்றும் அது நடைபெறுகிறது.

ஸ்ரீ மடத்தில் மஹா பெரியவாள் பூஜை செய்ய ஆரம்பித்தவுடன் ஸ்ரீமதி நீலாவை வீணை வாசிக்கச்சொல்லுவார். அவர் பூஜை முடியும்வரை வீணை வாசித்து வந்தார். ஸ்ரீ பெரியவாளின் பூரண அனுக்ரஹம் அவருக்கு கிடைத்திருந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஸ்ரீமதி நீலாவின் வாழ்க்கை பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்துள்ளது.

**ஜமுனா கிருஷ்ணமூர்த்தி**



# ஓர் ஆர்வலரின் பார்வையில்

திருமதி நீலா சுப்ரமணியன் அவர்களையும் அவருடைய மற்ற உறவினர்களையும், அவர்களுடைய தூரத்து உறவினன், குடும்ப நண்பன் என்ற முறையில் நான் அறிவேன்.

அவருடன் பேசும் போது, அவர் மஹா பெரியவாளுடைய மேன்மை பற்றியும், தன்னுடைய அனுபவங்கள் பற்றியும், பலமுறை என்னிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறார். இவற்றை ஒரு புத்தக வடிவில் வெளியிட்டால் ஆஸ்திக மக்கள் பயனடையவார்களே என்று நான் அவரை வேண்டியிருக்கிறேன். ஆனால், தன்னை நடுநாயகமாக வைத்து ஒரு புத்தகம் வெளியிடுவதில் அவருக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்றும் உணர்ந்தேன்.

அவர் மறைவுக்குப்பின், ஒரு நோட்புக்கில் தேதிவாரியாக (நிகழ்ச்சிகள் நடந்த தேதியல்ல, எழுதிய தேதி) அவர் தன் சில அனுபவங்களைப்பற்றி எழுதியிருப்பது தெரிந்து அளவில்லா மகிழ்ச்சியடைந்தேன். மஹா பெரியவாள் அருளினாலேயே எழுதப்பெற்று, அவர் அருளினாலேயே இப்புத்தகம் வெளிவருவதும் மிகப்பொருத்தமே!

மஹா பெரியவாளுடன் தங்களுக்கு ஏற்பட்ட சந்திப்பு, உரையாடல்கள், வியத்தகு நிகழ்ச்சிகள் என்று பலரும் தெரிவித்துள்ள கணக்கிலா சம்பவங்கள் எற்கனவே பல புத்தகங்களில் வெளிவந்துள்ளன. ஆனால் இந்த நூல் அவற்றிலிருந்து வேறுபட்டது. இதன் தனிச்சிறப்புகள் என்று எனக்கு தோன்றுவது;

1. ஒற்றை நிகழ்ச்சி/அனுபவம் என்று அமையாமல் ஏறத்தாழ 50 ஆண்டுகள் மஹா பெரியவாள் அண்மையில் இருந்து அருள்பெற்ற ஒருவரின் அனுபவங்கள் என்ற முறையில் இது மஹா பெரியவாளின் பல்வேறு குணாதிசயங்களை- அவருடைய கருணை, சௌலப்யம், அவர் திருவுள்ளத்தால் நடத்திவைத்த பல அற்புத நிகழ்ச்சிகள், அவருடைய நகைச்சுவை உணர்வு, ஸாமான்ய மனிதர்களிடம்-ஏன் மிருகங்களிடம் கூட-அவர் காட்டிய தயை, இந்நூலில் எங்கும் காணமுடிகிறது. எனவே இதை மஹா பெரியவாளைப்பற்றிய மற்றொரு நூல் என்றே எடுத்துக்கொள்ளலாம்.

2. அலங்காரம் இல்லாத, எளிய, தெளிந்த தமிழ்நடையில் திருமதி நீலா எழுதியுள்ள விஷயங்கள் நம் இதயத்தைத் தொடுகின்றன.

3. திருமதி நீலாவின் அபாரமான குருபக்தியும் அதை உணர்ந்து அவருக்கு விஸேஷமாக அருள்செய்த மஹா பெரியவாளின் கருணையும் இந்நூலின் முக்கிய அம்சங்களாகும். அவர் சொன்ன வழிமுறைகளை அப்படியே சிறிதும் பிறழாமல் கடைப்பிடித்த திருமதி நீலா ஓர் ஆதர்ஸ சிஷ்யை. "நான் சொன்னதைத்தானே செய்தாய் அதன் பலாபலன்களை என்னிடமே விட்டுவிடு கவலைப்படாதே" என்று மஹா பெரியவாளே அவரிடம் ஓரிடத்தில் சொல்கிறார்.

4. திருமதி நீலாவுக்கு பூஜா விக்ரஹங்களைத் தங்கத்தாம்பாளத்தில் ஒவ்வொன்றாக வைத்துக்கொடுத்து உனக்கு தெரிந்தமாதிரி பூஜை செய்து வா என்று அருளியது, அவர் வீட்டுக்கு அறிவிப்பின்றி விஜயம் செய்து அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது, அவரை பூஜை சமயம் முழுவதும் வீணை வாசிக்கச்சொல்லி அவரை ஸ்ரீமடத்தின் விதூஷி போலவே நடத்தியது, அவருக்கு மந்திரோபதேசம் செய்தது என்று எண்ணற்ற நிகழ்ச்சிகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

5. "நான் தான் சந்திரமௌலீஸ்வரர். நான்தான் திரிபுரசுந்தரி. எனக்கு வாசியேன்" என்று தான் தெய்வத்தின் அவதாரமே என்பதையும் ஓரிடத்தில் மஹா பெரியவாள் வெளிப்படுத்திவிடுகிறார்.

பால் பிரண்டனுக்கு ஸ்ரீ இரமண மஹரிஷி அருள் செய்தது போல் திருமதி நீலா அவர்களுக்கும் மஹா பெரியவாள் அருள் பாலித்தார் என்பது இந்நூல் மூலம் நன்கு விளங்குகிறது. ஆஸ்திக ஜனங்கள் மீண்டும் மீண்டும் படித்து இன்புறத்தக்கது இப்புத்தகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**P.S. சந்திரசேகரன்**



# நான் கண்ட பூஜ்ய ஸ்ரீ மஹா பெரியவாள்

உலக வாழ்க்கை என்பது மஹா பெரிய சோதனை. அதில் நீந்தி வெளியேறுவது என்பது ரொம்ப கஷ்டம். அது கோடியில் ஒருத்தருக்குத்தான் ஸித்திக்கும். அந்த ஸித்தி கிடைப்பதற்கு குரு ப்ரஸாதம் கட்டாயம் இருக்க வேண்டும். ஜென்மாந்தரபாக்யத்தால் மஹா பெரியவாள் அநுக்ரஹம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதை சரியாக அனுசரித்து குருப்ரஸாதம் கிடைக்க வேண்டும். நான் மஹா பெரியாவாளைப் ப்ரார்த்தித்துக்கொண்டு ஏதோ எனக்குக்கிடைத்த அநுக்ரஹங்களை எழுதிப்பார்க்கிறேன். அதற்கும் மஹா பெரியவாளைப் ப்ரார்த்திக்கிறேன். 1952லிருந்து காஞ்சிபுரம் போய் ஸ்ரீபெரியவாளை தரிசித்து வருவேன். அதற்கும் ஸ்ரீமஹாபெரியாள்தான் அநுக்கிரஹம் பண்ணினார்.

ஒரு நாள் சொப்பனத்தில் ஸ்ரீராமஜெயத்தை 2000 தரம் எழுது என்று ஸ்ரீ பெரியவாளுடைய படத்தை என்னிடம் கொடுத்தார். முழித்துக் கொண்டேன். உடனே அதேமாதிரியான படத்தை வாங்கி ஸ்வாமி பீரோவில் மாட்டினேன். ஒரு வருஷம் கழித்து காஞ்சிபுரம் போக நேர்ந்தது. மஹாபெரியவாளிடம் படத்தை எடுத்துக்கொண்டு வைத்து சொப்பனத்தைச் சொன்னேன். இப்படியே தினமும் ராமநாமம் எழுதிக்கொண்டுவா என்று சொன்னார்கள். அதிலிருந்து அடிக்கடி காஞ்சிபுரம் போக ஆரம்பித்தேன்.

1953ம் ஆண்டு மாமனார் காலம் முடிந்தது. என் மாமியார், வருஷம் ஆன பிறகு காஞ்சியிலேயே ஒரு ரூம் எடுத்துக்கொண்டு அங்கேயே இருந்தார். அதனால் வாரம் ஒருமுறை ஸ்ரீ மஹாபெரியவாள் தரிசனம் கிடைத்துக்கொண்டிருந்தது. எப்பொழுது போனாலும் குடும்ப விஷயங்களெல்லாம் ஸ்ரீ பெரியவாள் கேட்பார்கள். என் குடும்ப வாழ்க்கை திருப்தியில்லாததால் ஸ்ரீ பெரியவாள் கேட்டபோது எல்லா விஷயமும் சொன்னேன். எப்பொழுதும் "கோதாவரி ஓடம்" பாடிவிட்டு வருவேன். ஒருநாள் ஸ்ரீ மஹா பெரியவாள் அந்த ஓடத்தை மூன்று தரம் பாடச்சொன்னார்கள். பிறகு உள்ளே போய் என்னை இந்த ஓடம் யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று கேட்டார்கள். பாட்டி சொல்லிக் கொடுத்தார் என்று சொன்னேன். எத்தனை வயதிலிருந்து பாடுகிறாய் என்ற கேட்டார்கள் 8 வயதிலிருந்து பாடுகிறேன் என்று சொன்னேன். இந்தப் பாட்டின் அர்த்தம் தெரியுமா என்று கேட்டார்கள். சின்ன வயதிலிருந்து பாடுவதால்

அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளத் தோன்றவில்லை என்று சொன்னேன். இந்த ஓடம் 100 வருஷத்திற்கு முன்னால் என்குரு ராஜ மஹேந்த்ரபுரம் போனபோது ஒரு பாட்டி தானாகவே பாடினாராம் என்று சொல்லி அதில் சில தப்புகள் திருத்திக் கொடுத்து என் குடும்ப சமாச்சாரம் முழுக்கக் கேட்டார்கள். அப்பொழுது ராத்திரி 2 மணி. 9 மணியிலிருந்து இரண்டு மணிவரை எல்லாவற்றையும் கேட்டு விட்டு அகாலத்தில் ப்ரஸாதம் கொடுக்கக்கூடாது. நீ போய்ப்படுத்துக்கொள். காலையில் உன்னை கூப்பிட்டு அனுப்புகிறேன் என்று சொன்னார்.

அதிகாலை 5 மணிக்கு கூப்பிட்டு அனுப்பி மடத்திலிருக்கும் வீணையில் ஒரு பாட்டு வாசிக்கச் சொன்னார்கள். பிறகு கிட்ட வா என்று சொல்லி என்னை ஏற இறங்க மூன்று தரம் பார்த்துவிட்டு ஒருத்தரையும் குற்றம் சொல்ல வேண்டாம். உனக்கு வீணை இருக்கிறது. அப்பா சொல்லிக்கொடுத்த பாட்டு இருக்கிறது. ராம நாமம் இருக்கிறது. பாட்டைப்பாடிக்கொண்டு ராமநாமம் சொல்லிக் கொண்டு வீணையை வாசித்துக் கொண்டு இரு என்று சொல்லி ப்ரசாதம் கொடுத்து அனுப்பினார்கள். பரம சந்தோஷத்துடன் அவர் சொன்னபடி செய்து கொண்டிருக்கிறேன். பூர்ணத்வம் கிடைக்க அவரைப் ப்ராத்தித்துக்கொண்டிருக்கிறேன். இது தான் முதல் அனுபவம்.

ஒரு நாள் ஸ்ரீ பெரியவாள் காலையில் வீணையை எடுத்து வாசிக்கச் சொன்னார்கள். என் மாமியார், மடத்தில், 10 மாதம் தங்கியிருந்தார்கள். அதனால் நான் வாரம் ஒருமுறை அல்லது இரண்டு வாரத்துக்கு ஒருமுறை மடத்துக்குப்போவேன். மாமியாருக்கு சாமான் வாங்கி கொடுத்து செலவுக்கு பணம் கொடுத்து வருவேன். அதனால் அடிக்கடி மடத்துக்குப் போக சௌகர்யப்பட்டது. அப்பொழுது ஒருநாள் வீணை வாசித்துக்கொண்டிருக்கும் போது உங்கப்பா டூர் போன போது ஜலந்தரில் ஒரு ஸ்வாமி கீர்த்தனம் வாசித்து ஒரு வெள்ளைக்காரனை மயக்கினாராமே அந்தப்பாட்டை வாசி என்று சொன்னார்கள். நான் ராம நின்னே வாசித்தேன், முடித்த பிறகு இந்தப்பாட்டு இல்லை சாந்தமுலேக என்று சொன்னார்கள். அப்பாவை ஸ்ரீ பெரியவாளுக்கு சின்ன வயசிலே தெரியும். அப்பா காலேஜில் படித்துக்கொண்டு இருக்கும் போது ஒரு நாள் மடத்துக்கு போனார். ஸ்ரீ பெரியவாள் அப்பாவை ஒரு பாட்டு பாடச்சொன்னார். அப்பா குரு உத்தரவு இல்லாமல் பாடக்கூடாது; நான் ஆத்துக்குப்போய் அப்பாவைக் கேட்டுக்கொண்டு வருகிறேன் எனக்கூறி ஆத்துக்கு வந்து ஸ்ரீ பெரியவாள் பாடச்சொல்லுகிறார்கள் போய்ப் பாடட்டுமா என்று கேட்டாராம். எல்லாருக்கும் பெரிய குரு ஆச்சார்யாள். அவர் சொல்லும் போது இப்படிப்பாடாமல் வந்திருக்கிறாய் போய்ப் பாடு என்று கோபித்துக்கொண்டாராம். பிறகு பாடினாராம். இதை ஸ்ரீ மஹா பெரியவாள் ரொம்ப சந்தோஷப்பட்டு குரு பக்தியென்றால் இப்படி இருக்க வேண்டும் என்று சொல்லி



சந்தோஷப்பட்டாராம். தாத்தா காலமானபோது அப்பா காலேஜ் படிப்பு முடியவில்லை. பெரிய குடும்பம். அதனால் படிப்பை நிறுத்தி விட்டு ஏதாவது வேலைக்குப் போகலாம் என்று தீர்மானித்து ஸ்ரீ பெரியவாளிடம், என் தகப்பனார் காலமாய் விட்டதால் குடும்பத்தைக் காப்பாற்ற எங்களுக்கு சொத்து ஒன்றுமில்லை அதனால் நான் மெட்ராஸ் போய் ஏதாவது வேலை தேடிக்கொள்ளலாமென்று இருக்கிறேன். அதற்கு ஸ்ரீ பெரியவாள் அநுக்கிரஹம் பண்ணி உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டாராம். ஸ்ரீபெரியவாள் இன்னும் எத்தனை வருஷம் படிப்பு இருக்கிறதென்று கேட்டாராம். இதுதான் கடைசி வருஷம் என்று அப்பா சொன்னாராம். இந்த ஒரு வருஷப்படிப்புக்கு நான் பணம் தருகிறேன். நீ படிப்பை முடித்து விட்டு வேலைக்குப் போ என்று சொல்லி ஒரு வருஷப்படிப்புக்கு மாதா மாதம் காலேஜ் சம்பளம் கொடுத்தாராம். அப்பொழுது காலேஜ் சம்பளம் 5 ரூபாய். அதுகூட அப்பாவால் கொடுக்க முடியவில்லையாம், பிறகு படிப்பு முடிந்ததும் ஸ்ரீ பெரியவாள் ப்ரசாதம் கொடுத்து வேலைக்குப்போக உத்தரவு கொடுத்து மெட்ராஸ் வேலையில் சேர்ந்து குடும்பத்தைக் காப்பாற்ற ஆரம்பித்த பிறகு ஸ்ரீ பெரியவாளை தரிசிக்கப் போகவே முடியவில்லையாம். 1932-33ல் ஸ்ரீ பெரியவாள் காசிக்குப்போயிருந்த போது அப்பா கோட்டு வாத்தியத்தையும் எடுத்துக்கொண்டு போய் தரிசித்து வந்தனம் பண்ணி வாத்தியம் வாசித்து வெள்ளைக்காரனை மயக்கியதை பற்றி சொன்னாராம். அதை நான் 54ல் வீணை வாசித்தபோது சொல்லி அந்த பாட்டை வாசிக்கச்சொல்லி இந்த விஷயத்தைச் சொன்னார்கள். அப்பா எத்தனையோ தடவை இதை ஆத்தில் சொல்லியிருக்கிறார். ஆனால் எனக்கு மறந்து போய்விட்டது. எப்பவோ சில மணி நேரம் பேசி வாசித்ததை இப்பொழுது ஸ்ரீ பெரியவாள் சொன்னார்கள்.

குரு சரித்திரம் என்று ஒரு புஸ்தகம் நரஸிம்மஸரஸ்வதி என்னும் குருவின் மஹிமை, அதைப்படித்தால் புத்ரபாக்யம் உண்டாகும் என்று ஸப்தாஹம் படிக்க ஒருவர் கொடுத்தார்.

நான் ஸப்தாஹம் படித்து முடித்தேன். மாமனார் காலமான பிறகு ஸ்வாமிக்கு பூஜை இல்லை. ஒரு சின்னப் பெட்டியில் ஸ்வாமியை அலமாரியில் வைத்திருப்பார்கள். ஸ்வாமியை எல்லாம் மடத்தில் கொடுத்து விடலாமென்று என் மாமியார் ஸ்ரீபெரியவாளிடம் சொன்னராம். நீலாவை ஸ்வாமியை எடுத்து வரச்சொல்லு என்று ஸ்ரீ பெரியவாள் சொன்னார். அதை என் மாமியார் எனக்குக் கடிதம் எழுதினார். ஸப்தாஹம் முடிந்த பிறகு இந்தக்கடிதத்தையும் மறுநாள் காலை, ஸ்வாமியையும் எடுத்துக்கொண்டு போனேன். ஸ்ரீ பெரியவாள் பூஜையில் உட்கார்ந்திருந்தார்கள் பூஜையைக் கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார்கள் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னேன். உள்ளே கொண்டு வா என்று சொன்னார்கள் பூஜைப் பெட்டியை ஒரு ஸ்டூலில் வைத்தேன். ஒவ்வொரு ஸ்வாமியாக எடுத்துப்பார்த்து தங்கத்தாம்பாளத்தில் வைத்து இந்தா எடுத்துக்கொள் என்று சொன்னார்கள் நான் எதிர்பார்க்கவேயில்லை.

மாமியாரிடம் கொடுப்பார் என்று நினைத்தேன். மாமியார் பரிவாரத்தோடு வைப்பார் என்று நினைத்தார். ஆனால் என்னிடம் கொடுத்தார். எனக்குப் பூஜாவிதியே தெரியாதே ஸ்லோகம் தான் தெரியும். எப்படி பூஜை செய்வது என்று கேட்டேன். உனக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறதோ அப்படியே செய். மந்தரமாத்ருகா புஷ்பமாலா சொல்லி அபிஷேகம் பண்ணு லலிதா அஷ்டோத்ரம் பண்ணி நைவேத்யம் செய்து கற்பூரஹாரத்தி பண்ணு என்று தட்டோடு என்னிடம் கொடுத்தார்கள். ஸ்ரீ பெரியவாளே ப்ராணப் ப்ரதிஷ்டை செய்து கொடுத்தார்கள். ஸ்வாமியை பெட்டியில் வைத்து தட்டை கொடுத்து விட்டு பரம சந்தோஷத்துடன் வந்தேன். அதிலிருந்து தினமும் பூஜை செய்து கொண்டிருந்தேன். எப்பொழுது மடத்துக்குப் போகும் பொழுதும் ஸ்ரீ பெரியவாள் பூஜையை பற்றிக்கேட்டு அதோடு கூட இன்னும் சில அஷ்டோத்தரம் லலிதாஸஹஸ்ர நாமமும் சேர்த்து அர்ச்சனை பண்ணச் சொன்னார்கள். வெள்ளிக்கிழமை லலிதாஸஹஸ்ர குங்கும அர்ச்சனையும் பூவில் தருசதியும் பண்ணி பாயஸம், வடை பண்ணி நைவேத்ய கற்பூர ஆரத்தி பண்ணச்சொன்னார்கள். உனக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் செய் என்று சொன்னார்கள். அப்படியே பண்ணிக் கொண்டு வந்தேன்.

அப்பா காசியில் ஸ்ரீ பெரியவாளைத்தரிசனம் பண்ணின பிறகு தரிசனமே பண்ண முடியவில்லை. அப்பா ரிடையர் ஆய் மெட்ராஸ் வந்துவிட்டார். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் கபிஸ்தலத்தில் இருந்தார்கள். என் நாத்தனார் ஒருநாள் அப்பாவிடம் கபிஸ்தலம் போய் ஸ்ரீ பெரியாளைத்தரிசனம் பண்ண போவதாகச் சொன்னார். "நானும் வருகிறேன் காசியில் தரிசனம் பண்ணின பிறகு பண்ணவேயில்லை" என்று சொல்லி அப்பாவும் கபிஸ்தலம் போனார். ஸ்ரீ பெரியவாள் அப்பாவை எல்லா சமாசாரங்களும் விசாரித்துவிட்டு "நீ படிக்கும் போது உனக்கு ஒரு வருஷம் நான் காலேஜ் சம்பளம் கொடுத்தேனே அதை நீ எனக்குத் திருப்பிக்கொடுத்தாயா" என்று கேட்டார்கள், அப்பாவுக்கு ஒரே அதிர்ச்சியாய் விட்டது. ஸ்ரீ பெரியவாளை வந்தனம் பண்ணி "நான் ரொம்பத் தவறு செய்து விட்டேன் எனக்குத் தோன்றவேயில்லை. தயவு செய்து ஸ்ரீ பெரியவாள் மன்னித்து எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கொடுத்துவிடுகிறேன்" என்று சொன்னார். அதற்கு ஸ்ரீ பெரியவாள் சிரித்துக்கொண்டே "நீ ஒன்றும் எனக்கு நிறைய கொடுக்க வேண்டாம். நான் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடு. மாதம் 5 ரூபாய் 10 மாதம் கொடுத்துவிடு" என்றாராம். அப்பா இருக்கும் வரை மாதம் என்னிடம் 5 ரூபாய் கொடுப்பார். அதை மடத்தில் கட்டுவேன். சாயந்திரம் மடத்தில் தினம் தீ வட்டி ஸலாம் நடக்கும். நான்கு விளக்கேற்றி யானை வந்து ஸலாம் செய்யும். அன்று வந்த வஸூலை ஆச்சார்யாளுக்கு படித்து, வரும்படிக் கணக்கு சொல்லுவார்கள். அதில் இந்தப்பணத்தையும் கணக்கு சொல்லுவார்கள். அப்பா காலத்திற்குப் பிறகு கார்த்திகேயன் மெட்ராஸில்



இருந்த வரைக்கும் மாதம் என்னிடம் பணம் கொடுப்பான். நான் மடத்தில் கட்டுவேன். "அவன் அப்பாவுக்கு நான் 10 மாதம் காலேஜுக்குப் பணம் கொடுத்தேன். அவன் அப்பா மாதம் 5 ரூ கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் காலமான பிறகு இவளுடைய தம்பி அந்தப்பணத்தை இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறான்" என்று ஸ்ரீ பெரியவாள் அடிக்கடி சொல்லி சந்தோஷப்படுவார். கார்த்திகேயன் லண்டன் போகும்போது என்னிடம் 1000 ரூ கொடுத்து லண்டனிலிருந்து மாதா மாதம் அனுப்ப முடியாது அதனால் இதை ஸ்ரீ பெரியவாளிடம் சொல்லி பணத்தை சமர்ப்பித்து விடு என்று சொன்னான். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் நாகலாபுரம் என்னும் ஊரில் இருந்தார். அங்குபோய் இந்தப் பணத்தை சமர்ப்பித்தேன். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் அப்பாடி இப்பொழுது ஒரு அவசர தர்மத்துக்கு 1000ரூ வேண்டுமே யார் கொடுப்பார்கள் என்று நினைத்துக் கொண்டேயிருந்தேன் நல்ல வேளை நீ கொண்டு வந்தாய் என்று சொல்லி வாங்கி அந்த தர்மத்திற்கு கொடுத்தார். இப்பொழுதும் கார்த்திகேயன் மடத்துக்குச் செய்து கொண்டிருக்கிறான்.

மெட்ராஸில் எல்லாருமாகச் சேர்ந்து போய் கமிட்டிக்காரர்கள் ஸ்ரீ பெரியவாள் மெட்ராஸ் வரவேண்டு மென்று ரொம்ப வேண்டி வந்தார்கள். காஞ்சிபுரத்திலிருந்து நடந்து வந்தார்கள். என் மாமியார், இன்னும்பல பேர் கூட நடந்து வந்தார்கள்.

ஸ்ரீ பெரியவாள் சிவா விஷ்ணு கோவிலில் வந்து இறங்கினார்கள். அங்கு எல்லாருக்கும் தரிசனம் கொடுத்து பூஜைகளை முடித்துக்கொண்டு சாயந்திரம் ஸம்ஸ்க்ருத காலேஜ் கிளம்பினார்கள். என்னை வீணையை ஸம்ஸ்க்ருத காலேஜுக்கு கொண்டுவரச்சொல்லி கண்ணனிடம் சொல்லி அனுப்பினார்கள். கோவிலில் ஏகப்பட்ட கூட்டம். ஸ்ரீ பெரியவாள் மேனாவில் ஏறிக்கொண்டு வரப்போவதாகவும் எந்த வழியாக வருவாரென்று தெரியாது என்றும் சொன்னார்கள். உஸ்மான் ரோடோடு வந்தால் நம்மாத்து சந்து முனையில் பூர்ணகும்ப ஆரத்தி எடுக்க புக்காத்து மாமாவிடம் பூர்ண கும்பத்தைக்கொடுத்து நான் ஆரத்திதட்டு வைத்துக்கொண்டு மங்கையர் தெருதாண்டி நின்று சொண்டிருந்தேன். வாலன்டியர் எல்லாரும் கையைக் கோத்துக்கொண்டு மேனாவை சுற்றி ஓடி வந்தார்கள். போலீஸ், ஜனங்கள் பறந்து கொண்டு மேனா வருகிறது உள்ளே நுழைய முடியாது, கூட்டம். நான் எதிர்கொண்டு ஓடிப்போய் ஹர ஹர சங்கர என்று கத்திக்கொண்டு நுழைந்து விட்டேன். ஓடினேன். ஸ்ரீ பெரியவாள் மேனாவிடம் ஓடிப்போய்விட்டேன். மயிரிழை தப்பினால் நசுங்கி விழ வேண்டியது. எப்படி ஓடினேன் என்றே தெரியவில்லை மேனா கிட்ட வந்ததும் ஸ்ரீ பெரியவாள் என் கையிலிருந்த ஆரத்தி தட்டை வாங்கிக்கொண்டார்கள். மேனா நின்றுவிட்டது. எல்லாரும் திகைத்து விட்டார்கள். எல்லாரும் நிற்க

வேண்டியதாய் ஆய்விட்டது. ஸ்ரீ பெரியவாள் கையிலேயே ஆரத்தி ஏத்தி வாங்கி ஆரத்தி எடுத்துவிட்டேன். ஸ்ரீ பெரியவாள் சிரித்தார்கள். நானும் சிரித்துக்கொண்டு பரம சந்தோஷத்தோடு வெளியில் வந்துவிட்டேன். என்ன தைரியம்? இந்த வேகக்கூட்டத்தில் இப்படி நுழைந்தீர்கள் என்று மாமா கேட்டார். "நான் நுழையவில்லை. ஸ்ரீ பெரியவாள் என் ஆரத்தியை ஏற்றுக் கொண்டார்கள். அதனால் தான் முடிந்தது" என்று சொன்னேன். இந்த நிகழ்ச்சி எனக்கு என்றைக்கும் மறக்கவே மறக்காது. மேனா போய் ஹிண்டு ஆபீஸில் தங்கி யானை குதிரை மரியாதையோடு ராத்திரி 12 மணிக்கு ஸம்ஸ்க்ருத காலேஜ் போய் சேர்ந்தார்கள். பிறகு நாங்கள் ஆத்துக்கு வந்தோம். மறுநாள் என் வீணையை எடுத்துக்கொண்டு போனேன். உள்ளே வைக்கச் சொன்னார்கள். பூஜை ஆரம்பித்ததும் வீணை வாசிக்க ஆரம்பித்து ஸ்வாமிக்குப்படுதா போடும் வரை வாசித்துவிட்டு வீணையை அங்கேயே வைத்துவிட்டு வந்தேன். அதன்பிறகு 4 வருஷம் ஸ்ரீ பெரியவாள் மெட்ராஸ் முழுக்கச் சுற்றி காஞ்சீபுரம் போகும் வரையில் தினமும் வாசித்து படுதா போட்ட பிறகு ஆத்துக்கு வருவேன். யாராவது ஆத்துக்குக் கொண்டு வந்து விடுவார்கள். இது மனுஷப் ப்ரயத்னத்தில் நடக்காது. ஸ்ரீ பெரியவாள் நினைத்ததால் தான் நடந்தது.

தினமும் காலையில் பூஜைக்குப் போவோம். பூஜை முடிந்து தீர்த்தம் வாங்கிக்கொண்டு ஆத்துக்கு வந்து சாப்பிட்டு மீதிக்காரியங்களை முடித்துக்கொண்டு சாயந்திரம் மறுபடியும் போய் வீணை வாசித்து விட்டு வருவேன் மாமியாரும் கூட வருவார்கள். மடத்துப் பசங்கள் பாதிப்பேர் நம்மாத்தில் காபி சாப்பாடு சாப்பிடுவார்கள்.

வெள்ளிக்கிழமை, பௌர்ணமி, ப்ரதோஷ தினங்களில் ராத்திரி பூஜை ஆனதும் ஸ்ரீ பெரியவாள், ஸ்வாமி ஊஞ்சல் ஆட்டி ஓடம் பாடச் சொல்லுவார். அதிலிருந்து பாடிக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பெரியவாள் அந்த ஓடத்துக்கு அவ்வளவு முக்யத்வம் கொடுப்பதைப் பார்த்து இந்த ஓடத்தை நோட்டீஸ் மாதிரி ப்ரிண்ட் பண்ணி எல்லாருக்கும் கொடுப்பதாக டாக்டர் சேஷாத்ரிநாதன் ஆத்துமாமி ஸ்ரீ பெரியவாளைக்கேட்டார். அதற்கு ஸ்ரீ பெரியவாள் நோட்டீஸ் போடக்கூடாது. யாருக்கு வேண்டுமோ அவர்கள் நீலாவை சொல்லச்சொல்லி எழுதி வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார். யாருக்கு வேண்டுமென்று தோன்றியதோ அவர்கள் எழுதி வாங்கிக்கொண்டார்கள். நான் கோதாவரி ஓடம் பாடினால் எல்லாரும் என் பின்னால் பாடுவார்கள். அதனால் ஸ்ரீ பெரியவாள் என்னை கோதாவரி என்றே கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சில்பி என்று சித்திரம் எழுதுபவர் ஸம்ஸ்க்ருத காலேஜில் ஸ்ரீ பெரியவாள் பூஜை பண்ணுவது போல் படம் எழுதினார். ராத்திரி 9 மணிக்குமேல் தான் எழுதுவார். முதலில் விமானம் ஸ்வாமி அலங்காரம் எல்லாம் மூன்று நாள் எழுதினார். ஜனங்கள் இரைச்சல் அலைச்சலில் எழுத முடியாததால் 9 மணிக்கு எழுதுவார். அந்த சமயம் பாராவைத் தவிர யாரும் இருக்க மாட்டார்கள். ஸ்வாமி சன்னதியில் சும்மா இருக்கக்கூடாது என்று என்னை வீணை வாசிக்கச் சொல்லுவார். அவர் 11 மணிவரை எழுதுவார். அதுவரை நானும் வீணை வாசித்துக்கொண்டிருப்பேன். 4வது நாள் ஸ்ரீ பெரியவாள் பூஜை பண்ணும் போது ரொம்பக்கூட்டம் கிட்டத்தில் வராமல் பார்த்துக்கொண்டு ஸ்ரீ பெரியவாளையும் எழுதினார் அன்றும் வாசித்தேன். நாலு நாளும், எழுதி முடிந்த பிறகு ஸ்வாமிக்கு படுதா போட்டுவிட்டு ஆத்துக்குப் போவோம் என் மாமியாரும் நானும். அதற்குபிறகு யாராவது துணையுடன் ஸ்ரீபெரியவாள் அனுப்புவார். எத்தனையோ வீணைவித்வான்கள் இருந்தும் சாதாரண வீணை வாசிக்கும் எனக்கு இந்த பாக்கியம் கிடைத்தது, எனக்கு ரொம்ப சந்தோஷம். தியாகராஜ ஸ்வாமி சிஷ்ய பரம்பரையில் பிறந்ததால் தான் எனக்கு இந்த பாக்யங்கள் கிடைத்தன.

என் மாமியாருக்கு நான் ரேடியோவில் வாசிக்க வேண்டும். ப்ரபலமாக வரவேண்டுமென்று ரொம்ப ஆசை இரண்டு தடவை ரேடியோ சான்ஸும் கிடைத்தது. அதை ஸ்ரீ பெரியவாளிடம் சொல்லி அனுக்ரஹம் பண்ணச் சொன்னார்.

ஆனால் ஸ்ரீ பெரியவாள் கச்சேரி பண்ணவும் ரேடியோவில் வாசிக்கவும் வேண்டிய பேர் இருக்கிறார்கள். அவள் வீணை பாட்டை அம்பாளுக்கு அர்ப்பணம் பண்ணட்டும் என்று சொல்லிவிட்டார்.

அம்பாளுக்கு வீணாநாதம் ரொம்ப ப்ரியம் எப்பொழுதும் அவளுக்கு வீணாநாதம் கேட்டுக்கொண்டே யிருக்க வேண்டும் என்று சொல்லுவார். அதிலிருந்து தினமும் நானும் ஆத்தில் மற்ற பொழுது வாசிப்பதைத்தவிர காலையில் பூபாளம், பௌளியும் ராத்திரி நீலாம்பரி, மங்களமும் தினமும் வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

சாதாரணமாக ஸ்ரீ பெரியவாள் என்னுடன் நிறைய நேரம்பேசுவார்கள். ஆனால் பேசுவது ஸங்கீதம், ஆன்மீகம். பலபாட்டுகளுக்கு, ஸ்வாமி கீர்த்தனங்களுக்கு அர்த்தம், பொருளடக்கம் எல்லாம் சொல்லுவார். மடத்தில் பூர்வாச்ரமத்தில் ஆஞ்சனேயலு என்று ஒரு தெலுங்கு ப்ராமணர் மடத்தில் ஸ்ரீ பெரியவாளுக்கு கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். ரொம்பப்படித்தவர். அவர் மடத்திலேயே ஸன்னியாஸம் வாங்கிக்கொண்டு மடத்திலேயே இருந்தார். அவரையும் வைத்து பல பாட்டுக்களுக்கு ஸ்ரீ பெரியவாள் அர்த்தம் சொல்லுவார். அந்த ஸ்வாமிகள், "உனக்கு ரொம்ப அதிர்ஷ்டம், இவ்வளவு விவரமாக ஸ்ரீ பெரியவாள் சொல்லுகிறார். மனஸில் படியவைத்துக்கொள்" என்று, சொல்லுவார். ஆனால் சொல்லும்போது நன்றாக புரியும். அவ்வப்பொழுதே அதை எழுதி

வைத்திருந்து படித்துக் கொண்டேயிருந்தால். இப்பொழுது ரொம்ப உபயோகமாயிருக்கும். அப்பொழுது செய்யத்தெரியவில்லையே என்று இப்பொழுது வருந்துகிறேன்.

ஒரு சமயம் ஸ்ரீ பெரியவாள் ஸங்கீதத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது தியரி பற்றி எல்லாம் கேட்டார். மேளராகங்களை எப்படி கண்டுபிடிப்பாய் என்று கேட்டார். கடபயாதி சங்க்யை மூலம் கண்டுபிடிப்பேன் என்று சொன்னேன். மேளராகங்களை கண்டு பிடிக்க கல்யாணி எத்தனாவது என்று கேட்டார். மேள ராகத்தில் கல்யாணிக்கு மேச கல்யாணி என்று சொல்ல வேண்டும்.

க க$^{2}$ க$^{3}$ க$^{4}$ ங, ச ச$^{2}$ ஜ$^{3}$ ஜ$^{4}$ ஞ

ட ட$^{2}$ ட$^{3}$ ட$^{4}$ ண, த த$^{2}$ த$^{3}$ த$^{4}$ ன

ப ப$^{2}$ ப$^{3}$ ப$^{4}$ ம ய ர ல வ ஷ ஸ ஷ ஹ என்று வரும் அதில் ப$^{4}$ முடிந்து ம ஐந்தாவதாக வரும். ச 6வது எழுத்து.

மே என்பதற்கு ம 5வது, ச முதல். ஆனால் எல்லாம் மறந்து விட்டது என்பதை எடுத்து சொல்லத்தெரியாமல் முழித்தேன். ஸ்ரீபெரியவாள் ஓஹோ எங்கள் வேதத்தில் கடபயாதி சங்க்யை உண்டு உங்க ஸங்கீதத்திலும் உண்டா என்று ஒன்றும் தெரியாது போல் இந்த கேள்வி கேட்பதற்கு முன்னாலே கேட்டார். அது எனக்கு ஓஹோ நமக்குக்கூட விஷங்கள் தெரிந்திருக்கிறதே என்று கர்வப்பட்டேன். அதற்குத் தான் மண்டையில் ஒரு அடி கொடுத்தார். பதில் சொல்லத்தெரியாமல் முழித்தேன். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் ம ஐந்தாவது எழுத்து ச 6வது எழுத்து மே, ச, 5 6 அதை திருப்பிப்போட்டால் 65 என்று சொல்லிக் கொடுத்தார்.

உடனே நான் ஸ்ரீ பெரியவாளை நமஸ்காரம் பண்ணினேன். எனக்கும் விஷயங்கள் தெரிகிறது என்னும் எண்ணம் வந்தது தப்பு ஸ்ரீ பெரியவாள் மன்னிக்கவேண்டும் என்று வேதனையோடு சொன்னேன். பரவாயில்லை மறந்து போவது சகஜம் என்று ஸ்ரீ பெரியவாள் சொன்னார்கள். அதிலிருந்து ஏதாவது கேள்வி கேட்டால் தெரிந்தாலும் தெரியாது என்று சொல்லிவிடுவேன்.

ஒரு ஓதுவார் வந்தார் அப்போது நானும் அங்கு இருந்தேன். ஓதுவாருடன் பேசிக்கொண்டிருக்கும்போது தோடுடைய செவியன் உனக்குத் தெரியுமா சொல்லு என்றார்கள் அப்பா பாடிப்பாடி எனக்கு மனப்பாடம். ஆனால் தெரியாது என்று சொல்லிவிட்டேன். ஓதுவாரைப் பாடச்சொன்னார். எனக்குத்தெரியும் என்று அப்புறம் சொன்னேன். ஏன் தெரியாது என்று சொன்னாய் என்று கேட்டார். தப்பாகப் போய் விடுமோ என்ற பயமாயிருந்தது என்று சொன்னேன். தெரிந்ததை பயப்படாமல் சொல்லு எல்லாமே தெரிந்திருக்க முடியாது என்று சொன்னார். கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பதை நினைத்துக்கொண்டேன்.



ஒருநாள் ஸ்ரீ பெரியவாள் மூக பஞ்ச சதி ராகம் போட்டு பாடேன் என்று சொன்னார் மூகபஞ்ச சதி 500 ஸ்லோகங்கள். ஒரு ஊமை காமாட்சி அம்மன் கோயில் ப்ராகாரத்தில் இருந்து கொண்டு கோயிலை பெருக்குவது, யாராவது சொன்னால் செய்வது, கோயில் நைவேத்யம் பண்ணின ஆகாரங்கள் சாப்பிடுவது என்று இருந்தாராம். காமா□ அம்மன்மேல் பரமபக்தி. ஒருநாள் அம்பாள் ஸ்வப்பனத்தில் வந்து தன் வாயில் இருந்த தாம்பூலத்தை அவனுக்கு கொடுத்தாளாம். அதை சாப்பிட்டானாம். உடனே முழித்துக்கொண்டு விட்டான். அவனுக்கு வாய் பேச முடிந்ததும் கடல் மடை திறந்தாப்போல் இந்த 500 ஸ்லோகத்தையும் பாடினாராம். அம்பாள் ரொம்ப சந்தோஷமடைந்து உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றாளாம். இந்த வாய் மறுபடியும் பேசமுடியாமல் ஊமையாய் விடவேண்டும் என்று வேண்டினாராம். ஏன் பேச சக்தி வாய் வேண்டாமென்றாய் என்று அம்பாள் கேட்டாளாம் உன்னை ஸ்துதித்த வாயால் மற்றவரிடம் பேச விருப்பமில்லை. இந்த ச்லோகத்தை உள்ளேயே சொல்லிக்கொண்டு பரமானந்தமடைந்து கொண்டேருக்கிறேன் என்று சொன்னாராம். அம்பாள் அருளிய வாக்கு என்று ஸ்ரீ பெரியவாள் சொன்னார். தாளம் போட்டுப்பாட வேண்டுமா அல்லது சாதாரணமாக ராகத்துடன் பாடவேண்டுமா என்று கேட்டேன். ராகத்துடன் பாடு தாளம் வேண்டாம் என்று சொன்னார். என்ன ராகம் என்று கேட்டேன். ராகமாலிகையாக 6 ஸ்லோகத்திற்கு ஒரு ராகம் போடு என்று சொன்னார். அப்படியே 6 ஸ்லோகத்திற்கு ஒரு ராகமாக போட்டேன். ஸ்ரீ பெரியவாள் "என்றும் மனஸ்லயிக்க வேண்டும். எப்பொழுதும் தியானமாகவே இருக்க வேண்டும்" என்று சொல்லாமல் சொன்னதைப் போல் தோன்றிற்று பரம த்ருப்தியாக இருந்தது.

கொஞ்சநாள் (4 மாஸம்) ஸமஸ்க்ருத காலேஜில் இருந்து விட்டு பிறகு மாம்பலம் வந்தார்கள். மாம்பலத்தில் ஸ்டேஷன் பக்கத்தில் கல்யாணயாக் என்னும் இடத்தில் தங்கினார்கள். நம்பாத்துக்கு ரொம்ப பக்கம். அப்பொழுது நான் மாம்பலத்தில் இருந்தேன். மடத்தில் அப்பொழுது ராமசாமி ஸர்மா என்ற பெரிய வேதவித்வான். ஸ்ரீ புதுப்பெரியவாளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து கொண்டிருந்தார். அவர் வெளியில் எங்கும் சாப்பிட மாட்டார். எங்காவது வெளியூர் போனல் ஸ்வயம்பாகம் பண்ணிக் கொள்வார். அவரை நம்மாத்தில் சாப்பிட ஸ்ரீ பெரியவாள் எங்களிடம் சொன்னார். மாம்பலத்தில் மடம் இருந்தவரை 8 மாதம் அவர் நம்மாத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். காஞ்சிபுரத்திலிருந்து சில மாமிகளும் நம்மாத்திலேயே இருந்தார்கள். மடத்தில் ஸ்ரீ பெரியவாளுக்கு கைங்கர்யம் பண்ணும் பசங்களும் நம்மாத்தில் தான் இருந்தார்கள். சாப்பாடு, காபி, டிபன் என்று திமிலோகப்படும். அத்தனை வேலையிலும் நாங்களும் பூஜைக்குப் போய்த் தீர்த்தமும் வாங்கிக் கொண்டு எல்லாருமாக வந்து சாப்பிடுவோம். நான் நம்மாத்துக்கு ஸ்ரீ பெரியவாள் வரணும் என்று

கேட்டுகொண்டேன். மடம் வீடு எல்லாம் ஒன்றுதானே என்று ஸ்ரீ பெரியவாள் சொல்லுவார். என் நாத்தனார் அப்பொழுது தஞ்சாவூரிலிருந்தார். எப்பொழுதும் போல் அப்போது அடிக்கடி வரமாட்டார். அவருக்கு பல விஷயங்கள் நன்றாகத் தெரியும். ஸ்ரீ பெரியவாள் வந்தால் அவரை எப்படி உபசரிப்பது எல்லாம் தெரியும். அதனால் அவரை மெட்ராஸ் வரச்சொல்லி யிருந்தேன். அக்கா, அத்திம்பேர் இரண்டு பேரும் வந்திருந்தார்கள். அப்பொழுது ஜெயராமையர் தஞ்சாவூரில் வேலையில் இருந்தார். ஸ்ரீ பெரியவாள் என்னிக்கு வருவாரென்று தெரியவில்லை. சாமான்கள் தேங்காய் பழம் மாலை எல்லாம் தயார் பண்ணி வைத்துக் கொண்டிருந்தோம். மடமும் உன் வீடு தான் தனியாக வீடு என்று வரவேண்டுமா என்று ஸ்ரீ பெரியவாள் சொன்னார். அதனால் சந்தேகம். வருவாரோ மாட்டாரோ என்று. மறுநாள் வெள்ளிக்கிழமை தை அமாவாசை, என் நாத்தனார் ஸ்ரீ பெரியவாள் வரமாட்டாரென்று தீர்மானித்து அத்திம்பேர் தர்ப்பணம் பண்ணிவிட்டு அவர்கள் இருவரும் வெளியில் போய் விட்டார்கள். ஸ்ரீ பெரியவாள் அமாவாசை ஸ்நானத்திற்கு நுங்கம்பாக்கம் நடந்து போய் விட்டார். என் மாமியார், பொன்னம்மா மாமி எல்லாரும் கூடப்போய் விட்டார்கள். நான் ஆத்தில் சமைத்துக் கொண்டிருந்தேன்.

அன்று அமாவசையானதால் நல்ல வேளையாக அத்திம்பேர் (அக்காவின் கணவர்) தர்ப்பணம் பண்ணிவிட்டு ஆத்தில் இருந்தார். ஸ்ரீ பெரியவாள் திரும்பி மாம்பலம் வரும்போது நீலாவாம் எங்கேடா இருக்கிறது என்று மடத்துப்பசங்களைக் கேட்டுக்கொண்டே வருகிறார். என் மாமியார் காதில் விழுந்து மாமியாரும், பொன்னம்மா மாமியும் ரிக்ஷா வைத்துக் கொண்டு வேகமாக வந்துவிட்டார்கள். என் அத்திம்பேர் வேலைக்காரனைக் கூப்பிட்டு வேகமாக அந்த சந்தைப் பெருக்கச்சொல்லிக் கொண்டிருக்கிறார். நல்ல வேளையாக பஞ்சக்கச்சவேஷ்டியோடு இருந்தார். கண்ணன், ராமமூர்த்தி இவர்கள் ஸ்ரீ பெரியவாளுக்கு வெளி விவகாரங்களில் கைங்கர்யம் செய்பவர்கள் அதில் கண்ணன் ஓட்டமாக ஓடிவந்து அத்திம்பேரிடம் இங்கு நிற்கிறீர்களே, வேகமாக ஸ்ரீ பெரியவாளை வரவேற்க ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். அதற்குள் ராமூர்த்தி ஓடிவந்து பூர்ண கும்பத்துக்கு தேங்காய் உரிக்கிறான். எல்லா சாமானும் எடுத்து வைத்து ஸ்ரீ பெரியவாளுக்காக ஒரு கம்பளி ஆஸனம் உல்லனில் போட்டிருந்தேன் அதையும் போட்டு ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் போதே வாசலில் ஸ்ரீ பெரியவாள் வந்து விட்டார். தேங்காய் உரிக்காவிட்டால் பரவாயில்லை என்று வாசலிலிருந்து ஸ்ரீ பெரியவாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பூர்ண கும்பம் ஆரத்தி தயார் பண்ணி, பூர்ண கும்பம் கொடுத்து ஆரத்தி என் சின்னமாமியாரும் நானும் எடுத்தோம். என் நாத்தனார் இல்லை. ஸ்ரீ பெரியவாள் உள்ளே வந்து ஆசனத்தின் மேல் நின்று கொண்டார். ஒன்றுமே



சொல்லத்தெரியவில்லை. இந்த சாமான்களெல்லாம் மடத்திற்கு சமர்ப்பணம்என்றும் சொல்லவில்லை. நான் பாட்டுக்கு ராராமாயிண்டி என்று பாடுகிறேன். என் மாமியார் ஆனந்தம் தாங்காமல் அழுகிறார். எல்லாரும் ஆனந்தத்தில் ப்ரமை பிடித்தாப்போல் நிற்கிறோம். பத்து நிமிஷம் இருந்துவிட்டு ஸ்ரீ பெரியவாள் கிளம்பினார். அவர்கூட நானும் மடத்துக்குப் போய்விட்டேன். சாமானெல்லாம் வைத்தபடி இருக்கிறது. நாத்தனார் அத்திம்பேர் மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கி வரும்போது யாரோ சிலர் ஒரு சிலர் ஸ்ரீ பெரியவாள் ஒரு பீச்சந்தில் நுழைந்து யாராத்துக்கோ போய் வருகிறார் என்று பேசிக்கொண்டு போனார்கள். அடாடா அந்த பீச்சந்து நம்மாம்தான் ஏமாந்து விட்டோமே என்று ஓடி வந்தார்கள். அதற்குள் ஸ்ரீ பெரியவாள் மடத்துக்குப்போய்விட்டார். நானும் ஆத்துக்கு வந்தேன். நான் வைத்த சாமான்களை கொடுக்கவில்லையாயென்று என் நாத்தனார் கேட்டார் நாங்கள் சொல்லவில்லை அதனால் அவர்கள் எடுத்துப்போவில்லை. எனக்கு ஒரே அழுகையாக வருகிறது என்ன பண்ணுதென்றே தெரியவில்லை. 100 ரூ. ஒரு ரூபாயாக மாற்றி ரோஜா புஷ்பத்துடன் வைத்திருக்கிறேன். அதையும் ஸ்ரீ பெரியவாள் சரணத்தில் போடவில்லை. வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். ராமசாமி சர்மா ஒரு மணிக்கு சாப்பிட வந்தார். காலை 8 மணிக்கு வைத்தது. அப்படியே இருந்தது. அவரிடம் எல்லா விஷயங்களையும் சொல்லி இந்த சாமான் எல்லாம் மடத்திற்கு சேர்த்துவிட்டு ஸ்ரீ பெரியாவாள் சரணத்தில் புஷ்பம் போட்பிறகுதான் நீலா சாப்பிடுவாள் ஸ்ரீ பெரியவாளிடம் சொல்லுங்கள் என்று மாமியார் சொல்லியனுப்பினார். ஸ்ரீ பெரியவாள் பூஜை ஆனபின் பிட்சை பண்ணி விச்ராந்தி பண்ணிக்கொண்டு இருந்தார்கள். 4 மணிக்கு ஸ்ரீ பெரியவாள் வெளியில் வந்ததும் ராமசாமி சர்மா சொல்லி, அவள் இன்னும் சாப்பிடவில்லையா எடுத்து வரச்சொல் என்று சொன்னதும் இவைகளை ரிக்ஷாவில் வைத்து எடுத்துக்கொண்டு போய் ஸ்ரீ பெரியவாளிடம் வைத்து சரணத்தில் பணம் புஷ்பம் எல்லாம்போட்டு பிறகு வந்து சாப்பிட்டேன். எல்லாம் என்னுடையது என்று நான் தான் சொன்னேனே என்று ஸ்ரீ பெரியவாள் சிரித்தார்கள் இது ஒரு அனுபவம்.

MSN's father

என் சித்தப்பா பெண் லலிதம் கல்யாணத்துக்கு முத்தப்பா என்ற இன்னொரு சித்தப்பா வந்திருந்தார். அவர் காலில் எக்ஸிமா வந்து ரொம்ப அவஸ்தைப்பட்டார். மெட்ராஸில்தான் கல்யாணம். ஸ்ரீ பெரியவாளும் மெட்ராஸில் இருந்தார். முத்தப்பா என்னிடம் என் கால் ரொம்ப அவஸ்தைப்படுத்துகிறது. ஸ்ரீ பெரியவாளிடம் சொல்லி எனக்கு ப்ரஸாதம் வாங்கிக்கொடு என்று சொன்னார். நீங்கள் ஒழுங்காக ஸந்தியா வந்தனம் பண்ணி காயத்ரி ஜபம் பண்ணுங்கள் தானே சரியாய் விடும் என்று நான் சொன்னேன். அதற்கு முத்தப்பா எனக்கு ஸஸந்தியா வந்தனத்தில் நம்பிக்கை இல்லை தினமும் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சுப்ரமண்ய புஜங்கம் எல்லாம்

பாராயணம் பண்ணுகிறேன் என்று சொன்னார். அது சரிதான். ஒரு இலை போட்டு பஞ்சபக்ஷ பரமான்னங்களை வைத்து சாப்பிடு என்று சொன்னால், சாப்பிடுபவர் இன்னும் சாதம் போடவில்லையே என்று தானே கேட்பார்கள். என்ன போட்டாலும் சாதம் முக்யமல்லவா அது மாதிரி ஒரு ப்ராமணனுக்கு ஸந்தியாவந்தனம் நித்யகர்மா. சாப்பிடுவது தூங்குவது வேலை செய்வது என்று மற்ற காரியங்களைப் போல அதுவும் ஒன்று. பலாபலன் எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும். அதைச் செய்யுங்கள் என்று சொன்னேன். எனக்கு அவசியமாகத் தோன்றவில்லை என்று முத்தப்பா சொன்னார். அது உங்கள் இஷ்டம். நான் ப்ரஸாதம் வாங்கித்தர மாட்டேன் என்று சொல்லி விட்டேன். கல்யாணம் முடிந்து ஊருக்குப் போய்விட்டார். பிறகு பல மாதங்கள் கழித்து முத்தப்பாவிடமிருந்து நான் ரொம்பக் கஷ்டப்பட்டுகிறேன் ஸ்ரீ பெரியவாளிடம் சொல்லி ப்ரஸாதம் வாங்கி அனுப்பு என்று கடிதம் வந்தது. அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் மெட்ராஸில் இல்லை. உடனே எனக்குப் போகமுடியில்லை. என்னிடம் இருந்த ப்ரஸாதத்தில் குங்கும் வீபூதி அக்ஷதை வைத்து உங்களை ஸ்ரீ பெரியவாள் ஸந்தியாவந்தனம் காயத்ரி ஜபம் பண்ண சொன்னார்கள் என்று நானே எழுதி ப்ரஸாதமும் அனுப்பினேன். என் கடிதம் முத்தப்பாவுக்குக் கிடைத்த அன்று அமாவசை. முத்தப்பா தர்ப்பணம் பண்ணுவார். ஆனால் ஸந்தியாவந்தனம் பண்ண மாட்டார். அன்று காலை எழுந்ததும் நீலு தான் ஸந்தியா வந்தனம் பண்ணு என்று ஓயாமல் சொல்லுகிறாளே பண்ணித்தான் பார்ப்போம் என்று நினைத்தார். ஆனால் ஸந்தியாவந்தனம் எப்படி பண்ணுகிறது என்றே தெரிய வில்லை. ஒரு சினேகிதர் வீட்டுக்குப் போய் அவரிடமிருந்து புஸ்தகம் வாங்கிக்கொண்டு வந்து ஸ்நானம் பண்ணி புஸ்தகத்தைப் பார்த்து ஸந்தியாவந்தனம் காயத்திரீ ஜபம், தர்ப்பணம் எல்லாம் பண்ணி சாப்பிட்டுவிட்டு ஆபீஸ் கிளம்பினாராம் அப்பொழுது என் கடிதம் கிடைத்தது. என் கடிதம் கிடைக்கும் முன்னாலே காலையிலே முத்தப்பாவுக்குத் தோன்றி செய்திருக்கிறார். அவருக்கு உணர்ச்சிவசமாக இருந்ததாம் ஸ்ரீ பெரியவாள் உத்தரவு தான் நம் மனதில் தோன்றியிருக்கிறது. என்று எனக்கு சந்தோஷமாகக் கடிதம் எழுதியிருந்தார். உடனே ஸந்தியாவந்தனம் பண்ணினால் நினைப்பதெல்லாம் நடக்குமா என்று கேள்வி வரும் மனிதன் செய்யும் புண்ய பாபங்கள் நல்லது கெட்டது எல்லாம் வரும். ப்ராமணனுடைய கடமை என்று பலா பலன் எதிர்பாக்காமல் பண்ண வேண்டும் நாளடைவில் முத்தப்பாவுக்கு கால் சரியாகிவிட்டது.

மாம்பலத்தில் ஸ்ரீ பெரியவாள் இருந்தவரை தினமும் சாயந்திரம் உபன்யாஸம் செய்வார். சில சமயம் பூஜைக்கு முன்னால் செய்வார். சில சமயம் பூஜை முடிந்த பிறகு செய்வார். ஒரு நாள் உபன்யாஸத்தில் ஸ்ரீ பெரியவாள் நீங்கள் எல்லோரும் என்னை வரவழைத்தீர்கள் நானும் தினம் உபன்யாஸம் செய்து கொண்டிருக்கிறேன். உங்களுக்கு நன்றாகப் பொழுது போகிறது. ஆனால் நான் சொல்வதை யாரும் கடைப்பிடிக்கவில்லை. நான் சொல்வதைக் கேட்பதாகச் சொன்னீர்கள். ஒருவரும் குடுமி வைத்துக் கொள்ளவில்லை. உச்சிக்குடுமியாவது வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். காலம் பல விதத்தில் மாறுகிறது. வயிற்றுப் பிழைப்புக்காக கட்டாயம் உத்யோகம் போக வேண்டியிருக்கிறது. வேஷம் போடவேண்டியிருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஆத்மாவுக்காக சிலகாரியங்கள் செய்து அது கடைத்தேற வேண்டி கட்டாயமாக இருக்கிறது. அது ஆசார அநுஷ்டானம். உச்சிக்குடுமி வைத்துக் கொண்டால் க்ராப்பு இருக்கும் மண்டையின் நடுவில் கொஞ்சம் முடிச்சுப்போடும் படியாக நாலு மயிர் இருக்கும். ஸந்தியாவந்தன காயத்ரி ஜபம் த்ரிகாலம் பண்ணி ரொம்ப மூக்கைப் பிடிக்காவிட்டாலும் 32 காயத்ரி பண்ணுங்கள் என்று சொன்னேன். ஒருவரும் கடைப் பிடிப்பதாக எனக்குத் தெரியவில்லை.



பெண்களை "பட்டுப்பூச்சியைக் கொன்று புடவை நெய்கிறார்கள். மற்றவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். நீங்கள் பூச்சியை கொல்கிறீர்கள். காபி போதைபொருள் அதைக் குடிக்க வேண்டாம் சினிமா பார்க்க வேண்டாம்" என்று சொன்னேன். பெண்களும் கேட்கவில்லை. நான் ஒரு சந்யாஸி. நான் வரமாட்டேனென்று போகலாம். ஏதோ கொஞ்சம் அடிப்படை விஷயமாவது கேட்பீர்கள் என்று நினைத்து வந்தேன். ஒன்றும் ப்ரயோஜனமில்லை. நாளையிலிருந்து நான் உபன்யாஸம் பண்ணப்போவதில்லை என்று ரொம்ப வேதனையுடன் சொன்னார்.

எனக்கு ரொம்ப வருத்தமாய் விட்டது. அந்த நிமிஷத்திலிருந்து காபி, பட்டு, சினிமா மூன்றையும் விட்டுவிட்டேன். பட்டுப்புடவை சினிமா விட்டது கஷ்டமில்லை ஆனால் காபி நிறுத்தினது ரொம்ப கஷ்டம். எனக்கு காபி பைத்தியம். அதனால் கட்டாயம் விடவேண்டுமென்று தீர்மானித்தேன். ஒரே அடியாக விடாதே கொஞ்சம் கொஞ்சமாகவிடு என்று என் மாமியார் சொன்னார். அது முடியாது. சபலம் உண்டாகுமென்று மறுநாளிலிருந்து நிறுத்திவிட்டேன். பால் சாப்பிட்டேன். ஆனால் காபி நிறுத்தினதும், தாங்கமுடியாத தலைவலி மண்டையே போந்துவிடும் போல் இருந்தது. ஒரு துணியை இழுத்துத் தலையில் கட்டிக்கொண்டேன். ரொம்ப சிரமப்பட்டேன். துணியைத் தலையிருந்து எடுத்துவிட்டு மடத்துக்குப்போவேன். வந்து கட்டிக்கொள்வேன். இப்படி மூன்று நாள் இருந்தது. நாலாம் நாள் தலைவலி நின்றுவிட்டது. ஆனால் எதைப்பார்த்தாலும் இரண்டாகத் தெரிந்தது. குடிகாரனுக்கு இரண்டாகத் தெரியுமென்பார்கள். ஆனால் குடியை நிறுத்தின எனக்கு இரண்டாகத் தெரிந்தது. ரோடில் நடக்கும் போது ரொம்ப கஷ்டப்பட்டு ஜாக்கிரதையாக நடந்தேன். அது மூன்று நாள் இருந்துவிட்டு

நின்று விட்டது. ஆனால் சொல்லமுடியாத ஒரு பலஹீனத்தைக் கொண்டு விட்டது. அது மூன்று நாளில் நிற்கவில்லை. அதனால் டாக்டரிடம் போய் பலஹீனமாக இருக்கிறது என்று சொன்னேன். டாக்டர் என்னை பரிசோதித்துப் பார்த்துவிட்டு நீ புதுசாக என்ன செய்கிறாய் என்று கேட்டார். நான் ஒன்றும் செய்வில்லை. காபியை நிறுத்திவிட்டேன் என்று விஷயத்தைச் சொன்னேன். காபி நிறுத்தினது தான் பலஹீனம் அது தானாகவே சரியாகிவிடும். மருந்து வேண்டாமென்று சொன்னார். பலஹீனம் ஒருவாரம் இருந்தது. அதற்குப்பிறகு சரியாய் விட்டது. காபி டயத்திற்கு குடிக்காவிட்டால் எனக்கு உடனே தலைவலி வந்துவிடும். காபி நிறுத்தினபிறகு எனக்கு 50 வருஷமாகத் தலைவலியே வருவதில்லை.

ஒருநாள் பூஜை முடிந்து உபன்யாஸத்திற்கு ஸ்ரீ பெரியாவள் மேடைக்கு வந்தார். ஒரே கூட்டம் கயிறு கட்டியிருப்பார்கள். பெரியமனிதர்கள் பணக்காரர்கள் மேடைகிட்ட இருப்பார்கள். கயிறு தாண்டி நாங்களெல்லாம் இருப்போம். எல்லாரையும் உட்காரச்சொல்லி பின்னால் இருப்பவர்கள் கத்தினார்கள். நாங்களெல்லாம் உட்கார்ந்து விட்டோம் பெரிய மனிதர்கள் யாரும் உட்காரவில்லை எனக்கு முன்னால் ஒரு ஜட்ஜ் ஆத்துமாமி, M.S. அவர்கள் ஏகக்கூட்டம். உட்காரவில்லை அந்த ஜட்ஜாத்து மாமியை நான் புடவையைத் தொட்டு உட்காரச்சொன்னேன். அந்த மாமி திரும்பிப் பார்த்தாள். என்மேல் கோபம் நெருப்புப்பொறி பறந்தது. சனி, சனி, தரித்ரப்பீடைகள் எல்லாம் தொடுகிறது என்று சொல்லிக் கொண்டே ஏதோ அசிங்கம் விழுந்து விட்டமாதிரி நான் தொட்ட இடத்தை துடைத்தாள். எனக்கு ரொம்ப அழுகை வந்துவிட்டது. என்கூட இருக்கிறவர்களெல்லாம் அவசொன்னா சொல்லிவிட்டுப் போறா வருத்தப்படாதே. அவள் தரித்ரம்பட்ட இடத்தைத் துடைத்து விட்டாளே என்று சமாதானப்படுத்தினார்கள். அந்த சமயத்தில் பூஜை மேடையிலிருந்து பூஜைக்குக் கைங்கர்யம் செய்யும் சீனுமாமா என்பவர் வயதானவர் நீலா நீலா என்று கத்தினார். நான் எழுந்து நின்று மாமா நான் இங்கேயிருக்கிறேன் என்று சொன்னேன். வீணை வாசிக்க வா என்று கத்தினார். ஸ்ரீ பெரியாவள் உபன்யாஸம் ஆரம்பிக்கப்போகிறார். "மாமா கூட்டம் மேடைக்கு என்னால் வரமுடியவில்லை" என்று சொன்னேன். உள்ளே வரும் வாசல்படியில் சொம்பில் ஜலம் வைக்கச் சொல்லி யிருக்கிறேன். காலை அலம்பிக்கொண்டு உள்ளே வா என்று சொன்னார். நான் காலை அலம்பிக்கொண்டு உள்ளேபோய் படுதா போடுவதற்கு வீணை வாசித்துவிட்டு வெளியே வந்தேன். அந்த மாமி வாசல் படிப்பக்கம் நின்று சொண்டிருந்தாள் நான் வெளியில் வந்ததும். நீ ஸ்ரீ பெரியவாளுக்கு வேண்டியவளா ஏன் என்னிடம் சொல்லவில்லை என்று கேட்டாள் அதற்கு நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. வந்து விட்டேன் பணம் என்ன பாடுபடுத்துகிறது என்று நினைத்துக் கொண்டேன். அதன்பிறகு அந்த மாமி என்னைப் பார்க்கும்



போதெல்லாம் ரொம்ப விசாரிப்பாள். வேடிக்கை. ஸ்ரீ பெரியவாள் உபன்யாஸம் பண்ணினதில் சில பேர் உச்சி குடுமி வைத்துக் கொண்டார்கள்.

ஸ்ரீ பெரியவாள் திருவல்லிக்கேணியில் பார்த்தஸாரதி கோவிலின் வஸந்தமாளிகையில் தங்கினார். அப்பொழுது ஒருநாள் வீணை வாசித்து முடிந்ததும் ராத்திரி அப்பாவை வாத்தியத்தை எடுத்துக்கொண்டு வரச்சொல்லி போய் அழைத்துவா என்று சொன்னார். அப்பொழுது ராத்திரி 8.30 மணி. மௌண்ட்ரோட்டில் நரசிங்கபுரம் தெருவில் அப்பா இருந்தார். நான் அப்பாவிடம் சொல்லி கார்த்திகேயனுடன் வாத்தியத்தையும் எடுத்துக்கொண்டு டாக்ஸியில் வசந்த மாளிகை வந்தோம். அப்பாவை வாத்தியம் வாசிக்கச் சொன்னார். கேட்டுக்கொண்டிருந்த போது ஜட்ஜ் ராமசாமி ஸாஸ்திரிகள் ஸ்ரீ பெரியவாளைப்பார்க்க வந்தார். அப்பாவை நிறுத்தச்சொல்லி விட்டு ஜட்ஜிடம் ஏதோ முக்யமாகப் பேசிக்கொண்டிருந்தார். ஒருமணி நேரம் பேசினார். அப்பொழுது கார்த்திகேயனை நீ வாசித்துக்கொண்டிரு என்று சொன்னார் எனக்கு ஸரளிவரிசை தான் வாசிக்கத் தெரியும் என்று கார்த்தி சொன்னான். கொஞ்ச நாழி வாசித்தான். அவனுக்கு போர் அடித்தது. கட்டையை கீழே வைத்தான். நிறுத்தாதே வாசித்துக்கொண்டேயிரு. இனிமேல் நீ தானே வாசிக்க வேண்டும் என்று சொன்னார். வாசித்துக் கொண்டேயிருந்தான். ஜட்ஜ்போக விட்டு அப்பாவை வாசிக்கச் சொல்லி கேட்டுவிட்டு 12 மணிக்கு ப்ரஸாதம் கொடுத்து அனுப்பினார். அப்பாவும் காரத்திகேயனும் டாக்ஸி வைத்துக் கொண்டு போனார்கள். நான் அங்கே இருந்துவிட்டு மறுநாள் காலை ஆத்துக்கு வந்தேன். சில மாதங்களுக்குள் அப்பா காலமாய் விட்டார். இனிமேல் நீ தானே வாசிக்க வேண்டும்மென்று சொன்னது அப்பொழுது புரியவில்லை அப்பா காலமாய் விடுவார் என்று மறைமுகமாகத் தெரியப்படுத்தியது பிறகு தெரிந்தது. இப்பொழுது வாத்தியம் கார்த்திகேயனிடம் இருக்கிறது.

ஸ்ரீ பெரியவாள் பலபேட்டைகளுக்குப் போனார் எல்லா இடங்களுக்கும் நானும் போய் வீணைவாசித்து வந்தேன். திருவான்மியூர் போனார். அங்கு சில மாதங்கள் இருந்தார்.

புதுப்பெரியவாள் பூர்வாச்ரம வீட்டில் தான் பூஜை. அந்த வீடு பழய க்ராமாந்தர வீடு கூடம் தாவாரத்துடன் காமரா உள்ளில் தான் பூஜை. வாசலில் ஒரு ஜன்னல் அது வழியாகத்தான் பூஜை பார்க்க வேண்டும். பத்துபேர் பத்துபேராக பார்த்துவிட்டு வருவார்கள். நான் வீணைவாசிப்பதால் பூஜை உள்வாசப்படியின் வெளிப்பக்கம் உட்கார்ந்து வீணை வாசித்துக்கொண்டு பூஜை பூராவும் பார்ப்பேன். முதல் நாள் பூஜையின் போது நைவேத்யத்திற்கு உள்ளே யாரும் இருக்கக்கூடாது. அதனால் பூஜை கைங்கர்யம் பண்ணும் சீனுமாமா என்னை கொஞ்சநேரம் வெளியில்

இருக்கச்சொன்னார். நைவேத்யம் முடிந்து உள்ளே கூப்பிட்டார். பூஜை முடிந்ததும் ஸ்ரீ பெரியாவள் சீனுமாமாவைக் கூப்பிட்டு ஏன் அவளை வெளியில் அனுப்பினாய் என்று கேட்டார். நைவேத்ய சமயத்தில் யாரும் இருக்கக்கூடாதே என்று போகச் சொன்னேன் என்று சீனுமாமா சொன்னார். அம்பாளுக்கு வீணை வாசிப்பதற்காக அவளை உள்ளே அனுமதித்தேன். அம்பாளுக்கு ஸதா ஸர்வதா வீனைநாதம் வேண்டும். அதனால் நீலாவை பூஜை சமயத்தில் வெளியில் அனுப்ப வேண்டாமென்று சொல்லி விட்டார். நான் வீணை கற்றுக்கொண்டதால் எப்பேர்ப்பட்ட பாக்யம் பண்ணினேன் என்று எனக்கு ரொம்ப ஆனந்தமாய் இருந்தது. ஸ்ரீ பெரியவாள் திருவான்மியூரில் இருந்தவரை முழு பூஜைக்கும் பூஜையைப் பார்த்துக்கொண்டே வீணையும் வாசித்தேன். நைவேத்யம் கொண்டு வைக்கும்போது அண்டா அண்டாவாகக் கொண்டு வைப்பார்கள். எல்லா சமையலும் பழம், பால், தயிர், தீர்த்தம் உள்பட வைப்பார்கள். அவர்களும் வாயையும் மூக்கையும் ஒரு துணிகட்டி மறைத்திருப்பார்கள். நானும் அதனால் மூச்சுவிடாமல் கூடியமட்டும் சமாளிப்பேன். அப்பொழுது தான் நைவேத்யம் எப்படி வைப்பது என்று தெரிந்தது. அங்கு இருக்கும் போது தான் ஸ்ரீபெரியவாள் பூஜை முடிந்து தரிசனம் கொடுத்துவிட்டு உள்ளே என்னை உட்காரவைத்து ஆன்மீகம் சங்கீதம் பாட்டுக்கு அர்த்தங்கள் எல்லாம் சொல்லுவார். 11 மணிவரை சொல்லிவிட்டு உத்தரவு கொடுப்பார். என்ஜினீயர் சோமசுந்தரம் என்று ஒரு மாமா. மாமியுடன் ஸ்ரீ பெரியவாள் எங்கிருந்தாலும் காரில் வருவார்கள் அவர்கள் ஹார்பரில் இருந்தார்கள். அங்குவேலை. ஸ்ரீபெரியவாள் அந்த மாமாவுக்கு பலவேலைகள் சொல்லுவார். அந்த மாமா பெரியவாள் சொல்வது எல்லாம் பரமபக்தியுடன் செய்வார்கள். அவர்கள் தினமும் என்னை திருவான்மியூரிலிருந்து மாம்பலம் கொண்டு வந்துவிட்டு விட்டு பிறகு ஹார்பர் போவார்கள். திருவான்மியூரில் ஸ்ரீ பெரியவாள் இருந்தவரைக்கும் இது நடந்தது.

பிறகு ஸ்ரீபெரியவாள் பல பேட்டைகளுக்குப்போய் விட்டு வானகரம் வந்தார்கள். அங்கு ஒரு வருஷம் இருந்தார்கள். அங்கும் தினமும் போய்க்கொண்டிருந்தேன். இரண்டு வேளையும் போகமுடியாது. அதனால் காலையில் ஆத்தில் எல்லா வேலைகளும் சமையல் சாப்பாடு எல்லாம் செய்து பூஜையும் செய்துவிட்டு சாயந்திரம் 4 மணிக்குப் போவேன். என் மாமியார் முடிந்த அன்று காலையில் போய் பூஜை பார்த்துவிட்டு வருவார். 4 மணிக்குக் கிளம்பினால் பஸ் பிடித்துப்போய்ச்சேர 5 மணி ஆகும். போனஉடன் வீணை வாசிக்க வேண்டும். சிலநாள் பூஜை ராத்திரி 8 மணிக்கு முடியும். விசேஷ நாளானால் பத்து பதினோரு மணியாகும். மாம்பலத்தில் R.R.ஐயர் என்று ஒரு பணக்காரர் இருந்தார். R.வெங்கட்ராமன் மாமியும் வருவார். மாமி அவராத்துக்காரிலிருந்து நம்பாத்துக்கு வந்துவிடுவார். காரை அனுப்பி விடுவார். மாமி என்னுடன்



பஸ்ஸில் வருவாள். திரும்பிவரும்போது R.R.ஐயர் எங்களை நம்மாத்தில் கொண்டு விடுவார். மாமி கார் நம்பாத்தில் வந்து காத்திருக்கும். மாமி அவாத்து காரில் ஆத்துக்குப்போவார். இது ஒரு நாலு மாதம் நடந்தது R.R.ஐயருக்கு மாமி ஸ்நேகம் ரொம்ப பெருமை. அதனால் மாமியாத்துக்கு கார் அனுப்பி மாமியை அழைத்துப்போவார். நான் வழக்கம் போல் போவேன். திரும்பி வரும்போது அவர்களுடன் வருவேன். சிலநாள் அவர்கள் வரமாட்டார்கள். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் வேறு யார் துணையோடாவது அனுப்புவார். யாருமே வரவில்லை என்றால் பூஜையை சீக்கிரம் முடித்து யாரையாவது பஸ்சில் ஏற்றிவிடச்சொல்லுவார். 9 மணிக்குள் ஆத்துக்கு வந்து விடுவேன். பிறகு அம்பாவும் (ஸ்நேகிதி) தினம்வர ஆரம்பித்தாள். அவளும் எங்களுடன் காரில் வருவாள். கார் வராவிட்டால் பஸ்ஸில் வந்து உஸ்மான் ரோடில் இறங்கி அவள் அவாத்துக்குப் போவாள். உஸ்மான் ரோடிலேயே அப்பொழுது பஸ் ஸ்டாண்ட். நம்மாத்துக்கு ரொம்ப பக்கத்தில் அதனால் எனக்கு சௌகர்யம். அம்பா கொஞ்சம் நடக்க வேண்டும். அவாத்துக்காரர் வந்து அழைத்துப்போவார். இப்படி நடந்து கொண்டிருந்தது. மழை காலத்தில் கொட்டும் மழையிலும் புயலிலும் கூடப் போய்விடுவேன். வரும்போது எப்படியோ வந்து விடுவேன். இது என் முயற்சியால் நடக்கவில்லை. நடக்கவும் நடக்காது. ஸ்ரீ பெரியவாள் அநுக்ரஹத்தினால் தான் நடந்தது.

இப்படி நான் வருவது, வீணைவாசிப்பது எல்லாம் யாருக்கோ பிடிக்கவில்லை. அவர்கள் நான் திரும்பி போகும் போது ரொம்ப கஷ்டப்படுவதாகவும், இந்த மாதிரி கஷ்டப்பட்டு ஏன் வரவேண்டும் என்று ஸ்ரீபெரியவாளிடம் கலகம் பண்ணியிருக்கிறார்கள்.

மறுநாள் நான் போனதும் ஸ்ரீபெரியவாள் என்னைக் கூப்பிட்டு இனிமேல் நீ சாயந்தரம் வரவேண்டாம். மத்தியானமே வந்து வாசித்துவிட்டுப்போ என்று சொன்னார். எனக்கு ரொம்ப வருத்தமாய்ப் போய்விட்டது. நான் என்ன தப்புப்பண்ணினேன். இத்தனை நாளாக வாசித்துக் கொண்டிருக்கிறேன். இப்படி திடீரென்று நிறுத்தினால் எனக்குத் தாங்கமுடியவில்லை என்று அழுதேன். அதற்கு ஸ்ரீ பெரியவாள் ஏன் எனக்கு வாசியேன். சந்திரமௌலீஸ்வரர், த்ருபுரசுந்தரிக்குத் தான் வாசிக்க வேண்டுமா? நான் யாரென்று தெரியவில்லையா? அந்த சந்த்ரமௌலீஸ்வரர், த்ரிபுரசுந்தரி நான் தான். எனக்கு வாசி என்று பிக்ஷை பண்ணி விட்டு விச்ராந்தி பண்ணிக்கொள்ளும் ரூமில் படுத்துக்கொண்டு வீணையை எடுத்துக்கொண்டு வரச்சொன்னார்கள். மனதுக்கு திருப்தியாக இருந்தது. ஸ்ரீபெரியவாள் படுத்துக்கொண்டே கேட்டுக்கொண்டிருப்பார் சிலசமயம் அவர் ராகம் பாடிவிட்டு என்னை வாசிக்கச் சொல்லுவார். குரல் ரொம்ப இனிமையாக இருக்கும். மெல்லியதாகத்தான் பாடுவார். பாட்டும்

பாடுவார். சில சமயம் என்னை வாசிக்கச் சொல்லிவிட்டு கண்ணை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டிருப்பார். அங்கு ஸ்ரீபெரியவாளுக்கு வாசிப்பது எனக்கு ரொம்ப சந்தோஷமாகவும் எனக்கு ஆனந்தமாகவும் இருக்கும். த்யாகராஜ ஸ்வாமி சிஷ்ய பரம்பரையில் பிறந்ததால்தான் இந்த பாக்யம் கிடைத்திருக்கிறது என்று ஆனந்தமாக வாசித்துக் கொண்டிருப்பேன். இரண்டு மணிநேரம் வாசிப்பேன் அவர் வெளியில் வரும் போது எனக்கு ஆத்துக்குப்போக உத்தரவு கொடுப்பார். அப்பொழுது தான் எனக்கு ஸஹானாவில் கமலாம்பா என்ற கீர்த்தனையும் கீரவாணியில் வரமுலொஸகி என்ற கீர்த்தனையும் சொல்லிக்கொடுத்தார். எனக்குப் பரமானந்தம். இந்த பாக்யம் மூன்று நாள் தான் கிடைத்தது. யார் நான் மடத்துக்கு வராமல் தடுக்க வேண்டுமென்று கலகம் பண்ணினார்களோ அவர்களுக்கு ஒரே பயமாய்ப்போய்விட்டது. அவளை விரட்ட வேண்டுமென்று பார்த்தால் இன்னும் கிட்டத்தில் போய் விட்டாளே என்று அவர்கள் ஸ்ரீ பெரியவாளிடம் என்ன சொன்னார்களோ தெரியவில்லை. நாலாவது நாள் போனதும் ஸ்ரீ பெரியவாள் சிரித்துக்கொண்டே இனிமேல் நீ வழக்கம்போல வரலாமென்று சொன்னார்.

சில சமயங்களில் வேடிக்கையும் செய்வார். வானகரத்தில் இருந்த போது நான் வழக்கம்போல் பஸ்ஸில் போய்விட்டேன். சாதாரணமாக நான் தனியாக வந்தால் கூட யார் வந்திருக்கிறார்கள் என்று ஸ்ரீபெரியவாள் கேட்பார் அன்றும் கேட்டார். தனியாகத்தான் வந்திருக்கிறேன் என்று சொன்னேன். பூஜையை 8 மணிக்கு முடித்துவிட்டு நீ சீக்கிரம் கிளம்பு என்ற சொன்னார். நான் ஸ்ரீபெரியவாளுக்கு வந்தனம் செய்துவிட்டு கிளம்பி இரண்டடி வந்தேன். அப்பொழுது காரில் ஒரு தம்பதிகள் வந்து ஸ்ரீபெரியவாளை வந்தனம் செய்தார்கள். அவர்கள் மாம்பலத்திலிருந்து வந்தார்கள். ஸ்ரீபெரியவாள் உடனே என்னைக் கூப்பிட்டு சற்று இரு என்று சொல்லிவிட்டு அவர்களை நீங்கள் அவசரமாகப்போக வேண்டுமோ என்ற கேட்டார் அவர்கள் எங்களுக்கு அவசரமில்லை. ஸ்ரீபெரியவாள் உத்தரவு கொடுத்த பிறகு போகிறோம் என்று சொன்னார்கள். அவர்களை உட்காரச்சொல்லி விட்டு என்னையும் வீணையை எடுத்துக்கொண்டு வந்து வாசிக்கச் சொன்னார். அவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். நானும் வீணை வாசித்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீபெரியவாளும் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தார். 9 மணி ஆயிற்று. புஸ்தகத்தை வைத்துவிட்டு என்னை நீ மங்களம் வாசி என்று சொல்லி விட்டு அவர்களிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு இவளை உங்களுடன் அழைத்து அவாத்தில் விட்டுவிடுங்கள் என்று சொன்னார். அவர்கள் ஸ்ரீபெரியவாள் தங்களுடன் நிறைய பேசப்போகிறாரென்று சந்தோஷமாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு ஏமாற்றம். என்மேல் கோபம். எனக்காகத்தான் அவர்களை நிற்க வைத்திருக்கிறார்களென்று புரிந்து கொண்டார்கள். என்னை மாம்பலம்



பவர்ஹௌசில் இறக்கி விட்டு நீ பஸ்ஸில் போ என்று சொல்லிவிட்டு போய் விட்டார்கள். நல்லவேளையாக 9ம் நம்பர் கடைசி பஸ் வந்தது. பஸ் வந்ததும் ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹம் தான். பஸ் ஏறி ஆத்துக்கு வந்துவிட்டேன் மறுநாள் போனதும் அவர்கள் உன்னை ஆத்தில் விட்டார்களா என்று சிரித்துக் கொண்டே கேட்டார்கள். இல்லை பவர்ஹௌசில் இறக்கி விட்டார்கள். பஸ் பிடித்து ஆத்தக்குப்போய்விட்டேன் என்று சொன்னேன்.

வானகரத்திலிருந்து ஸ்ரீபெரியவாள் பூந்தமல்லியில் இரண்டு நாள் பூஜை செய்து பிறகு வரதராஜபேட்டை போனார்கள். பூந்தமல்லியில் கோயிலில் உட்கார்ந்து ஒவ்வொரு ராகமாகப்பாடி இது என்ன ராகம் என்று கேட்டார். எல்லாரும் அப்பொழுது ஸ்ரீபெரியவாளின் இனிமையான குரலைக்கேட்டு ஆனந்தித்தார்கள்.

வரதராஜப்பேட்டையில் ஒருவாரம் இருந்தார். அப்பொழுதும் போய் வீணை வாசித்து விட்டு வந்தேன். பிறகு காஞ்சீபுரம் கிளம்பினார். இனிமேல் உன்னால் தினமும் காஞ்சீபுரம் வரமுடியாது வீணையை ஆத்துக்கு எடுத்துக்கொண்டு போ. காஞ்சீபுரம் வரும்போது மடத்து வீணையில் வாசிக்கலாம் என்று ப்ரஸாதம் கொடுத்து அனுப்பினார். ஸ்ரீபெரியவாள் கும்பகோணம் தஞ்சாவூர் திருச்சி என்று தமிழ்நாடு ஆந்த்ராவில் விஜயவாடா ராஜமஹேந்த்ரபுரம் நெல்லூர் என்று தமிழ்நாடு, தெலுங்கு தேசம் எல்லாம் சஞ்சாரம் செய்தார். அப்பொழுது ஸ்ரீபெரியவாள் யார் வீட்டிலாவது வீணை இருந்தால் கொண்டு வரச்சொல்லி நான் அந்த ஊரில் இருக்கும்வரை என்னை வீணை வாசிக்கச் சொல்லுவார். நான் ஊருக்குவரும் போது வீணையை மடத்திலிருந்து கொடுத்தனுப்புவார். அங்கெல்லாம் மாஸத்துக்கு ஒருதரம் போய் ஒருவாரம் தரிசனம் செய்து விட்டு வருவேன்.

ஸ்வாமிமலையில் ஒரு வீட்டில் வீணை இருந்தது. அங்கும் வாசித்தேன். திருவலஞ்சுழி என்னும் பிள்ளையார் க்ஷேத்திரத்திலும் வாசித்தேன். திருவலஞ்சுழியில் என் நாத்தனார் ஸ்ரீபெரியவாளிடம் இன்று நீலா மெட்ராஸ் போகவேண்டும். அதனால் அவளை கும்பகோணத்தில் கொண்டு விட்டு நான் திரும்பி வருகிறேன் என்று சொன்னார். பதில் சொல்லாமல் ஸ்ரீ பெரியவாள் உள்ளே போய்விட்டார். சாயந்திரம் 5 மணிவரை வாசித்தேன். நாங்கள் இரண்டு பேரும் சாப்பிடவும் இல்லை. கும்பகோணத்தில் ராத்திரி 9 மணிக்கு ரயில். 5 மணிக்குமேல் எங்கள் இருவரையும் மடத்தில் சாப்பிடச்சொல்லிவிட்டு நீயும் இவளோடு பஸ்ஸில் கும்பகோணம் போய் ஸ்டேஷனில் அவளை ரயிலேற்றி விட்டு நீ உங்காத்துக்குப்போ என்று ப்ரஸாதம் கொடுத்தனுப்பினார்.

கும்பகோணத்திலிருந்து கிளம்பி ஒவ்வொரு ஊராகப் போய்விட்டு இளையாத்தங்குடி என்னும் ஊரில் 10 மாதம் இருந்தார். அப்பொழுது மாதம் ஒருமுறை போய் ஒருவாரம் இருந்துவிட்டு வருவேன். ஒருதரம் தஞ்சாவூர் மாமா பெண் கிரிஜாவுக்குக் கல்யாணம் ஒரு புதன்கிழமை. முதல் புதன்கிழமை நான் இளையாத்தங்குடி போனேன். மாமா பெண்ணுக்கு அடுத்த புதன்கிழமை கல்யாணம். திங்கட்கிழமை சுமங்கலிப்ராத்தனை. அதற்கு வரச்சொல்லி யிருக்கிறார்கள். அதனால் நான் ஞாயிற்றுக்கிழமை கிளம்பி தஞ்சாவூர் போகிறேன் என்று ஸ்ரீ பெரியவாளிடம் சொன்னேன். வியாழக்கிழமை இளையாத்தங்குடியில் எனக்கு சொப்பனம். ஸ்ரீபெரியவாள் தூக்கிய திருவடி பாடு என்று சொல்லுகிறார். பல்லவி, அனுபல்லவி பாடிவிட்டு சரணம் ‘எத்தனையோ பிறவி’ பாடுகிறேன். எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்தேன் இருவினைப்பயன்களை எய்து எய்து களைத்தேன் என்று பாடி பஞ்சமத்தில் நிறுத்தினேன். இன்னும் கத்து என்று ஸ்ரீபெரியவாள் சொன்னார் பாடி தைவதத்தில் நிறுத்தினேன். இன்னும் பாடு என்றார் நிஷாதத்தில் நிறுத்தினேன். இன்னும் என்றார் ஷட்ஜமத்தில் நிறுத்தினேன். இன்னும் என்றார். மேல்ரிஷபத்தில் நிறுத்தினேன் இன்னும் என்றார் காந்தாரத்தில் நிறுத்தினேன் இன்னும் என்றார் மத்யமத்தில் நிறுத்தினேன். இன்னும் என்றார். பஞ்சமத்தில் நிறுத்தினேன் முழித்துக்கொண்டு விட்டேன். உடம்பு சொட்டச்சொட்ட வேர்த்து விட்டது. அவஸரமாக எழுந்தேன். மடத்தில்தான் எல்லாரும் படுத்துக்கொள்வோம். நான் எழுந்து நின்றதும் காலை 4 மணி ஸ்ரீபெரியவாள் வெளியில் வந்தார் தூக்கிவாரிப் போட்டது. இது சொப்பனம் மாதிரியேயில்லை. நிஜமாகவே எதிரில் ஸ்ரீபெரியவாள் நின்று கொண்டு சொன்ன மாதிரி இருந்தது. அப்பவே ஸ்ரீபெரியவாளிடம் சொன்னேன். கேட்டார். ஒன்றும் சொல்லவில்லை. உள்ளே போய்விட்டார். ஞாயிற்றுகிழமை காலை ஸ்ரீபெரியவாள் தரிசனம் கொடுத்து ஆரத்தி எடுத்ததும் இன்று தஞ்சாவூர் போக வேண்டுமா என்று கேட்டார் ஆமாம் என்ற சொன்னேன். உள்ளே போய்விட்டார். மறுபடியும் 8 மணிக்கு வந்தார். உனக்கு எத்தனை மணிக்கு பஸ் என்று கேட்டார். நான் இங்கிருந்து ஒரு மணிக்குக் கிளம்பினால் கீழ்சீவல்பட்டி போய் அங்கிருந்து பஸ்ஸில் புதுக்கோட்டை போய் தஞ்சாவூர் போக வேண்டும். புதுக்கோட்டையில் 5 மணிக்கு பஸ் 7 மணிக்கு தஞ்சாவூர் போய்விடும். ரொம்ப இருட்டின பிறகு போனால் தஞ்சாவூரில் பஸ்ஸ்டாண்டிலிருந்து ஆத்துக்குத் தனியாகப் போக பயமாயிருக்கும் என்று சொன்னேன். உள்ளே போய்விட்டார். பிறகு இரண்டு காலபூஜை பண்ணிவிட்டு உனக்கு எப்பொழுது பஸ் என்று கேட்டார். அப்பொழுது மணி 1. பஸ் போயிருக்கும். அதனால் கீழ்சீவல்பட்டி பஸ் ஒரு மணிக்கு. அது போயிருக்கும் என்று சொன்னேன். உன்னை பெண்டுகளாக வரித்திருக்கிறார்களோ என்று கேட்டார் எனக்குத்தெரியாது. ஞாயிற்றுக்கிழமை வந்துவிடு என்று



சொன்னார்கள் என்று சொன்னேன். உள்ளே போய் விட்டார். ப்ரஸாதம் கொடுப்பார். வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்று மடத்திலேயே இருந்தேன். சமைக்கவில்லை, சாப்பிடவில்லை. காத்துக்கொண்டிருந்தேன். நாலு மணிக்கு ஸ்ரீபெரியவாளுக்கு பிக்ஷை பண்ணும் சிகப்பு ராமர்த்தி என்னும் பையன் மாமி உங்களுக்கு உத்தரவு ஆகிறது என்று சொன்னான். ஸ்ரீபெரியவாள் எங்கிருக்கிறார் என்று கேட்டேன். பூஜைக்கட்டில் ஸ்வாமிக்குப்பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னான். பூஜை கட்டிற்குள் பெண்கள் போகக்கூடாதே நீ தெரியாமல் சொல்லுகிறாய். ஸ்ரீ பெரியவாள் யாரைக் கூப்பிட்டாரோ என்று சொன்னேன். ஸ்ரீ பெரியவாள் உங்களைத்தான் கூப்பிடுகிறார் எனக்கு அது கூடத்தெரியாதா என்று அதட்டிவிட்டுப் போனான். நான் பூஜைக்கட்டிற்குள் போனேன். ஸ்ரீபெரியவாள் ஸ்வாமிக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தார். போய் நமஸ்காரம் பண்ணிவிட்டு நின்றேன். உனக்கு ஒன்றுமே கேட்கத் தெரியவில்லையே என்று சொன்னார். எனக்குக் கேட்கத் தெரியாது. ஸ்ரீபெரியவாள்தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். உடனே கிட்டக்கூப்பிட்டு வலது காதில் சக்தி பஞ்சாக்ஷர ஜபமந்திரம் சொல்லி அங்கன்யாஸம் கரன்யாஸம் சொல்லி இதை மாமாவிடம் சொல்லி கேட்டு எழுதிக்கொள் என்று சொல்லி ப்ரஸாதம் கொடுத்தார். எனக்கு எற்பட்ட ஆனந்தம் சொல்லிமுடியாது. உனக்குக்கேட்கத் தெரியவில்லையே என்று சொல்லி அவராகவே உபதேசம் பண்ணினது அளவு கடந்த ஆனந்தம், சந்தோஷமாக ப்ரஸாதத்தை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தால் அங்கு ஒருவர் நின்று சொண்டிருந்தார். அவர் நீங்கள் தான் நீலாவா என்று கேட்டார். அப்பொழுது மணி நாலேகால். ஆமாம் என்று சொன்னேன். உங்களைப் புதுக்கோட்டைக்கு அழைத்துப் போய் தஞ்சாவூர் பஸ்ஸில் ஏற்றிவிட உத்தரவாயிருக்கிறது. வாருங்கள் என்று சொன்னார். அவர்களுக்கு ஸ்ரீபெரியவாள் இன்னும் தரிசனம் கொடுக்கவில்லை. ஆச்சர்யமாக இருந்தது. அதற்குள் பொன்னம்மா மாமி ஓடிவந்து நீலா என்ன சமாசாரம் என்று கேட்டார்கள். மந்த்ரோபதேசம் ஆனது சொன்னேன். அந்த மாமிக்கும் ரொம்ப சந்தோஷம். காலையிருந்து பட்டினியுடன் இருந்து மந்த்ரோபதேசம் ஆயிருக்கிறது வெறும் வயிற்றுடன் போகாதே என்று கொஞ்சம் தயிருஞ்சாதம் பிசைந்து என் கையில் போட்டாள். சாப்பிட்டுவிட்டு காரில் ஏறினேன். கார் பறந்தது. நாங்கள் புதுக்கோட்டை பஸ் ஸ்டாண்டுக்கு போனதும் தஞ்சாவூர் பஸ் கிளம்ப ரெடியாய் இருந்தது. அவர்கள் என்னை ஏற்றிவிட்டுப்போனார்கள். 7 மணிக்கு தஞ்சாவூர் போய் சேர்ந்துவிட்டேன். ஸ்ரீபெரியவாளின் கருணையும் அநுக்ரஹமும் எனக்கு நினைக்க நினைக்க ஆனந்தம்.

எல்லையம்மன் காலனியில் நாங்கள் ஒரு வீடு வாங்கினோம். க்ரஹப்ரவேசத்தற்கு நாள் பார்த்து ஸ்ரீ பெரியவாளுடைய பாதுகையை

வாங்கிவர நான் கரூருக்குப் போனேன். ஸ்ரீ பெரியவாள் கரூரில் இருந்தார்கள். மூன்று நாள் கரூரில் தங்கியிருந்து ஸ்ரீ பெரியவாள் பாதுகை கொடுத்தவுடன் எடுத்துவந்து பூஜை பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஸ்ரீபெரியவாளே ஆத்தில் இருப்பதாக ஒரு சந்தோஷம்.

திருச்சி பக்கத்தில் காமநாயகம் பாளையும் என்னும் ஒரு ஊர் அங்கே ஸ்ரீபெரியாவள் வ்யாஸ பூஜை செய்து 2 மாதம் தங்கினார். அப்பொழுது ஒரு இடத்தில் வீணை கிடைத்தது. அங்யேும் வாசித்து விட்டுவந்தேன்.

ஸ்ரீபெரியவாள் வ்யாஸ பூஜை முடிந்து விஸ்வரூப யாத்திரை கிளம்பி ஆந்த்ரா வந்தார்கள் நெல்லூரில் ஒரு வாரம் தங்கினார். அங்கும் போயிருந்தேன். நெல்லூரி லிருந்து ஸொன்னவாடா என்னும் ஊருக்குப் போட்டில் கிளம்பி போனார். என்னையும் அந்த போட்டில் ஏற்றிக்கொண்டு போட் போகும்போது கோதாவரி ஓடம் பாடிக்கொண்டே வரச்சொன்னார். இதெல்லாம் சின்ன விஷயமாக இருந்தாலும் ஸ்ரீபெரியவாளுடன் பாடிக் கொண்டே போனதில் ஒரு சந்தோஷம். ஸொன்னவாடாவில் இரண்டு நாள் இருந்தார். அப்பொழுது அரசப்ரதக்ஷணம் வந்தது என் நாத்தனாரும் ஸொன்னவாடா வந்திருந்தார். அரசப்ரதக்ஷணத்தை ஸ்ரீபெரியவாளையே ப்ரதக்ஷணம் பண்ணிவிடுகிறோம் என்று நாத்தனார் சொன்னார் என்னைப் பண்ணக்கூடாது. அரசப்ரதக்ஷணத்தை அரசமரத்தில் தான் பண்ண வேண்டுமென்று சொல்லி அந்த ஒரு இடத்தில் இருந்த அரசமரத்திற்கு மடத்து சாஸ்த்ரிகளையும் அனுப்பி பூஜா விதிகள் குறையாமல் பண்ணினோம். எது எது எப்படி செய்ய வேண்டுமா அப்படி சாஸ்திரப்படிதான் பண்ண வேண்டும் ஸாஸ்த்ர, சம்ப்ரதாய பூஜா விதிகள் எல்லாம் சொன்னார். ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகும் போது கிளம்பும் ஊரில் எல்லைக்கு அந்த ஊர் ஜனங்கள் வந்து அனுப்பி வைப்பார்கள். அடுத்த ஊர் எல்லையில் அந்த ஊர் ஜனங்கள் பூர்ண கும்பம் கொடுத்து அழைக்க வருவார்கள். நடுவில் 20 கிலோ மீட்டர் நடப்பார்கள். அவர்களுடன் நாங்களும் போவோம். ஸ்ரீபெரியவாளுடன் நாங்கள் பத்துப்பேர் நடந்து போவோம். அந்த சமயத்தில் பல விஷயங்கள் சொல்லிக்கொண்டு வருவார். சாஸ்த்ரம், சம்ப்ரதாயம் ஒவ்வொருவரும் எப்படி இருக்க வேண்டும் என்றும் பல புராணங்கள் ஆன்மீகம் இயற்கையின் அழகு வேடிக்கையான பேச்சு எல்லாம் சொல்லிக்கொண்டே வருவார். கூடவே கேட்டுக்கொண்டு நடப்பது ரொம்ப ஆனந்தமாக இருக்கும். அடுத்த ஊர் போனதும் அவர் ஜனங்களுக்கு தரிசனம் கொடுக்க உட்கார்ந்து விடுவார். ச்ரமபரிகாரம் ஒன்றும் கிடையாது. நாங்களெல்லாரும் நடந்த சிரமத்திற்கு பால் கிடைக்குமா எங்கு டீ போடலாம் கையில் கொண்டுவந்ததை எங்கு வைத்துக்கொண்டு சாப்பிடலாம் என்று இடம் தேடுவோம். ஸ்ரீபெரியவாளுக்கு ச்ரமமே கிடையாது. ஜனங்களுக்கு



தரிசனம், இன்னும் பல காரியங்கள் தீர்மானிப்பார். அப்பொழுது அவரைப்பார்த்தால் இவர் எவ்வளவு பெரிய மஹான். கடமையே கருணையே ப்ரதானமாக இருக்கிறாரென்று ஆச்சர்யமாக இருக்கும்.

அவர் நம்முடைய பழய கலாசாரங்களை நடத்திக் கொண்டு அப்பொழுது கடமை, நேர்மை, பக்தி, பிறருக்கு உதவுவது, எல்லாமும் செய்து கொண்டே வந்தால் நம்முடைய மனதுகட்டுப்பட்டு தெய்வ பக்தியில் ஈடுபட்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்து விடலாம். தபஸ், யோகம் என்று பண்ணுவது ரொம்ப கஷ்டம். மனம் கொஞ்சம் கூட கட்டுப்படாது. முதலில் நம்முடைய சின்ன சின்ன அனுஷ்டானங்களை எல்லாம் செய்து வரவேண்டும். பெண்கள் வாசலில் ஜலம் தெளித்து பெருக்கி கோலம் போடுவதிலிருந்து வீட்டில் ஸ்வாமிக்கு விளக்கேற்றி நமஸ்காரம் செய்வது, ஸ்லோகங்கள் சொல்வது, சமையல் செய்வது என்று சொல்லாமல் ஸ்வாமி நைவேத்யம் என்று சொல்வது, சமைத்ததை ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்து சாப்பிடுவது என்று இப்படி சின்ன சின்ன விஷயங்களில் ஈடுபடுவது மனம் எவ்வளவு கட்டுப்படும். கோவிலுக்குப் போவது, கோவிலுக்கு போகும் போது நம் ஸாஸ்திரப்படி 9 கஜம் கட்டிக்கொள்வது வீட்டிலும் பண்டிகைகள் பித்ரு கார்யம் தெய்வகாரியம் செய்யும்போது ஸாஸ்திரப்படி 9 கஜம் கட்டிக்கொள்வது பெரியவர்களை நமஸ்காரம், யார் மனதும் புண்படாமல் போசுவது, அன்பாக இருப்பது இந்த மாதிரிக் காரியங்களில் பொது இடத்தில் உபன்யாஸம் மாதிரி இராமல் சாதாரணமாகப் பேசுவது இப்படி ஸ்ரீ பெரியவாள் பேசுவார். சொல்வதைச் சொன்னால் யாராவது ஒருத்தருக்காவது இப்படி இருக்க வேண்டும் என்று மனதில் படும். அதனால், தான் சொல்லுகிறேன் என்ற சொல்வார் நடுநடுவில் நீதிக் கதைகளும் சிலசமயம் தமாஷாகவும் சொல்லுவார். இதெல்லாம் கேட்பதற்கு ரொம்ப ஸ்வாரஸ்யமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்.

ஸ்ரீ பெரியவாள் சென்னை சுற்றி பேட்டைகளுக்குப் போய்விட்டு மறுபடியும் மெட்ராஸ் வந்து குருகுலத்தில் பூஜை வைத்திருந்தார். ஒருவாரம் அங்கிருந்தார். அப்பொழுது நான் நந்தனம் வந்து விட்டேன். ஸ்ரீ பெரியவாள் அநுக்ரகத்தில் தான் நந்தனம் வீடு கிடைத்தது. நந்தனத்திலிருந்து தினம் காலை குருகுலம் போய் பூஜை பார்த்து தீர்த்தம் வாங்கிக் கொண்டு ஆத்துக்கு வந்து விடுவேன். மறுபடியும் சாயந்திரம் போவேன். மடத்தில் வேதப்ராமணர் ஒருவரின் மனைவி ஒரு வாரம் நம்மாத்தில் இருந்தார். அவள் கணவர் வேலை நிமித்தமாக ஊருக்குப்போக வேண்டியிருந்தால் இங்கு கொண்டு விட்டுப்போனார். ஒரு நாள் சாயந்தரம் அவளை ஆத்தில் இருக்கச் சொல்லிவிட்டு நான் குருகுலம் போனேன். அன்று அங்கிருந்து ஸ்ரீ பெரியவாள் பல்லாவரம் போனார். தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரிகள் என்ற ஒரு பெரிய வேதவித்வான் குருகுலத்தில் பகவத் பாதாள் ப்ரதிஷ்டை பண்ணிக் கோவில் மாதிரி எல்லா பூஜையும் செய்வார். அங்கு எல்லாரும்

வருவார்கள். அவருடைய பெண், பிள்ளை மாட்டுப் பெண்ணோடு நந்தனத்தில் இருந்தாள். அவள் மூலம் கமிட்டிக் காராள் எல்லாரும் ஸ்ரீ பெரியாவாளை நந்தனத்துக்கு கூப்பிட்டிருக்கிறார்கள். பல்லாவரம் போகும் போது நந்தனம் வழியாகப் போக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். குருகுலம் அபிராமபுரத்தில் இருக்கிறது. இவர்கள் கூப்பிட்டிருப்பது எனக்குத் தெரியாது. நான், ஸ்ரீ பெரியவாள் கிளம்புகிறார்கள். பார்த்துவிட்டு வரலாமென்று போனேன். அங்கு ஒரு மாமி, "நீலா ஸ்ரீபெரியவாள் நந்தனம் வரப்போகிறார்களாமே", உனக்குத் தெரியாதா? என்று கேட்டாள். எனக்குத் தெரியாதே என்று உள்ளே போகப்போனேன். ஸ்ரீபெரியவாள் கிளம்பி வாசலுக்கு வந்து விட்டார். நான் உடனே வந்தனம் பண்ணி நான் நந்தனத்தில் தான் இருக்கிறேன் என்று சொன்னேன். ஸ்ரீ பெரியவாள் என்னால் அலைய முடியவில்லை. அதனால் பொது ஸ்தலத்தில் என்னை வந்து தரிசித்துக்கொள் என்று சொன்னார். உடனே ஒரு ரிக்ஷா வைத்துக்கொண்டு ஆத்துக்கு வந்து ஒரு தெரிந்த பையனை மாம்பலம் அனுப்பி பூ, பழம், மாலை எல்லாம் வாங்கிவரச்சொல்லி வீடு வாசல் பெருக்கி வாசலில் மாவிலை கட்டி வாசலில் தண்ணி தெளித்து ஒரு பெரிய கோலம் போட்டு விட்டு இரண்டு பூர்ணகும்பம், ஆர்த்தி எடுத்து வைத்துவிட்டு ஆத்தில் இருந்த பெண் பெயர் சுந்தராம்பாள், அவளை ஆத்தைப்பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு ஒரு பூர்ணகும்ப ஆரத்தியை எடுத்துக் கொண்டு நந்தனம் எல்லை அடையார் கேட்டுக்கு ஓடினேன். தேதியூர் பெண் ஜானகி மாமி, நீலா நீ பூர்ணகும்பத்தை எடுத்துக்கொண்டு எங்கே போகிறாய், எங்களுக்குத்தெரியாமல். நாங்கள் பூர்ணகும்பத்துடன் பொது ஸ்தானத்தில் (கம்யூனிடிஹால்) உட்காந்திருக்கிறோம் என்று அதட்டினாள். ஸ்ரீ பெரியவாள் நந்தனம் வருகிறார் என்று கமிட்டிகாரா சொன்னார்கள் நீங்கள் எனக்குச் சொன்னீர்களா நான் எங்கு போனால் உங்களுக்கு என்ன என்று சொல்லிவிட்டு அவசரமாக அடையார் கேட் போனேன். அப்பொழுது தான் ஸ்ரீ பெரியவாள் நந்தனம் எல்லைக்குள் நுழைகிறார். ஏண்டா நந்தனக்காரர்கள் கூப்பிட்டார்கள். ஆனால் யாரும் அழைத்துப்போக எல்லைக்கு வரவில்லையே என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். நீலா மாமி வந்துவிட்டாள் என்று கூட வருபவர்கள் சொன்னதும், வந்துவிட்டாளா என்று சொல்லி பூர்ணகும்பம் ஆரத்தியை ஏற்றுக்கொண்டு உள்ளே வந்தார். நானும் கூடவே வந்தேன். தேதியூர் ஜானகி மாமியாத்து வழியாகத்தான் கம்யூனிடி ஹால் வரவேண்டும், அவாத்து வாசலில் இது நம்மாகம் என்று அந்த மாமி சொன்னாள். என்னால் வீடுவீடாக வரமுடியாதென்று அப்பவே சொன்னேனே என்று தம் திம் என்று கோபத்தில் குதிக்க ஆரம்பித்து விட்டார். அவாத்துக்கே போகாதபோது நம்மாத்துக்கு எங்கு வரப்போகிறார் என்று நினைத்து ஆத்துக்கு ஓடிப்போய் வாங்கி வைத்திருந்த பழம், பூ மாலைகள் எல்லாம் எடுத்துக்கொண்டு சுந்தரம் மாமியையும்



அழைத்துக்கொண்டு கம்யூனிட்டி ஹால் வந்து ஸ்ரீ பெரியவாளுக்கு சமர்பித்து விட்டு வந்தனம் செய்து விட்டு தட்டுக்களை ஆத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு சுந்தரம்பாளை இருக்கச்சொல்லிவிட்டு எந்தத் தெரு வழியாகப் போகிறார் என்பதைப் பார்ப்பதற்காக மறுபடியும் போனேன். அதற்குள் ஸ்ரீ பெரியவாள் நாலைந்து தெரு வந்து விடார். நீலாவாகம் எங்கடா என்று ஒவ்வொரு தெருவிலும் கேட்டுக்கொண்டே வந்தாராம். நான் போனதும் இங்கே வருகிறீர்களே ஸ்ரீ பெரியவாள் உங்காத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் ஓடுங்கள் என்று சொன்னான். ஓடிவந்து பூர்ணகும்ப, ஆரத்தி எடுத்துக்கொண்டு சுந்தராம்பாளும் நானும் வாசலில் வருவதற்குள் ஸ்ரீ பெரியவாள் வாசலில் வந்து விட்டார்கள். பூர்ணகும்ப ஆரத்தி எடுத்ததும் ஆத்தில் கிணறு இருக்கிறதா என்று கேட்டார். அப்போது நம்மாத்தில் கிணறு இல்லை. நம்மாத்தில் இல்லையென்று சொல்லாமல் அடுத்தாத்தில் இருக்கிறது என்று சொன்னேன். உடனே உள்ளே வந்து விட்டார். அப்பொழுது வாடகைக்கு விட்ட ரூம் காலியாய் இருந்தது. உள்ளே வந்து எல்லா உள்ளையும் பார்த்தார். காலியாய் இருக்கும் உள்ளில் ஸ்ரீ பெரியவாள் உட்காரலாம் என்று சொன்னேன். நான் உள்ளே உட்கார்ந்தால் அத்தனை ஜனங்களும் வீட்டுக்குள் வந்து விடுவார்கள் தாங்காது என்று சொல்லிவிட்டு தோட்டத்தில் ஒரு ஓரமாக உட்காந்தார்கள். அத்தனை ஜனங்களும் உள்ளே வந்து விட்டார்கள். ஒரே கூட்டம். நான் ஸ்ரீ பெரியவாளுக்கு வாங்கிய பழங்கள் மாலை எல்லாம் பொது ஸ்லத்தில் வைத்து விட்டேன். கையில் கொஞ்சம் கல்கண்டும் பத்து ரூபாய் பணமும் இருந்தது. அதை வைத்து வந்தனம் பண்ணினேன். இப்பொழுது ஸ்வாமி வைத்திருக்கும் உள் படத்தில் போட்டிருக்கும் அந்த சந்தன மாலையைக் கொடுத்தார். அதற்குள் மடத்து பசங்கள் நம்மாத்தில் இருந்த பெரிய தவலையைத் தேய்த்து பக்கத்தாத்தில் வேலிக்கு அந்தப்பக்கம் ஒரு பையன் ஸ்நானம் பண்ணிவிட்டு தண்ணி இழுத்துக்கொடுக்க இந்தப்பக்கம் தவலையை வைத்துக் கொண்டு அவனும் ஸ்நானம் பண்ணி அந்தப்பக்கத்திலிருந்த தண்ணியை வாங்கிக்கொட்டி இரண்டு பேருமாக ஸ்வாமி உள்ளுக்குப்பின்னால் தோட்டத்தில் மாமரத்தின் கீழ் வைத்தார்கள்.

ஸ்ரீ பெரியவாள் ஸ்நானம் பண்ணி அனுஷ்டானம் பண்ணி ஜபம் செய்தார்கள். பிறகு மறுபடியும் வாசலில் வந்து வராண்டாவில் உட்கார்ந்தார்கள். அப்பொழுது மாமியார் ஊருக்குப் போயிருந்தார். இந்தாத்து அத்திம்பேரும் ஆபீஸில் இருந்து வரவில்லை. நான் தவியாய்த் தவித்து வாசலுக்கும் உள்ளுக்கும் அலைந்தேன். ஆறு மணி ஆகிவிட்டது. ஸ்ரீ பெரியவாள் எனக்கு நாழியாய் விட்டது பல்லாவரம் போகணும் அவன் வந்தால் ஞாயிறுக்கிழமை ஸம்ஸக்ருத காலேஜில் இரண்டு பேருமாய் வந்து ப்ரஸாதம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு கிளம்பி விட்டார்.

ஞாயிற்றுக்கிழமை இரண்டு பேரும் மடத்துக்குப் போனோம். ஸ்ரீ பெரியவாள் வெளியில் வந்தார். எங்களுக்குப் ப்ரஸாதம் கொடுத்துவிட்டு அத்திம்பேரிடம் ரொம்ப நாழி வீட்டுக்கு வராமல் இருக்காதே. அவளையும் தனியாக இருக்கும்படி செய்யாதே. சீக்கிரம் ஆத்துக்கு வந்துவிடு என்று சொன்னார்.

விஜயவாடாவில் கனகதுர்கா என்னும் அம்பாள் ரொம்ப சக்திவாய்ந்தவள். ஸ்ரீ பெரியவாளுடன் கனகதுர்கா கோவில் போய் அம்பாளை தரிசித்துவிட்டு வந்தோம். விஜயவாடாவில் ஒருவாரம் தரிசனம் செய்து விட்டு நான் மெட்ராஸ் வந்து விட்டேன். ஸ்ரீபெரியவாள் அனுக்கிரஹத்தால் என் மாமியாரும் 20 நாளைக்கு ஒரு தடவை ஸ்ரீ பெரியவாள் தரிசனம் பண்ணிவிட்டு வா என்று அனுப்புவார். போனதும் ஸ்ரீ பெரியவாள் உன் மாமியார் அனுப்பினாளோ? என்று கேட்பார். ஆமாம் என்று சொல்லுவேன் விஜயவாடாவில் இருந்து ஸ்ரீ பெரியவாள் ராஜமஹேந்த்ரபுரம் கிளம்பிப் போனார். நான் ராஜமண்ட்ரி போனேன். அங்கும் ஒரு வாரம் இருந்தேன். அங்கும் வீணை கிடைத்தது. ஸ்ரீ பெரியவாள் உத்தரவு பண்ணி அவர்கள் கொடுப்பதால் அவர்களும் சந்தோஷமாகக் கொடுப்பார்கள். வீணை வித்வான்கள் எத்தனையோ பேர் இருந்தும் எனக்கு இந்த சான்ஸ் கிடைத்தது என்று ஒவ்வொரு தரமும் பரம சந்தோஷமாக இருக்கும். அப்பொழுது ஆந்த்ராவில் புஷ்கரணி புண்ணியகாலம். நமக்கு மாமாங்கம் 12 வருஷத்துக்கு வருவது போல் அவர்களுக்கு கோதாவரி தீரத்தில் புஷ்கரணி புண்யகாலம். ஊரே ஒரே கோலாஹலம். கூட்டம். கோமுட்டி பெண்களெல்லாம் ஒவ்வொரு பித்தளை தட்டிலும் நிறைய குங்குமம் மஞ்கள் பொடி வெத்திலை பாக்கு வைத்து ஒவ்வொருவருக்கும் கோதாவரிக் கரையில் கொடுப்பார்கள். அது பார்ப்பதற்கு ரொம்ப அழகாக மங்களகரமாக இருக்கும். தமிழ் நாட்டிலிருந்து நிறைய பெண்கள் மடத்துக்கு வந்திருந்ததால் அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம். நிறைய பேர்கள் இப்படிக் கொடுப்பார்கள். அது அவர்களுக்கு ரொம்ப புண்ணியம். வாங்கிக்கொள்ளுபவர்களுக்கு ஸ்நான பலன் போய்விடும். நிறைய தட்டு கிடைக்கிறது என்று வாங்கிக் கொள்வார்கள். விஷயம் தெரிந்தவர்கள் மாட்டிக்கொள்ளாமல் வருவோம். அப்படியும் ஒரு தடவை மாட்டிக்கொண்டோம். கொடுக்கும் மஞ்சள் குங்குமம் வேண்டாமென்று சொல்லக்கூடாது. அதனால் வாங்கிக்கொண்டோம். அந்த புண்ணிய காலத்தில் கோமுட்டிகள் நிறைய தானம் பண்ணுவார்கள்.

ஒரு நாள் ஸ்ரீபெரியவாள் சாயந்திரம் பூஜை ஆன பிறகு 10 மணிக்கு கோதாவரிக் கரையில் போய் உட்கார்ந்தார்கள். அன்று பௌர்ணமி, சுற்றி ஜனங்கள் உட்கார்ந்து கொண்டு ஸ்ரீ பெரியவாள் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்தோம். பிறகு மடத்திலிருந்து என்னை வீணையை எடுத்துக்கொண்டு வரச்சொன்னார். நான் கொண்டு வந்ததும் பக்கத்திலேயே உட்கார்ந்து வாசிக்கச் சொன்னார். பௌர்ணமி சந்திரன்



பூர்ணமாக இருந்தது. கோதாவரி நதி, தெளிந்த வானம், சுற்றிலும் ஜனங்கள் நடுவில் ஸ்ரீ பெரியவாள். அந்த சூழ்நிலை ரொம்ப நன்றாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. ஒருமணி நேரம் வாசித்தபின் கோதாவரி ஓடத்தையும் வாசிக்கச்சொன்னார். பிறகு மங்களம் வாசிக்கச்சொன்னார். பிறகு வீணையின் மகத்துவத்தை சொல்லி விட்டு பணம் வாங்கிக்கொண்டு வீணை சொல்லிக் கொடுக்கக்வடாது என்று சொன்னார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் பணம் வாங்கிக் கொண்டுதான் வீணை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பெரியவாள் தான் சொல்லிக்கொடு என்று சொன்னார் இப்பொழுது இப்படிச் சொல்லுகிறாரே என்று மஹா வேதனைப்பட்டுக் கொண்டே மடத்துக்கு வந்து விட்டேன். ராத்திரி முழுக்கத் தூங்கவில்லை. 4 மணிக்கு எழுந்து வந்து பூஜைக்கட்டில் நின்று கொண்டு அழுது கொண்டிருந்தேன். பூஜைக்கட்டில் கைங்கர்யம் செய்து கொண்டிருந்த மேலூர் மாமா என்னும் வயதான பெரியவர் பாரா காவலாக இருந்தார். நான் சும்மா நின்றால் ஏன் சும்மா நிற்கிறாய் வீணையை வாசி என்பார். அப்பவும் அப்படிச் சொன்னார். ஸ்ரீ பெரியவாள் எந்தப் பக்கம் வருவாரென்பதைக் கூட நினைக்காமல் வேதனைப்பட்டுக் கொண்டு வாசித்துக் கொண்டிருந்தேன். மற்றவர்களெல்லாம் வேறு பக்கம் ஆரத்திக் எடுப்பதற்காக நின்று கொண்டிருந்தார்கள். ஸ்ரீ பெரியவாள் நான் இருக்கும் பக்கம் வந்தார். நான் வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டு எழுந்து ஸ்ரீ பெரியவாளுக்கு வந்தனம்செய்து விட்டு அழுது கொண்டே நின்றேன். ஏன் அழுகிறாய் என்று ஸ்ரீ பெரியவாள் கேட்டார். அதற்கு நான் ஸ்ரீ பெரியவாள் வீணை கற்றுக்கொடு என்று உத்தரவு கொடுத்ததால் தான் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தேன். ஆனால் நேற்று ராத்திரி பணம் வாங்கிக்கொண்டு வீணை சொல்லிக் கொடுக்கக் கூடாது என்று சொன்னதும் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் செய்வது தப்பா, சரியா என்றே புரியவில்லை ரொம்ப வேதனையாக இருக்கிறதென்று சொல்லி அழுதேன். அதற்கு ஸ்ரீ பெரியவாள் நான்தானே உன்னை சொல்லிக் கொடுக்கச் சொன்னேன். நீயாகவே செய்யவில்லையே நீ போய் சொல்லிக்கொடுப்பதாகச் சொன்னாய். அதனால் போய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டாமென்று சொன்னேன். வீட்டில் வந்து கற்றுக் கொள்வதாக இருந்தால் சொல்லிக்கொடு. அவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை வாங்கிக்கொள் என்று சொன்னேன். அதனுடைய பாவ புண்ணியங்களை நான் பார்த்துக்கொள்கிறேன். கவலைப்படாமல் சொல்லிக் கொடு என்று சொன்னார். அந்த சமயத்தில் என் வீட்டு நிலமை எப்படி இருந்ததென்று ஸ்ரீ பெரியவாளுக்குத் தெரியும்.

ஸ்ரீ பெரியவாளுடைய பூர்வாச்ரம தங்கை பேர் லலிதாம்பா, ரொம்ப ஸாத்வீகம். ரொம்பப் படித்தவரில்லை யென்றாலும் விஷயங்களை ரொம்ப அழகாக மனதில் படும்படி பேசுவார். நாங்கள் எல்லாரும் அவரை அத்தை

என்றே சொல்வோம். ஸ்ரீ பெரியவாள் என்னை அடிக்கடி கூப்பிடுவதும் வீணை வாசிக்கச் சொல்லுவதும் பார்த்து அத்தைக்கு ரொம்ப சந்தோஷம். நீலா ஸ்ரீ பெரியவாளுக்கு ஆத்மார்த்த சிஷ்யை. உன்னைப் பார்த்தாலே எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. உனக்கு நான் ஸ்ரீ பாதுகா பஞ்சகம் சொல்லிக்கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொடுத்தார். அதையும் வரப்ரசாதமாக எடுத்துக் கொண்டு தினமும் சொல்லுகிறேன். ஓடம் பாடின பாட்டியின் பிள்ளை அப்பைய சாஸ்த்ரிகள். நான் அவரை முதல் முதலில் பார்க்கும் போதே வயதானவராக இருந்தார். அவர் ஸ்ரீ பெரியவாளுக்கு பூஜைகைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். அவாத்து மாமிக்கு தாயுமானவர், ராமலிங்க ஸ்வாமி, அப்பர், அருணகிரிநாதர் எல்லாரும் பாடின பாடல்கள் எல்லாம் அத்துபடி. அவர்கள் தெலுங்கு ஆனாலும் தமிழ்ப் பாடல்கள் அவ்வளவு அருமையாகப் பாடுவார். குரல் ரொம்ப நன்றாக இருக்கும் செல்லம் மாமி என்று ஒரு மாமி கல்கத்தாவில், அனந்தக்ருஷ்ண சாஸ்திரிகள் என்ற ஒருவர் ஸ்மஸ்க்ருத காலேஜில் ப்ரின்ஸ்பாலாக இருந்தார். அவருடைய பெண், ஸம்ஸ்க்ருதத்தில் மஹா பண்டிதை. அவர் அப்பா சொல்லிக் கொடுத்தது. அவளைப் பார்த்தால் அசடு மாதிரி இருப்பாள் ஆனால் மேதை, ஸ்ரீ பெரியவாள் வேத விஷயங்களெல்லாம் பேசுவார். நாங்கள் நால்வரும் சேர்ந்து விட்டால் எங்களுக்கு பொழுது போவதே தெரியாது. அப்படிப் பேசுவோம். வெட்டிப்பேச்சு அல்ல. எல்லாம் ஸத்விஷயங்கள், பாடல்கள், பக்தி, ஆகியவை பற்றிதான் இருக்கும். ஏன் இதை எழுதினேனென்றால் ஸத்துக்கள் ஸகவாஸம் வேண்டும் என்று வேதாந்த பாட்டில் வருவது போல் ஸத்துக்களோடு சேர்ந்து பேசுவதில் ஒரு ஆனந்தம்.

ஒரு வாரம் ராஜமண்ட்ரியில் இருந்து விட்டு ஊருக்கு கிளம்பப்போகிறேன். என் நாத்தனார் அங்கேயே இருந்தார். ஸ்ரீ பெரியவாள் யாத்திரை கிளம்பப்போகிறார். பத்ராசலம் போகப் போகிறாரென்று மடத்தில் சொன்னார்கள். பத்ராசலராமன் ரொம்ப விசேஷம் சின்ன வயஸிலிருந்து எதற்கெடுத்தாலும் ராமான்னு சொல்லு என்று அப்பா அடிக்கடி சொல்லுவார் அதனால் எனக்கு ராமனிடம் அலாதி பக்தி. அதனால் ராமதரிசனம் எனக்குக் கிடைக்கவில்லையே என்று ரொம்ப வருத்தம். காலையில் கோதாவரி ஸ்நானத்துக்குப்போன போது ராமா எனக்கு உன் தரிசனம் கிடைக்க அநுக்கரஹம் பண்ணு என்று வேதனையுடன் ப்ரார்த்தித்தேன். பத்ராசலம் கோவில் கோதாவரிக் கரையிலிருந்து தெரியும். அந்தத்திக்கில் நமஸ்காரம் பண்ணினேன். இப்படியெல்லாம் பண்ணினால் ராமன் உன்னை அழைத்துக்கொள்வாரா என்று அங்கிருந்தவர்கள் என்னைக் கேட்டார்கள். என்னமோ என் மனது ஆதங்கப்படுகிறது என்ற சொன்னேன். ராத்திரி மெட்ராஸ் கிளம்பி வந்து விட்டேன். வந்ததும் மாமியாரிடமும் அத்திம்பேரிடமும் ஸ்ரீ பெரியவாள் பத்ராசலம் போகக்



கிளம்பிக்கொண்டிருக்கார் என்னால் போகமுடியவில்லை என்று சொன்னேன். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. பதினைந்துநாள் கழித்து ஒருநாள் நீ ராஜமண்ட்ரி போய் வருகிறாயா என்று மாமியார் கேட்டார். அத்திம்பேரும் சொன்னார் எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. கரும்பு தின்னக் கூலியா என்று அன்றே கிளம்பி விட்டேன். ராஜமண்ட்ரியில் ஸ்டேஷனிலிருந்து ஒரு ரிக்ஷா வைத்துக்கொண்டு மடத்துக்குப் போனேன். அன்றுதான் ஸ்ரீ பெரியவாள் பத்ராசலம் கிளம்புகிறார். முதலில் ஏற்பாடு செய்தபடி போகவில்லையாம் எனக்கு ஒரே சந்தோஷம் எல்லாரும் பத்ராசலம் கிளம்பினார்கள். ஸ்ரீ பெரியவாள் போட்டில் போனார். நாங்களெல்லாரும் பஸ்ஸில் போனோம். ஸ்ரீ பெரியவாள் போட் கோதாவரிக் கரைக்கு வருவதற்கும் எங்கள் பஸ் மலையடி வாரத்துக்கும் போவதற்கும் சரியாக அமைந்தது. ஸ்ரீ பெரியவாள் படகில் வந்து ஸ்நானம் செய்வதற்குள் நாங்களும் ஸ்ரீ பெரியவாள் இருக்குமிடம் போய்ச் சேர்ந்து விட்டோம். ஸ்ரீ பெரியவாளுடன் நாங்களும் ஸ்நானம் செய்து புடவை கட்டிக்கொண்டு ரெடியாக இருந்தோம். ஸ்ரீ பெரியவாள் மலையேற ஆரம்பித்ததும் நாங்களும் கூடவே போனோம். மலையேறிக் கோவிலுக்குள் ஸ்ரீ பெரியவாள் போனார். கர்ப்பக்ரகத்தில் ஸ்ரீ ராமர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். அந்த ஊரில் ஸ்ரீராமர் சீதையை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். நாங்கள் வெளியில் நின்று கொண்டிருந்தோம். ஸ்ரீ பெரியவாள் கோவில் குருக்களை பத்ராசலம் ராமர் பேரில் ஒரு பாட்டு பாடச்சொன்னார். அவர் பாடினதும் அனந்தானந்த ஸ்வாமிகளை பாடச்சொன்னார். அவர் பாடினதும் நீலா இங்கே வா என்று ஸ்ரீ பெரியவாள் கூப்பிட்டார் கர்ப்பக்கத்திற்குள் நான் எப்படிப் போவது என்று தயங்கி நின்றேன். உன்னைத்தான் இங்கே வா என்று கூப்பிட்டார். உள்ளே போனதும் நீ ஒரு பாட்டுப்பாடு என்று சொன்னார். எனக்கு உண்டான சந்தோஷத்தை எப்படிச் சொல்வது தெரியவில்லை. பத்ராசல ராமர் பேரில் ராமசந்த்ரா ரா ரா ஸ்ரீ ராமபத்ரா ரா ரா என்னும் பாட்டைப் பாடினேன். சரி போ என்று ஸ்ரீ பெரியவாள் சொன்னதும் வெளியில் வந்தேன். ராமரே ஸ்ரீபெரியவாள் மூலமாக என்னை வருவித்து பாடச்சொன்ன மாதிரி தான் எனக்கு இப்பவும் தோன்றுகிறது.

பத்ராசலத்தில் மூன்று நாட்கள் இருந்தார். அங்கு எங்களுக்கு சமைக்கவே இடமில்லை. மூன்றாவது நாள் பட்டினியாக இருக்க முடியாது போல் தோன்றிற்று. ரவா உப்புமா கிளறி சாப்பிடலாமென்று குமட்டி மூட்டி இலுப்பச் சட்டியைப் போட்டதும் ஸ்ரீ பெரியவாள் கிளம்ப போகிறாரென்று சொன்னார்கள். தாளித்து ஒன்றும் செய்யாமல் வெறும் ரவாவை தண்ணியை கொதிக்க வைத்து கிளறி எடுத்தக்கொண்டோம். நாங்கள் அவசர அவசரமாக சாமான்களை எடுத்துக்கொண்டு ரவா கிளறினதை ஒரு டப்பாவில் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டோம். ஸ்ரீ பெரியவாள் கிளம்பி இரண்டு நிமிடம் ஆய்விட்டால் அவரைப் பிடிக்க முடியாது அவ்வளவு

வேகமாக நடப்பார். ஓடினால் கூட பிடிக்க முடியாது. அவருடனேயே கிளம்பி பக்கத்து ஊருக்குப் போய்விட்டோம். சாயந்திரம் 6 மணி, ஸ்ரீ பெரியவாள் தங்குமிடத்தில் சில வீடுகள் இருந்தன. அங்கு ஒரு திண்ணையில் சாமான்களை வைத்துக் கொண்டு உட்கார்ந்தோம். பசி ஒரே மயக்கம். ஆந்தரா வீட்டுக்காரர்கள் நாங்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ரொம்ப விசாரித்து உபசரித்து பால் வேண்டுமா தயிர் வேண்டுமா என்று கேட்டார்கள். இரண்டு டம்ளர் பால் வாங்கிக்கொண்டு கொஞ்சம் மோரும் உப்பும் கேட்டோம். அதுவும் கொடுத்தார்கள். அந்த மோரையும் உப்பையும் போட்டு ரவாவில் கரைத்து தண்ணியும் விட்டு கரைத்து குடித்தோம். அமிர்தம் எப்படியிருக்குமென்று அப்போது தோன்றியது. ராத்திரி அந்தத் திண்ணையிலேயே படுத்துக்கொண்டோம். பாலையும் காய்ச்சிக்குடித்தோம். மறுநாள் காலையிலும் பால் கொடுத்தார்கள். ஸ்ரீ பெரியவாள் தரிசனம் பண்ணிவிட்டு வந்து பாலைக் காய்ச்சி டீ போட்டுக்குடித்து விட்டு ஸ்ரீ பெரியவாளுடன் மறுபடியும் கிளம்பிவிட்டோம். இந்த மாதிரி யாத்திரைபோவது ரொம்ப ஆனந்தமாக இருக்கும். நாடோடி மாதிரி ஊர் ஊராய்ப் போவது, கிடைத்த இடத்தில் ஏதாவது பண்ணி சாப்பிடுவது மறுபடியும் கிளம்புவது இப்படி பத்து நாள் போனோம். இதெல்லாம் ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சி.

மெட்ராஸ் வந்துவிட்டு கொஞ்சநாள் கழித்து மறுபடியும் ஆந்த்ராவில் ஸ்ரீ பெரியவாளை தரிசித்துக் கொண்டு கூடவே போனோம். சில கிராமங்கள் போனோம் ஒரு கிராமத்தில் தங்கும் போது அன்று மார்கழி மாதம். அங்கு தங்கி தனுர் மாஸ பூஜை, மற்ற காலபூஜைகளை முடித்துக்கொண்டு மூன்று மணிக்கு ஸ்ரீ பெரியவாள் கிளம்புவதாக இருந்தார். அந்தஊர் ஜனங்கள் ஸ்ரீ பெரியவாளிடம் வந்து அடுத்த ஊர் இரண்டு பக்கமும் மலையாகவும் நடுவில் ரோடாக இருக்கும். வழியிலும் சில கிலோ மீட்டர்கள் நடக்க வேண்டும். மூன்று மணிக்கு கிளம்பினால் அந்த இடம் போகும்போது இருட்டிவிடும். அங்கு துஷ்டமிருகங்கள் வரும். திருட்டு பயமும் ஜாஸ்தி. அதனால் ஸ்ரீ பெரியவாள் 12 மணிக்கே கிளம்ப வேண்டும். பூஜையாகிக் கிளம்புவதற்கு நேரமாய்விடும். அதனால் நாளைக்காலை தநுர்மாஸ பூஜை முடித்து, உடனே கிளம்பலாம் என்று சொன்னார்கள். இல்லை இன்று தான் கிளம்பியாக வேண்டுமென்று சொல்லி புதுப் பெரியவாளையும் மடத்து ஆபீஸையும் 12 மணிக்கே கிளப்பி அனுப்பிவிட்டு பூஜைகளை முடித்துக்கொண்டு மூன்று மணிக்குத் தான் கிளம்பினார். அன்று பிக்ஷா வந்தனம் செய்ய வேண்டியவர்கள் பிக்ஷா வந்தனம் செய்து விட்டுத்தான் கிளம்ப வேண்டும். மானேஜர், அவாத்து மாமி அவர்களுடைய பேத்தி சின்னப்பெண் நானும் என் நாத்தனார் நாங்கள் தங்கிவிட்டோம். ஸ்ரீ பெரியவாள் கிளம்பின போது நாங்களும் கிளம்பினோம். கொஞ்சதூரம் போனதும் சீக்கிரம் போகவேண்டுமென்று ஸ்ரீ பெரியவாளை மேனாவில் ஏறச்சொல்லி எல்லாரும் ப்ரார்த்தித்துக் கொண்டார்கள். நாங்களும் கூட நடந்து வந்து கொண்டிருக்கிறோம். எங்களை மடத்து மாட்டுவண்டியில் ஏறச்சொல்லிவிட்டு ஸ்ரீ பெரியாள் மேனாவில் ஏறினார்கள். மேனா பறந்தது. எங்கள் வண்டியும் கூட ஓடிற்று. ஒரு கிலோமீட்டர் போனதும் ஸ்ரீ பெரியவாள் எங்கள் வண்டிகள் வருகிறதா என்று பார்த்துவிட்டு கிளம்புவார். அதற்குள் மாலையானதால் இருட்ட ஆரம்பித்துவிட்டது.



மேனாக்காரர்கள் கூட இருந்த சிஷ்யர்கள் இருட்ட ஆரம்பித்து விட்டதால் வேகமாகப் போய் விட்டார்கள். ஸ்ரீ பெரியவாள் மாட்டுவண்டிகள் வருகிறதா என்று கேட்டால் வருகிறது என்று சொன்னார்கள். மூன்று கிலோமீட்டர் போனதும் ஸ்ரீ பெரியவர்கள் மேனாவை நிறுத்தச்சொல்லி ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு விட்டார்கள். சாமான் வண்டி போய் விட்டது. பாத்திர வண்டியும் எங்கள் வண்டியைத் தாண்டிப்போய்விட்டது. எங்கள் வண்டி மாடுகளுக்கு தண்ணிதாகம். நடக்க முடியாமல் நடந்தது. எங்களிடம் ஒரு கூஜா தண்ணிதான் இருந்தது. அது எப்படிப் போதும். இரண்டு மாடுகளும் படுத்துக்கொண்டு விட்டது. வண்டிக்காரன் என்ன கிளப்பியும் எழுந்திருக்கவில்லை. எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நன்றாக இருட்டிவிட்டது. பயம் வேறு. ஒன்றும் புரியவில்லை. நடந்து போய்க்கொண்டே இருப்போம், ஏதாவது வண்டிகள் வழியில் வந்தால் வண்டிக்காரன் என்ன கேட்கிறானோ அதைக்கொடுத்து வண்டியில் போவோம் என்று நாங்கள் குருநாதா குருநாதா என்று கத்திக்கொண்டே பத்தடி நடந்தோம். எதிரில் காரோ, லாரியோ இரண்டு விளக்குகள் தெரிந்தது. மனதில் தைரியம் வந்து. அதை நிறுத்தலா மென்று நின்றோம். வந்தது மடத்துக்கார். ஆந்த்ராவில் மடத்து உபயோகத்துக்காக கொடுத்திருந்தார்கள். கிட்ட வந்ததும் கார் ட்ரைவர் என்ன நீங்களெல்லாம் இங்கே இருக்கிறீர்களே வண்டியெல்லாம் அடுத்த க்ராமத்துக்குப் போய் விட்டது என்று சொன்னார்களே. நீ போக வேண்டாமென்று சொன்னார்கள். நான்தான் எதற்கும் பார்த்துவிட்டு வரலாம் என்று வந்தேனென்று அவன் ஆச்சர்யத்துடன் சொன்னான். மடத்து சிஷ்யர்களுக்கு நாங்கள் கூட வந்தது கோபம். ஸ்ரீ பெரியவாளைத் தொந்தரவு செய்கிறோம் என்று எண்ணம். நாங்கள் ஏழுபேரும் அந்தக்காரில் ஏறிக்கொண்டு ஸ்ரீ பெரியவாள் இருக்குமிடம் போய் சந்தோஷத்தோடு ஸ்ரீ பெரியவாளுக்கு வந்தனம் பண்ணினோம். ஸ்ரீ பெரியவாள் சௌக்யமாய் வந்து சேர்ந்தீர்களா என்று கேட்டார். ஆமாம் ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹத்தால் சௌக்யமாய் வந்து சேர்ந்துவிட்டோம் என்று சொன்னோம். ஆமாம் உங்களை பற்றி மட்டும் நினைத்துக்கொண்டீர்களே? அந்த வண்டிக்காரனும் மாடுகளும் என்ன செய்வார்கள் என்று யோஜித்துப் பார்த்தீர்களா. வண்டிக்காரனும் மனிதன்தானே அவனுக்குப் பயமாய் இருக்காதா என்று நினைத்தீர்களா என்று கேட்டார். எங்களுக்கு ரொம்ப அவமானமாய்ப் போய்விட்டது.

எங்களை மட்டும் காப்பாற்றிக் கொள்ள முயற்சித்தோமே தவிர வண்டிக்காரனையும் மாடுகளையும் நினைத்துப் பார்க்க- வேயில்லை. உடனே அந்தக் காரிலேயே, நாலு ஆட்கள், தடிகள், ஒரு அரிக்கேன் லைட், எல்லாத்தையும் அனுப்பிவிட்டு ஒரு ஆளை பக்கத்து ஊருக்கு ஸைக்கிளில் அனுப்பி ஒரு லாரியில் இரண்டு புது மாடுகளையும் இரண்டு அண்டா தண்ணீரையும் வைத்து வண்டி இருக்குமிடம் அனுப்ப ஏற்பாடு பண்ணச் சொல்லிவிட்டு, லாரி வரும் வரை ஸ்ரீ பெரியவாள் அங்கேயே உட்கார்ந்திருந்தார். கார் திரும்பி வந்ததும், எங்களைக் காரில் ஏற்றி பக்கத்து ஊருக்கு அனுப்பினார். லாரி, வண்டி இருக்குமிடம் போய்ப் பழைய மாடுகளுக்கு தண்ணி காட்டி லாரியில் நிறைய வைக்கோல் போட்டு அந்த இரண்டு மாடுகளையும் லாரியில் ஏற்றிப் புதுமாடுகளை வண்டியில் கட்டி ஏற்பாடு செய்தனர். லாரியில் பழைய மாடுகளை பார்த்துவிட்டு ஸ்ரீ பெரியவாள் கிளம்பி பக்கத்தூருக்கு வந்து வாசலிலேயே உட்கார்ந்தார். ராத்திரி ஒரு மணிக்கு புதுமாடுகள் வண்டி வந்ததும் உள்ளே விச்ராந்தி பண்ணிக் கொள்ளப்போனார்.

ப்ரொதட்டூர் என்னும் ஊரில் சிவன் கோவில் கும்பாபிஷேகத்துக்கு இருந்தார். அந்த ஊரிலும் கொஞ்ச நாள் இருந்தார். நான் மெட்ராஸ் வந்துவிட்டேன். கொஞ்சநாள் கழித்து ஸ்ரீபெரியவாள் திருப்பதி போகிறார் என்று கேள்விப்பட்டு நானும் திருப்பதி போனேன். அங்கு கீழ்திருப்பதியில் மூன்றுநாள் இருந்துவிட்டு மேல்திருப்பதி கிளம்பினார். நாங்களும் கூடப்போனோம். ஸ்ரீ பெரியவாள் காளிகோபுரம் ஏற ஆரம்பித்தார். நாங்களும் போனோம். இரண்டு மண்டபம் தாண்டினதும் ஸ்ரீ பெரியவாள் கண்ணனைக் கூப்பிட்டு திருப்பதிமலை ஏறும் போது கோவிந்த நாமம் சொல்ல வேண்டும். நீ சொல்லி எல்லாரையும் சொல்லச்சொல் என்றார். கண்ணன் கோவிந்தா கோவிந்தா என்று கத்திச்சொன்னான். ஸ்ரீ பெரியவாள் அப்படிச்சொல்லாதே கோவிந்தா கோவிந்தா என்றால் எல்லாம் போச்சு, கோவிந்தா வாய் விட்டது என்று அர்த்தம். கோவிந்த கோவிந்த கோவிந்த என்று சொல்லு என்று ஸ்ரீ பெரியவாள் சொன்னதும் நாங்களும் சொன்னோம். திருப்பதி மலையில் கோவிந்த நாமம் எங்களுக்கு உபதேசமாயிற்று.

மலையேறி உடனே ஸ்ரீ பெரியவாளுடன் ஸ்வாமிதரிசனம் பண்ணிக்கொண்டு ஸ்ரீ பெரியவாளுக்காக ஏற்படுத்தப்பட்ட இடத்துக்குப் போய்விட்டு ஸ்ரீ பெரியவாளுக்கு வந்தனம் செய்து நாங்கள் தங்க இடம் பார்த்துக் கொண்டோம். ஒருவாரம் ஸ்ரீ பெரியவாளுடன் தினமும் சுவாமி தரிசனம். ரொம்ப பக்கத்திலும் அரைமணி தரிசனமும் நன்றாகக் கிடைத்தது. வெள்ளிக்கிழமை அபிஷேகத்திற்காக வியாழக்கிழமையே அலங்காரங்களை கலைத்து விடுகிறார்கள். ஒரு வஸ்த்ரம் மட்டும் மூடி இருக்கிறார்கள். அப்பொழுது ஸ்வாமியைப் பார்த்தால் சின்ன சிலையாக அம்பாள் ஸ்வரூபத்தில் லாவண்யமாக ஒய்யாரமாக நின்று கொண்டிருக்கிறார். அலங்காரத்தில் பார்க்கும் ரூபத்திற்கும் இந்த ரூபத்திற்கும் நிறைய வித்யாஸமிருக்கிறது. வியாழக்கிழமையும் நல்ல தரிசனம். வெள்ளிக்கிழமையும் அபிஷேகம் முழுக்கப் பார்த்தோம். வெங்கடாசல ஸ்வாமியை இந்த மாதிரி தரிசனம் கிடைப்பது சாமான்யமாகக் கிடைக்காது. ஆயிரக்கணக்கில் பணம் கட்டினாலும் இவ்வளவு கிட்டத்தில் பார்க்க முடியாது. ஸ்ரீ பெரியவாளுடன் போனதால் இந்த திவ்ய தரிசனங்கள் கிடைத்தன.



திருப்பதி மலையிலிருந்து இறங்கி திருச்சானூருக்கு ஸ்ரீ பெரியவாள் வந்தார். அங்கு ஒரு வாரம் இருந்தார். அப்பொழுது ஒருநாள் ஸ்ரீ பெரியவாள் என்னை உள்ளே கூப்பிட்டு மூகபஞ்ச சதியை சொல்லச்சொன்னார். அப்போது திடீர்திடீரென்று மூகபஞ்சசதியில் மாற்றிமாற்றிக் கேட்டார். சாதாரணமாக அந்த மாதிரி பலதடவை கேட்டு நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் அன்று சரியாக வரவில்லை. அன்று காலை நான் ஸ்ரீ பெரியவாளிடம் லண்டனிலிருந்து அத்திம்பேரிடமிருந்து ஒரு மாதமாகக் கடிதம் வரவில்லையென்று சொல்லி இருந்தேன். மத்தியானம் இந்த மாதிரி தட்டுகிட்டுப்போனதும் ஸ்ரீ பெரியவாளிடம் இந்த மாதிரி தட்டுகிட்டுப்போகிறது ஸ்லோகம் மறக்காமலிருக்க ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹம் பண்ண வேண்டுமென்று கேட்டேன். அதற்கு ஸ்ரீ பெரியவாள் ஆமாம் அகமுடையான் சௌக்யமாயிருக்க வேண்டும். சாதாரணமாக இருக்க வேண்டுமென்பதை கேட்காமல் ஸ்லோகம் சரியாக வரவில்லை என்ற சொல்லுகிறாயே ஸ்லோகம் வராவிட்டால் போகட்டுமே என்றார்.

மறுநாள் மத்தியானம் கூப்பிட்டு தலையைக் காலை படி என்று சொன்னார். எனக்கு புரியவில்லை. ஸ்ரீ பெரிவாள் உள்ளே போய்விட்டார். மண்டையை உடைத்தக்கொண்டேன். தெரியவில்லை எதைப்படிக்கச் சொன்னார் என்று யோஜித்து யோஜித்து மண்டை குழம்பியது. ஊருக்கு வந்து விட்டேன். திடீரென்று சௌந்தர்யலஹரியைப் பார்க்கத் தோன்றியது. அதில் முதல் 42 ஸ்லோகம் ஆனந்தலஹரி 43லிருந்து சௌந்தர்யலஹரி அது கேசாதி பாதந்த வர்ணனை. தலை, கால் என்பது அப்பொழுது தான் புரிந்தது. படிக்க ஆரம்பித்தேன். ஸ்ரீ பெரியவாள் கொஞ்நாள் கழித்து காஞ்சீபுரம் வந்தார். அப்பொழுது காஞ்சீபுரம் போனேன். இரண்டு நாளைக்குபிறகு ஸ்ரீ பெரியவாள் மடத்தை விட்டுப்போவதாக இருந்தது. அது எல்லாருக்கும் தெரியாது. ஸ்ரீ பெரியவாள் பூஜை மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒருவர் காமா□ விலாஸம் என்னும் புஸ்தகம் நிறைய கொண்டு வைத்தார். அது ஸம்ஸ்க்ருத புஸ்தகம் தமிழிலும் எழுதியிருந்தது என்று நிறைய வித்வான்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவராகக் கூப்பிட்டு புஸ்தகம் கொடுத்தார். ஜெயராம அய்யருக்கும் கொடுத்தார். பெண்களுக்குக் கொடுக்கவில்லை உள்ளே போய் கொஞ்ச நாழி கழித்து என்னைகூப்பிட்டு அனுப்பினார். உள்ளே போனேன். ஒரு

புஸ்தகத்தின் மேல் அக்ஷதை கல்கண்டு குங்குமம் விபூதி வைத்து இந்தப்ரஸாதத்தை உன் அகமுடியானுக்கு அனுப்பு நீ புஸ்தகத்தைப் படி என்று சொல்லி என்னிடம் கொடுத்தார். பிறகு செல்லம்மா மாமியைக் கூப்பிட்டு ஒரு புஸ்தகம் கொடுத்தார். உடனே அந்தப்ரஸாதத்தை காஞ்சீபுரத்திலேயே ஒரு கவர் வாங்கி அத்திம்பேருக்கு ப்ரஸாதம் அனுப்பினேன். கவர்மெண்ட் மூலமாக அனுப்பினால் நாளாகுமென்று ப்ரத்யேகமாக தனி கவரில் ஜாஸ்தி ஸ்டாம்ப் ஒட்டி அனுப்பினேன். மறுநாள் அத்திம்பேர் மூல உபத்ரவத்தால் ஆபரேஷன் பண்ணிக் கொள்ள ஆஸ்பத்திரிருக்கு கிளம்பினாராம். இரண்டு மாதமாக அவஸ்தைப்பட்டுக்கொண்டு ஆஸ்பத்ரிக்கு தனியாக போக பயந்து போகாதிருந்திருக்கிறார். அவரைப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் உங்கள் உறவினர்கள் இல்லாததால் நீ பயப்பட வேண்டாம் நாங்கள் நன்றாகக் கவனித்துக் கொள்வோம் நாளைக்கு வா என்று சொன்னாராம். இவர் வீட்டை விட்டு கிளம்பினதும் போஸ்ட் மேன் என் கடிதம் கொடுத்தானாம். பிரித்துப்பார்த்ததும் ப்ரஸாதம் இருந்ததால் சந்தோஷமாகவும் தைர்யமாகவும் இருந்ததாம். ஆஸ்பத்திரிக்குப் போய் ஆபரேஷன் பண்ணிக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் எனக்கு விவரமாகக் கடிதம் எழுதியிருந்தார். மடத்தை விட்டு வெளியில் வருவதற்கு முன் ஸ்ரீ பெரியவாள் காட்டுப்பள்ளி என்னும் இடத்தில் 10 மாதம் இருந்தார். எண்ணூரிலிருந்து படகு மூலம் காட்டுப்பள்ளி போக வேண்டும். ஸமுத்ரத்தின் தேக்கம் ஆறு அகலம் தான் இருக்கும் ஆனால் ரொம்ப ஆழம். 8 கிலோமீட்டர் படகில் ஒரு பக்கமாகவே போய் காட்டுப்பள்ளி எஸ்டேட் வரும் போது ஆற்றைப் படகு மூலம் கடக்கவேண்டும். அது ஒரு எஸ்டேட். பெரிய தோட்டம். காடு போல் இருக்கும். சிறு க்ராமமும் இருக்கும். எஸ்ட்டேட் சொந்தக்காரர் வீட்டில் தான் ஸ்ரீ பெரியவாள் 10 மாதம் பூஜையுடன் இருந்தார்.

ஆடி மாதம் கோவிலில் உத்ஸவம் அங்கு ஒரு அம்பாள் கோவில் இருக்கிறது. முதல்நாள் நான், என் நாத்தனார் போனோம். நந்தனத்திலிருந்து பஸ்ஸில் ப்ராட்வே போய் அங்கிருந்து இன்னொரு பஸ் பிடித்து எண்ணூர் போய் அங்கிருந்து படகில் அக்கரைக்குப் போகவேண்டும். நாங்கள் காலை பத்து மணிக்குக் கிளம்பி சாயந்தரம் நாலு மணிக்குப் போய்ச்சேர்ந்தோம். ஸ்ரீபெரியவாள் மரத்தின் கீழ் உட்காந்திருந்தார். நாங்கள் போனதும் வீணையைக் கொண்டு வந்தாயா என்று கேட்டார். வீணையை எப்படிக் கொண்டு போவது. எடுத்து வரும்படியான தூரத்தில் இல்லையே கார் இருந்தால் தான் கொண்டு வரலாம் என்று சொன்னேன். இங்கே வந்தவர்கள் ஒருவரிடமும் கார் இல்லையா என்று கேட்டார். என் காரை அக்கரையில் நிறுத்தி வைத்திருக்கிறேன் என்று ஒருவர் சொன்னார். போய்க் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். கார்க்காரர் எனக்கு வீடு தெரியாது என்று சொன்னார். உடனே ஸ்ரீ பெரியவாள் சேகரைக்கூப்பிட்டு அவருடன்



நந்தனம் போய் வீணையை எடுத்துவா என்று சொன்னார். கார் சொந்தக்காரரும் சேகரும் 4 மணிக்கு உடனே கிளம்பி படகில் போய் எண்ணூரிலிருந்து நந்தனம் போய் வீணையை எடுத்துக்கொண்டு காட்டுப்பள்ளி வரும்போது விடியற்காலம் 4 மணி. வீணை வந்துவிட்டதா என்று அடிக்கடி ஸ்ரீ பெரியவாள் கேட்டுக்கொண்டிருந்தார். வீணை வந்தவுடன் என்னைக் கூப்பிட்டு சீக்கிரமாக வாசி. பூபாளம் வாசி என்று சொன்னார். உடனே உட்கார்ந்து பூபாளம், பெளளி, ஸாவேரி மூன்று ராகத்திலும் வாசித்தேன். பிறகு ஸ்ரீ பெரியவாள் சொன்னார். இன்று இங்கு இருக்கும் அம்பாளுக்கு உத்ஸவம் ஆரம்பம் கொடியேற்றப் போகிறார்கள். அந்த ஸமயத்தில் வீணாநாதம் வேண்டு மென்று தான் அவசரமாக வாசிக்கச் சொன்னேன். வீணாநாதம் அம்பாளுக்கு ரொம்ப ப்ரீதி என்று விளக்கம் சொன்னார். அன்று கொடியேற்றத்தின் போது அங்கிருந்ததால் 10 நாள் உத்ஸவத்திற்கும் அங்கேயே இருந்தோம். தினமும் வீணை வாசித்துக்கொண்டிருந்தேன். உத்ஸவம் பூர்த்தியன்று சாயந்திரம் அம்பாளுக்கு சந்தனாபிஷேகம் அம்பாள் வீதி உலா வருவாள். அதனால் சாயந்திரம் பூஜைக்கு ஸ்ரீ பெரியவாள் 4 மணிக்கே பூஜைக்கு உட்கார்ந்துவிட்டார். அன்று பௌர்ணமியும் சேர்ந்தது. நான் வீணை வாசித்துக்கொண்டிருந்தேன். அபிஷேகம் முடிந்து ஸஹஸ்ர நாமம் அர்ச்சனையை ஸ்ரீ பெரியவாள் வாய்விட்டு ராகத்துடன் சொல்லிக்கொண்டு அர்ச்சனை செய்து கொண்டிருந்தார். ஸ்ரீ பெரியவாள் வாய்விட்டு இரைந்து சொல்லிக்கொண்டிருக்கிறார். நீ வீணை வாசிக்காதே என்று என் நாத்தனார் சொன்னார். எந்த ஸமயத்திலும் வீணையை நிறுத்தாதே என்று ஸ்ரீ பெரியவாள் சொல்லியிருக்கிறாரென்று நான் சொன்னேன். ஒரே அதட்டலாக நிறுத்து என்று என் நாத்தனார் சொன்னார். வீணையைக் கீழே வைத்து விட்டேன். பூஜை முடிந்து ஸ்ரீ பெரியவாள் உள்ளே போய் ஏன் வீணையை நிறுத்தினாள் என்று கேட்டுவா என்று கைங்கர்யம் பண்ணும் நபரை அனுப்பினார். அவன் என்னைக்கேட்டதும் ஸ்ரீ பெரியவாள் ஸப்தமாக ஸஹஸ்ர நாமம் சொன்னதால் அதைக்கேட்க வேண்டுமென்று எல்லாரும் சொன்னார்கள். அதனால் நிறுத்தினேன் என்று சொன்னேன். மணி ஆறு. ஸ்ரீ பெரியவாள் கோவிலுக்கு கிளம்பினார்கள் என்னிடம் வந்து நான் நிறுத்தச்சொல்லும் வரை வீணையை வாசித்துக் கொண்டே இரு என்று சொல்லி விட்டு கோவிலுக்குப் போய்விட்டார். நான் வாசித்துக்கொண்டேயிருந்தேன். பூஜைக்கட்டு பாராவும் வெளிப்பாராவும் தான் இருந்தார்கள். எல்லாரும் ஸ்ரீ பெரியாவளுடன் கோவிலுக்குப் போய் விட்டார்கள். நான் வீணை வாசித்துக் கொண்டிருந்தேன். பத்து மணியாய் விட்டது. அம்பாள் வீதி உலா வந்து கோவிலுக்குள் போனபிறகு கர்ப்பூரஹாரத்தி செய்து ஸ்ரீ பெரியவாளுக்கு பரிவட்டம் கட்டி ரோஜாப்பூ நிலமாலை போட்டு பட்டு வஸ்த்ரம் சாற்றியிருந்தார்கள். என்னிடம் வந்து

இதையெல்லாம் சொல்லி சீக்கிரம் எழுந்து வா ஸ்ரீ பெரியவாள் அம்பாளாகவேயிருக்கிறார். நாம் ஹாரத்தி எடுப்போம் என்று கூப்பிட்டார். நான் வீணை வாசிப்பதை நிறுத்தமாட்டேன். ஸ்ரீ பெரியவாள் உத்தரவு நான் வரவில்லையென்று சொன்னதும் கோபமாகப் போய்விட்டார். மறுபடியும் வந்து ஸ்ரீ பெரியவாள் மடத்துக்கிட்ட வந்து விட்டார். எழுந்து வா என்ற கூப்பிட்டார். இந்த அலங்காரத்தை பிறகு கலைத்து விடுவார் பார்க்க முடியாது என்றார். எனக்கு ஸ்ரீ பெரியவாள் உத்தரவுதான் முக்யம். அலங்காரம் பார்க்காவிட்டால் பரவாயில்லை. நான் எழுந்திருக்கமாட்டேன் என்று சொன்னேன். ஒன்றுக்கும் கொடுத்து வைக்காதவள் என்று மறுபடியும் கோபித்துக்கொண்டு வெளியில் போனார். ஸ்ரீ பெரியவாள் யாரும் என்கூட உள்ளே வரக்கூடாது என்று சொன்னார். எல்லாரும் வெளியில் நின்று விட்டார்கள். அந்த மாலை பரிவட்ட அலங்காரத்தோடே என் எதிரில் வந்து நின்றார். நானும் ஸ்ரீ பெரியவாளும் தான். எல்லாரும் ஜன்னலால் உள்ளே பார்த்துக்கொண்டருந்தார்கள். என் எதிரில் ஸ்ரீ பெரியவாள் வந்து நின்றதும் நான் எழுந்திருந்தேன். அந்த ரோஜா மாலையைக் கழட்டி அப்படியே என் மடியில் போட்டார். என் உடம்பு முழுக்க ரோஜா இதழ் ஸ்ரீ பெரியவாள் ஒரு நிமிஷம் தரிசனம் கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டார். என் ஆனந்தத்தை எப்படி சொல்வதென்றே தெரியவில்லை மற்றவர்கள் எல்லாரும் ஜன்னல் வழியாகப்பார்த்து நீலா பாக்யசாலி என்று ஒரே கோஷம் போட்டார்கள். ஸ்ரீ பெரியவாள் உத்தரவை மீறாததால் ஸ்ரீ பெரியவாள் அநுக்ரகம் பண்ணினார் உள்ளே மங்களம் வாசிக்கச் சொல்லி அனுப்பினார். மங்களம் வாசித்தேன்

ஆடி அமாவாசை காட்டுப்பள்ளியில் இருக்கும் போது வந்தது. அமாவாசைக்கு முதல் நாள் சாயந்திரம் காட்டுப்பள்ளி எஸ்டேட் மேனேஜரை ஸ்ரீ பெரியவாள் கூப்பிட்டு நாளைக்கு ஆடி அமாவாசை ரொம்ப விசேஷம் இங்கு இருக்கும் சமுத்ரக்கரைக்கு நான் ஸ்நானம் பண்ணப்போவேன் என்கூட எல்லாரும் வருவார்கள் பெண்கள், குழந்தைகள் எல்லாரும் வருவார்கள். இந்த ஸமுத்ரக்கரையில் ஸ்நான கட்டம் இல்லை. அதனால் அதன் ஆழம் எப்படியிருக்குமென்று தெரியாது. அதனால் 50 செம்படவர்களை அங்கு வரச்சொல்லு. ஸ்நானம் செய்யும்போது யாராவது அடித்துக்கொண்டு போனால் உடனே செம்படவர்கள் காப்பாற்றட்டும் ஏற்பாடு செய் என்று சொன்னார். மேனேஜர் ஏற்பாடு செய்து விட்டு ராத்திரி ஸ்ரீ பெரியவாளிடம் வந்து சொன்னார். ஸ்ரீ பெரியவாள் உள்ளே பூஜைக்கட்டு தாவாரத்தில் படுத்துக்கொண்டிருந்தார். நாங்கள் வெளித்தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டிருந்தோம். ராத்திரி 10 மணிக்கு ஜட்ஜ் ராமசாமி சாஸ்திரிகள் வந்தார். அவருடன் ஸ்ரீ பெரியவாள் பேசிக்கொண்டிருந்தார். அங்கு பேசுவது எங்களுக்கும் கேட்டது. பேச்சின் நடுவில் ஸ்ரீபெரியவாள் "சிலபேருக்கு வேலைக்குப் போவதென்றால் பயம். சிலபேருக்கு பரீக்ஷை எழுதுவதென்றால் பயம், எனக்கு சமுத்ர ஸ்நானம் செய்வதென்றால் பயம்.



அப்பப்பா. நாளைக்கு நான் ஸமுத்ரத்திற்கு போகவில்லை. புதுப்பெரிவாள் போவார். அவருடன் கூட எல்லாரும் போகட்டும்" என்று சொன்னார். குமார் என்னும் பையன் B.E. நல்லமார்க் வாங்கி பாஸ் செய்து விட்டு வேலைக்குப்பயப்பட்டு வேலைக்கே போகவில்லை. இன்னொருவன் பரீக்ஷை எழுதப்போகும் போதெல்லாம் பயத்தில் ஏதோ மயக்கம், ஜீரம் என்ற சொல்லிக்கொண்டு 7 தரம்போய் பாஸ் பண்ணினான். அதனால் சிலருக்கு பரீக்ஷை எழுத பயம் என்று சொல்லிவிட்டு எனக்கு ஸமுத்ர ஸ்நானம் பயம். நான் போகவில்லை என்று சொன்னார். காலையில் ஸ்ரீ பெரியவாள் ஸமுத்ரக்கரைக்குப் போக வில்லை. புதுப்பெரியவாள் போனார். அவருடன் எல்லாரும் போய் ஸ்நானம் செய்துவிட்டு வந்து விட்டார்கள். மானேஜரும் எல்லாரும் நல்லபடியாக வந்து விட்டார்கள் செம்படவர்களை அனுப்பிவிட்டேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். ஸ்ரீபெரியவாள் பக்கத்திலிருக்கும் கிணற்றிலேயே ஸ்னானம் பண்ணிவிட்டார். ஸ்ரீ பெரியவாள் சமாசாரம் ஓரளவு எங்களுக்குத் தெரியும். அமாவாசை ஸமுத்ர ஸ்னானம் விசேஷம். போகாமல் இருக்கமாட்டார் என்று நாங்கள் சிலபேர் கிணற்றில் ஸ்னானம் செய்து விட்டு இடுப்பில் மஞ்சள் கிழங்கை சொருகி வைத்து ரெடியாக இருந்தோம். இரண்டு காலபூஜை 12 மணிக்கு முடிந்தது. மாத்யான்னிக ஸ்நானத்துக்கு ஸ்ரீ பெரியவாள் புறப்பட்டுவிட்டார். நாங்களும் கூடப்போனோம். மற்றவர்கள் காலையில் போய் விட்டதால் அவர்கள் ஸ்நானம் செய்ய வில்லை. ஸ்ரீ பெரியவாள் சங்கல்பம் பண்ணிக்கொண்டு ஸமுத்ரத்தில் இறங்கினார். ஒரு செம்படவனும் கிடையாது. எங்கள் எல்லாரையும் தாண்டி ஸமுத்ரத்தின் உள்ளே போய் நின்று கொண்டு எல்லாரும் ஸ்நானம் செய்து விட்டு கரையேறுங்கள் என்று இரண்டு கையையும் ஆட்டி கரையேறச்சொல்லி அவரும் ஸ்நானம் செய்துவிட்டு கரையேறினார். ரொம்ப கூட்டம் சேரக்கூடாது என்பதால் அவர் இப்படித்தந்திரம் பண்ணினார். கரையேறுங்கள் என்று எங்களைச்சொன்னது ஸம்ஸார ஸமுத்ரத்திலிருந்து கரையேறுங்கள் என்று சொன்ன மாதிரி இருந்தது. ரொம்ப ஆனந்தமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

இது மாதிரி அநேக வேடிக்கையும் அதிலேயே அருளும் பண்ணவது ஸ்ரீ பெரியவாள் வழக்கம். ஒரு சமயம் ஸம்ஸ்க்ருத காலேஜில் இருந்தபோது சந்த்ரக்ரஹணம் வந்தது. ராத்திரி 7 மணிக்குப்பிடித்தது 10 மணிக்கு மோக்ஷம். கூட்டம் எக்கச்சக்கமாக இருந்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் எல்லாரும் ஸ்ரீ பெரியவாள் க்ரஹண கால ஸ்னானத்திற்கு ஸமுத்ரத்துக்கு போகும்போது தாங்களும் கிளம்புவதற்காக தயாராக இருந்தார்கள். ஸ்ரீ பெரியவாள் போகவில்லை. மேனாமட்டும் கிளம்பிப்போனது எல்லாரும் மேனாவோடு ஓடினார்கள். புதுப்பெரியவாள் ஸமுத்ரக்கரையில் இருந்தார்கள். நாங்கள் உள்ளேயே இருந்தோம். ஸ்ரீ பெரியவாள் ஸம்ஸ்க்ருத காலேஜயின் வழியாக மாதவப்பெருமாள் கோவிலுக்குப் போனார்கள் நாங்களும் ஐம்பது பேர்

போனோம். மாதவப்பெருமாள் கோவில் குளத்தில் ஸ்னானம் செய்துவிட்டு ஜபத்திற்கு உட்கார்ந்தார். நாங்களும் ஸ்னானம் செய்துவிட்டு ஜபம், ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருந்தோம். கிரஹணம் விட்ட ஸ்நானம் பண்ணிவிட்டு ஸ்ரீ பெரியவாள் ஸம்ஸ்க்ருத காலேஜுக்கு வந்து விட்டார். நாங்களும் வந்தோம். கொஞ்ச நேரத்தில் ஸமுத்ர கரைக்குப்போன அத்தனை ஜனங்களும் வந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஆனந்தம். இன்று க்ரஹண புண்ய காலத்தில் இரண்டு பெரியவாளுடன் கூட எங்களுக்கு க்ரஹண ஸ்நானம் கிடைத்து என்று ரொம்ப சந்தோஷத்துடன் சொன்னார்கள்.

ஸ்ரீ பெரியவாள் ஸமுத்ரக்கரைக்குப்போகவில்லை. மாதவபெருமாள் கோவில் குளத்தில் ஸ்நானம் செய்தார். நாங்களும் அவர்கூட பண்ணினோம் என்று சொன்னோம். அவர்கள், யார் சொன்னது? நாங்கள் இரண்டு பெரியவாளையும் நன்றாக தரிசனம் செய்து வந்தனம் செய்து வந்திருக்கிறோம். நீங்கள் தான் ஏமாந்து விட்டீர்கள் என்று சொன்னார்கள். நாங்களும் ஏமாறவில்லை, அவர்களும் ஏமாறவில்லை. ஸ்ரீ பெரியவாள் போனது மாதவபெருமாள் கோவில் தான். ஆனால் அத்தனை ஜனங்களும் ஏமாறக்கூடாதென்பதற்காக அங்கும் தோன்றி ஜனங்களை சந்தோஷப்படுத்திவிட்டார். எவ்வளவு கருணை என்று நாங்கள் ஆச்சர்யப்பட்டு எல்லாருக்கும் சந்தோஷம் தந்து விட்டார் என்று பேசிக்கொண்டோம்.

காட்டுப்பள்ளியில் பலவித பெரிய காடுகள் உண்டு. பலவித மரங்கள் காடுகள் அடர்த்தியாக இருக்கும். அதில் கதம்பமரம் என்று ஒரு விசேஷமான மரம். லலிதா ஸஹஸ்ர நாமத்தில் வரும் கதம்பவன வாஸினி என்று அவளுக்கு ஒரு நாமம். கதம்ப புஷ்பம் அம்பாளுக்கு ரொம்ப ப்ரீதி அம்பாள் ஸ்தோத்திரங்களில் கதம்பவன வாசினி என்னும் நாமம் வரும். மஹிழம்பூ மாதிரி சின்னதாக குங்குமப்பூ கலரில் இருக்கும். நெல்கதிர் மாதிரி மரத்தில் ஸரம்ஸரமாகத் தொங்கும். விடியற்காலம் அது பூக்கும் பொழுது வாஸனை ரொம்ப நன்றாக இருக்கும். சாயந்திரம் கதிராகத்தோன்றும் போது சிவனுடைய ஜடாமகுடம் மாதிரி இருக்கும். காலையில் பூத்தபிறகு அம்பாளுக்கு புஷ்ப ஜடை தைத்த மாதிரி ரொம்ப அழகாக இருக்கும். பறிக்க முடியாது. பாரிஜாதம், மகிழம்பூ மாதிரி மரத்திலிருந்து உதிரும். கீழே உதிர்ந்த பிறகு பார்த்தால் ரத்னக் கம்பளம் விரித்தமாதிரி இருக்கும். கீழே சுத்தமாகப் பெருக்கி வைத்து காலையில் அந்தப் பூவை அம்பாளுக்கு அர்ச்சனை பண்ண வேண்டும். அது தேவலோகத்து மரம். எங்கேயும் கிடைக்காது. காட்டுப்பள்ளியில் ஒருநாள் ஸ்ரீ பெரியவாள் காட்டுக்குள் போனார். எல்லாரும் கூடப் போனோம். கொஞ்சதூரத்தில் கதம்ப மரம் இருந்தது. பெரிய மரம். பத்துபேர் கைகோர்த்து அணைக்கும் படியாக அவ்வளவு பெரிய மரம். கீழே புஷ்பங்கள் உதிர்ந்து மெத்தை மாதிரி அவ்வளவு உயரம் இருந்தது. அந்த வாஸனைக்கு பாம்புகளும் வருமாம்.



அங்கு போய் ஸ்ரீ பெரியவாள் உட்கார்ந்து அந்த மரத்தின் விசேஷத்தைச்சொன்னார். அம்பாளுக்கு ரொம்ப பிரியமான புஷ்பம். அம்பாள் மணித்வீபத்திற்கு எட்டுக்கோட்டை. அதில் உள்ளடங்கின கோட்டை, கதம்ப மரக்கோட்டை என்று ரொம்ப விசேஷமாகச் சொன்னார். அந்த பெரிய மரத்தைத் தவிர பக்கத்தில் பலமரங்களும் கன்றுகளும் இருந்தது. எல்லாரும் கன்று எடுத்துக்கொண்டு வந்தோம். நானும் கொண்டு வந்து நந்தனத்தில் தோட்டத்தில் இரண்டு பக்கமும் வைத்தேன். பெரிய மரமாக விட்டது. நிறைய பூக்கிறது. சித்திரை மாதத்தில் பூக்க ஆரம்பிக்கும். விட்டு விட்டு பூத்துக் கொண்டேயிருக்கும். அடிக்கடி கதம்ப புஷ்ப அர்ச்சனை பண்ணுகிறேன். அது ஒரு பாக்யம்.

ஒரு சமயம் சதாராவில் ஸ்ரீ பெரியவாள் இருந்த போது, வேதப்ராமணனுக்கு தக்ஷனை கொடுக்கச் சொன்னார். என்னிடம் 25 ரூ தான் இருந்தது. எல்லாரும் நிறைய கொடுத்தார்கள். நான் வேதபுரி என்னும் பெரியவாளுக்கு கைங்கர்யம் பண்ணுபவரிடம் கொடுத்து, என்னிடம் கொஞ்சம் தான் இருக்கிறது என்று சொல்லிக் கொடுத்தேன். வேதபுரி ஸ்ரீ பெரிவாளிடம் கொண்டு வைத்து நீலா கொடுத்தாள் என்ற சொல்லி சொன்னான். வீணை நீலா கொடுத்தாளா என்று சொல்லி அதை வாங்கி ஒரு வேதப்ராமணாருக்குக் கொடுத்தார். அப்பொழுதிலிருந்து எப்பொழுதும் என் பேரைக்கூப்பிட்டால் வீணை நீலா என்றே சொல்வார். மடத்தில் அந்த பேரே நிலைத்து விட்டது.

ஸதாராவிலிருந்து ஒரு வாரம் கழித்து நாங்கள் பத்துபேர் மெட்ராஸ் கிளம்பினோம். முன்னாலேயே பூனாவில் ஜனதா எக்ஸ்ப்ரஸுக்கு டிக்கட் வாங்கிவிட்டோம் மடத்திலிருந்து ஸதாரா ஸ்டேஷனுக்கு வந்து பஸ் பிடித்து பூனா வரவேண்டும். ரயிலில் வந்தால் ஜனதாவைப்பிடிக்க முடியாது. ஏழு மணி பஸ் பிடிக்க முடியும். பஸ் வரவில்லை எல்லாரும் கவலையுடன் ஸ்ரீ பெரியவாளை ப்ராத்தித்துக் கொண்டிருந்தோம். ஒரு பால் வேன் காலியாக வந்தது. அந்த டிரைவர் உங்களை பூனா ஸ்டேஷனில் விட்டுவிடுகிறோம். நீங்கள் கொடுப்பதைக் கொடுங்கள் என்றான். இதுவும் ஸ்ரீ பெரியவாள் அனுக்ரகம் தான் என்று ட்ரைவர் பின்னால் போறோம். அப்பொழுது திடீரென்று எங்கிருந்தோ ஒரு பையன் ஓடி வந்தான். ஸதாராவில் தமிழ் பேசுபவர்கள் கிடையாது. அந்தப்பையன் பார்ப்பதற்கு லக்ஷணமாக இருந்தான். 20 வயது இருக்கும். பட்டைபட்டையாக வீபூதி இட்டுக்கொண்டிருந்தான். அவன் எங்களை அந்த ட்ரைவருடன் போகாதீர்கள். அவன் டயத்துக்கு கொண்டு விடமாட்டான். அதோடு நடுவழியில் உங்களிடம் இருப்பதைப் பிடுங்கிக் கொண்டு அவன் போய்விடுவான். என்னுடன் வாருங்கள். இன்னொரு பஸ் கிளம்புகிறது. அதில் ஏறுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே பஸ் எங்கள் பக்கத்தில் வந்து நின்றது. இதில் ஏறுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும்

போதே வேன் ட்ரைவர் அவனை அடிக்கப் போனான். அவன் எந்தப்பக்கம் ஓடினானென்று தெரியவில்லை. அந்த பஸ் பூனா போகிறதா என்று விசாரித்தோம் போகிறது என்று சொன்னார்கள் எல்லாரும் ஏறினார்கள் நாங்களும் ஏறிக்கொண்டோம். அந்தப் பையனைக் காணவில்லை, உடனே பஸ் கிளம்பிவிட்டது. பூனா வந்து ரயிலைப்பிடித்து விட்டோம். இது தான் ஸ்ரீ பெரியவாள் அநுக்ரகம். ஆபத்து வந்தபோது இது ஸ்ரீ பெரியவாள் அநுக்ரகம் என்று சொன்னோம். ஆபத்திலிருந்து விலக்கி நல்லபடியாகக் கொண்டு விட்டதும் ஸ்ரீ பெரியவாள் அனுக்ரகம் தானே.

ஒரு சமயம் நானும் அம்பா என்னும் என் சிநேகிதியும் ஸ்ரீ பெரியவாள் தரிசனத்துக்காக கடப்பா என்னும் ஸ்டேஷனில் இறங்கி மக்பூப் நகர் என்ற ஊருக்குப்போனோம். ஆந்த்ராவில் இருக்கிறது. இரண்டு நாள் தரிசனம் செய்துவிட்டு திரும்பினோம். அங்கெல்லாம் அப்பொழுது ஸ்ரீ பெரியவாள் சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்ததால் மடத்திலிருந்து ஊருக்குப் போக டிக்கட் கொடுத்துவிடுவார்கள். மடத்திலிருந்து கடப்பா ஸ்டேஷன் 20 கிலோமீட்டர். அம்பா கணவர் மடத்தில் மேனேஜர். அவர் வரவில்லை. எங்களுக்கு மட்டும் டிக்கட் வாங்கிக்கொடுத்து விட்டு ஸ்டேஷனில் ரிஸர்வ் பண்ணித்தருவார்கள் என்று சொன்னார். மடத்திலிருந்து ரிக்ஷாவில் பஸ் ஸ்டாண்டுக்குப் போய் அங்கிருந்து பஸ் பிடித்து ஸ்டேஷனுக்குப் போய் ரயில் ஏறவேண்டும். 7 மணிக்கு வரும் ரயிலில் டிக்கட் கிடைக்காததால் 9 மணி ரயிலுக்குப்போனோம் பஸ் சீக்கிரம் போகாமல் வழியில் ஆடுகளை எல்லாம் பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு போனார்கள். நாங்கள் ஸ்டேஷன் போன போது 8 மணி. 9 மணிக்கு பாம்பே ஜனதா வரும். நடுவழியாக இருப்பதால் ரிஸர்வேஷன் கிடைப்பது கஷ்டம் என்று ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார். முயன்று பார்க்கிறேனென்று குறுக்கும் நெடுக்குமாகப் போனார். அம்பாவும் சாமான்கள் பக்கத்தில் என்னை உட்கார்த்தி வைத்துவிட்டு ஸ்டேஷன் மாஸ்டர் பின்னாலேயே போனாள். ரயில் வந்தது. T.T.R. இடம் ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டதற்கு ரிஸர்வேஷன் இல்லை என்று சொல்லிவிட்டார். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கடப்பை சின்ன ஸ்டேஷன் ராத்திரி தங்க பயமாயிருந்தது. ஸ்ரீ பெரியவாளை த்யானம் பண்ணிக்கொண்டு நின்றிருந்தோம். ரிஸர்வேஷன் கம்பார்ட்மெண்டின் பக்கத்திலேயே நின்றிருந்தோம். T.T.R. யாருக்கெல்லாமோ கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த ஸமயத்தில் 25 வயது மதிக்கத்தக்க ஒரு பையன் டிப்டாப்பாக வந்து ரயிலில் ஏறி வாயிற்படியில் நின்று கொண்டு ரிஸர்வேஷன் என்று பணத்தை நீட்டினான். T.T.R. பதில் சொல்லாமல் அவனுக்கு கொடுத்துவிட்டார். நாங்கள் இரண்டு பேரும் வேதனைப்பட்டுக்கொண்டு நின்றிருந்தோம். பணக்காரன் என்பதால் அந்தப் பையனுக்கு கொடுத்துவிட்டார். அந்தப்பையன் ரிஸர்வேஷன் இல்லாமலேயே போகமுடியும். பணத்துக்குத்தான் மதிப்பு என்று வேதனைப்பட்டுக்



கொண்டிருந்தோம். வண்டி கிளம்பப் போகிறது. அந்தப் பையன் எங்களுடைய சாமான்களை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வாருங்கள் என்று சொல்லி வண்டியில் ஏறினான். நாங்களும் திகைப்புடன் வண்டியில் ஏறினோம். வண்டி கிளம்பிவிட்டது. எங்களுக்கு 1 டிக்கட் மேலே இருந்தது. கீழே இருந்தவரை பணிவுடன் கேட்டுக் கொண்டு அவரை மேலேபோகச்சொல்லி எங்களுக்கக் கீழே இடம் பண்ணிக்கொடுத்தான். எங்களுக்கு ஆச்சர்யமும் சந்தோஷமும். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? உங்கள் இடம் எது? பணம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு பிறகு வாங்கிக்கொள்கிறேன். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். சொன்னதற்கு மெட்ராஸ் வந்து வாங்கி கொள்கிறேன். உங்களை மெட்ராஸில் எங்கு கொண்டு விடவேண்டுமோ அங்கு கொண்டு விடுகிறேனென்று சொன்னான். எனக்கு கார் வரும் நாங்கள் போய்விடுவோம். நீங்கள் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னதக்கு மெட்ராஸில் பார்க்கிறேனென்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். மெட்ராஸ் வந்ததும் அவனைத் தேடினோம் கிடைக்கவில்லை. இது ஸ்ரீ பெரியவாள் அனுக்ரகம் தான் என்று தெரிந்தது.

ஒரு சமயம் என் தங்கை ஜமுனாவும் நானும் ஸ்ரீ பெரியவாள் தரிசனத்துக்கு ஹூப்ளி போனோம். என் நாத்தனாரும் வந்தார். அங்கு ஸ்ரீ பெரியவாள் எங்கு தங்கியிருக்கிறாரென்று தெரியவில்லை. ரயில்வே ஆபிஸர் ஒருவர் வந்தார். அவரிடம் விசாரித்தோம். அவர் எங்கள் பங்களாவில்தான் தங்கியிருக்கிறாரென்று எங்களை அழைத்துக்கொண்டு போனார். வசதியாக அவாத்தில் தங்கி ஸ்ரீ பெரியவாள் தரிசனம் பண்ணிக்கொண்டு சமைத்து சாப்பிட்டு இரண்டு நாள் இருந்தோம். மூன்றாவது நாள் ஸ்ரீ பெரியவாள் அங்கிருந்து கிளம்பிவிட்டார். என் நாத்தனார் ஸ்ரீ பெரியவாளுடன் போவதாகச் சொல்லிவிட்டார். நானும் என் தங்கையும் அந்த ஆபீஸரிடம் கேட்டதற்கு அவர் டிக்கட் வாங்கிக்கொடுத்து விட்டு ஜோலார்பேட்டையில் ப்ருந்தாவனம் எக்ஸ்ப்ரஸ் வரும் அதில் மாறி மெட்ராஸ் போங்கள் என்று சொன்னார். நாங்கள் ஜோலார்பேட்டையில் இறங்குகிறோம். ஒரு பாஸஞ்சர்வண்டி நின்றிருந்தது. டிக்கட் ஜோலார் பேட்டையில் வாங்க வேண்டும் பாஸஞ்சரில் உட்கார்ந்து கொண்டு T.T.R. வந்தால் டிக்கட் வாங்கிக் கொள்ளலாமென்று உட்கார்ந்தோம். வண்டியில் ஒரு ஆள் ஏறி உட்கார்ந்தான். எங்கு போகிறீர்கள் என்று கேட்டான் மெட்ராஸ் என்று சொன்னோம். இது பாஸஞ்சர் வண்டி ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நின்று நின்று ராத்திரி 12 மணிக்கு மெட்ராஸ் போவோம் என்று சொன்னான். 12 மணிக்குப் போனால் வீட்டுக்கு எப்படிப்போவது? வண்டியிலிருந்து இறங்கிவிட்டால் வேறு எதில்போவது என்று புரியாமல் உட்கார்ந்திருந்தோம். அந்த ஆள் ப்ருந்தாவனத்தில் போங்கள். என் கூட வந்தால் டிக்கட் வாங்கிக்கொடுத்து எந்தப் ப்ளாட்பாரத்தில் ஏறுவது என்று காட்டுகிறேனென்று சொன்னான். சாமான்களை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி நான் சாமானைப்பார்த்துக் கொண்டு என் தங்கையை அவனுடன் அனுப்பினேன். முதலில் வேகத்தில் அவளை அனுப்பிவிட்டேனே தவிர பிறகு ரொம்ப பயமாய் விட்டது.

அவனை யாரென்று கூடத்தெரியாது. என்ன பண்ணுவான் என்பதும் தெரியாது. தப்புப்பண்ணி விட்டோமே என்று ஒரே அடியாகக் கலங்கிப்போய் ஸ்ரீபெரியவாளை த்யானித்துக் கொண்டேயிருந்தேன். அரைமணி கழித்து என் தங்கை டிக்கட்டுடன் வந்தாள். நாங்கள் ஏறின வண்டி இப்பொழுது கிளம்பிவிடும். இதே இடத்தில் ப்ருந்தாவனம் வரும் என்று சொல்லி அவன் போய்விட்டான். திரும்பிப்பார்த்தும் அவன் இல்லை நாங்கள் இருந்த இடத்துக்கும் அவன் வரவில்லை. இந்த வண்டி உடனே கிளம்பிவிட்டது. ப்ருந்தாவனம் வந்தது. ஏறி சாயந்திரம் மெட்ராஸ் வந்தோம். இது யார் செய்தது? ஸ்ரீ பெரியவாள் தானே!

---





# கோதாவரி ஓடம்

எங்கும் நிறை கோதாவரியை (கோ)
கொண்டாடிக் கண்டு கொள்வோம்
நாம் கொண்டாடிக் கண்டு கொள்வோம்

முத்து வஜ்ர கப்பலிது மோகன கப்பலிது
மூன்று லோகம் பச்சை மின்ன (மூன்று)
நாகரத்னம் இழைத்துவர (கப்பலுக்கு)
நாகராஜர் மெச்சிவர (நா)
பவழ ஸ்தம்பங்கள் நட்டு (ஸ்தம்ப)
பாய்மரமாம் வெண்பட்டு (பாய்)

இழுத்துக்கட்ட வெள்ளிக்கொடி
கப்பலுக்கு வெள்ளிக்கொடி
ஏற்றமுள்ள சுக்கானாம் (ஏற்றமுள்ள)
ஔஸந்த உப்பரிகை மேடை (உப்பரிகை)
உட்கார ரத்னபெஞ்சி (உட்கார)
நாகரத்ன நாற்காலி (கப்பலுக்கு)

நல்ல முத்தால் மஞ்சங்களாம் (நல்ல)
ஸ்படிகக் கல்லால் ஜன்னல்களாம் (கப்பலுக்கு)
ஸூர்யகாந்தி வில்லைகளாம் (ஸூர்ய)
வைடூர்யம் இழைத்துவர (கப்பலுக்கு)
வருகுது கோதாவரியில் (வருகுது)
இந்திர நிலம்போல் விளங்கும் (நிலம்)
ஈச்வரியாள் கப்பலிது (ஜக)

ஈசல் கூட்டங்கள் போல (கூட்டங்கள்)
அநேகக் கப்பல் நடுவிலிது (அநேக)
வெள்ளி மலை போல விளங்கும் (மலை)
வேணிக்கப்பல் வருகுது பார் (திரு)

## முடுக்கு

சந்திரமௌலி திருபுரஸுந்தரியும் வாரார்
செம்மையாய் ராஜாக்கள் அங்கேயும் பாராய்
ஷண்மதஸ்தாபனாசாரியாரும் கூட
சேர்ந்ததொரு வெகு ஜனங்கள் அங்கேயும் பாராய்
தாளமேளங்கள் தம்பூரு வாத்யங்கள்

கௌரிகாளையுடன் தவளஶங்கங்கள்
டங்காடவாண்டா பிருதான நகரா
நாதஸ்வரகாரர்களும் நாட்டிய தாஸிகளும்
ஸங்கீத ஸாரங்கி தம்பூரு வீணை

உபய வெண்ஶாமரம் மகர தோரணங்களும்
ஒய்யாரப்பட்டுக் கூடை வெள்ளி பாலாக்கள்
ஶ்வேத சத்ரங்களும் வெள்ளிப் பிரம்புகளும்
செம்பொன்னு பாதுகையும் பிருதாவளிகளும்

பாராக்கள் ஈட்டி சுருட்டி துப்பாக்கி
சொருகு கத்தியுடன் சூரச் சிப்பாயி
வேதியர் வேதாந்த ஶ்ரவணங்கள் பண்ண
ஶங்கராசாரியாரும் சேர்ந்து தவம் பண்ண

ஶீக்கிரத்தில் வருகுதய்யா ஶக்தியோட கப்பல்
ஆனந்தமாகவே அம்பாளோட கப்பல்
நாகரீகமாக நடுவில் வரும்போது
அப்ஸரஸ்திரீகளும் நாட்யங்கள் ஆட
ஆகாஶவாணியும் மத்தளங்கள் போட
தும்புரு நாரதரும் தம்புரு மீட்ட

துருவாஸ மஹா முனியுமங்கே தாளங்கள் போட
கந்தர்வ ஸ்திரீகள் தன வருஷம் சொரிய
கங்கை கோதாவரி கண்டு மனமகிழ
கனமான ஶங்காராசாரியாரும் புகழ
அண்டத்தில் உள்ளோர்கள் அங்கு வந்து பார்க்க



ஆகாஶவாணியும் வாக்குக் கொடுக்க
கந்தமுடன் புனுகு ஜவ்வாது புஷ்பங்கள்
கங்கை கோதாவரி நதிக்கு பூஜிப்போம்
மணத்த தொரு மாம்பழம் பலாப்பழங்களுடனே
மங்களமான கோதாவரிக்குக் கொடுப்போம்
காம கோடியை நாம் கண்டு ஸேவிப்போம்
கரந்தன்னில் பல நமக்குக் கொடுப்பளே மெத்த
சந்திரமௌலி திருபுரஸுந்தரியுடைய கப்பல்

_______________ முடுக்கு முடிவு

சேர்ந்தே வருகுது ராஜமஹேந்த்ர துறையில்
வாணி, இந்த்ராணி, ஸர்வாணி, திருவேணிக் கப்பல்

ஏலேலோ கோதாவரியை கோதாவரியை
கொண்டாடி கண்டு கொள்வோம் (நாம்)



# வந்தனம்

அகத்தினிலே அனைவரிடத்திலும் அன்பை வைத்து இருந்தவரே
ஆன்மிகத்துடன் ஆயகலைகள் சிலவற்றில் ஆற்றலுடன்
திகழ்ந்தவரே
இதயத்திலே எழும் தனது இளமைக்கால நினைவுகளை எங்களிடம்
பகிர்ந்து கொண்டவரே
ஈடுபாட்டுடன் எப்போதும் எல்லோரிடமும் பேசிவந்தவரே
உழைப்பையே உயர்வாகக்கொண்டு சோம்பலின்றி இருந்தவரே
ஊறிய உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொண்டவரே
எளிமையான வாழ்க்கையை கைக்கொண்டு ஆசாரத்துடன்
ஏற்றம் மிக்கவராய் திகழ்ந்தவரே
ஐந்து சகோதரர்களையும் தன் பாசத்தால் அன்பால் வென்றவரே
ஒருமித்த மனத்துடன் தூய்மையோடு இறைவழிபாட்டிலும்
குருவழிபாட்டிலும் ஈடுபட்டவரே
ஓராயிரம் வந்தனங்களுடன் தயாரித்த வந்தன மலர்கள் இவை
ஔவையவள் வாக்கைக் காப்பாற்றி பெண்மையின் பெறுமைபேச
கணவர் திரு எம் ஜி எஸ் அவர்களுக்கு பத்தினியாய் ஒரு
மனதுடன் சேவை செய்து பதிவ்ரதா சிரோன்மணியாய்
திகழ்ந்தவரே
பள்ளியில் இறுதி ஆண்டும், கல்லூரி வாசலும் எட்டிப்
பார்க்காமல் என்றும் அறிவுச்சுடராய் திகழ்ந்தவரே
பகுத்தறிவோடு, ஆற்றல், தன்னம்பிக்கை, விடாமுயற்சியோடு
விளங்கியவரே
அறிவத்தெய்வம் கலைவாணியின் அருளால் அவள் கையிலிருக்கும்
வீணையின் நாதத்தை சுருதியோடு மீட்டியவரே



ஆயகலைகளில் சங்கீதம், வாத்தியம் இசைத்தல், ஆன்மீகம்,
அரசியல், சமயல்கலை இவற்றில் தேற்சியுடன் திறமையுடன்
விளங்கியவரே
அட்டலக்குமிகளில் ஒருவரான தைரிய லக்குமியின் அருளுடன்
அஞ்சாநெஞ்சுடன் தன் வாழ்வில் எதிர்நீச்சல் போட்டு
வாழ்ந்தவரே
பஞ்சபாண்டவர்களாய் ஐந்து சகோதரர்களுடன் பிறந்து வாழ்ந்த
அதிர்ஷ்டசாலியே
இரு சகோதரிகளையும் வலது கையாக ஒருவரையும் இடதுகையாக
ஒருவரையும் தனது வாழ்வில் கொண்டவரே

காஞ்சி மகான் மஹா ஸ்ுவாமிகளைத் தன் குருவாகக் கொண்டு
தங்களது வாழ்நாளில் அவர்தம் வாக்கான இந்து மதத்தின்
ஆணிவேரான வேதங்களைப் பராமரிக்க வேதபாராயண
ஸத்ஸங்கங்களை முறையாக தம் இல்லத்தில் வேத
பிராம்மணர்களைக் கொண்டு செய்வித்து தங்கள் மூலமாக எங்கள்
அனைவருக்கும் இறை அருள் கிடைக்கச் செய்து எங்களுக்கு
வழிகாட்டியாய் நின்ற உங்களுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.

**ப்ரபாவதி ராம்ஜோதி**

# Profile of Smt. Neela Subramanian

Born to Srimathi Lakshmi Ammal and Sri Tyagaraman on 25th June 1925, Neela Subramanaian was a strong, brave and determined woman. She devoted her life life in the pursuit of music and the service of God.

An excellent Veena player, she was honoured to play the instrument several times for the Kanchi Paramacharya Sri Chandrasekharendra Sarasvathi. In fact, it was a tradition for Paramacharya to ask her to play after his final pooja at the Matam as well as in many of the transit camps he was at.

Her passion for music was channelised through teaching of Veena. A strict disciplinarian, she sought the same flawless perfection from her students that she herself exhibited.

Her gift for music comes as no surprise. Her father, late Sri Tyagaraman, was the grandson of Umayalpuram Sri Krishna Bhagavathar; the direct disciple of the Saint composer Sri Tyagaraja Swamigal. She thus belongs to the Shishya Parampara of Tyagaraja and pursued the art of Carnatic Music with great reverence and zeal.

Neela Subramanian always had a deep devotion to the Vedas and Hindu Sastras and believed ardently in their wisdom and relevance. She sought to contribute her mite by arranging Veda Parayananam periodically in her house at Nandanam. She has also given a handsome donation to the Kanchi Matam for the preservation and protection of Vedas.

In keeping with her last wish and desire to encourage the spread of Vedic wisdom, an endowment has been created under Bharatiya Vidya Bhavan, Chennai Kendra.

Her spirit and passion will live on as we commemorate her life.

**Lata Ashwin**



# A Tribute

The striking highlight of the life of Smt Neela Subramanian, was her absolute devotion to Maha Periaval, a total surrender at the feet of His Holiness. She went through the pangs of her life, sometimes very challenging, putting her to severe hardships and suffering with amazing courage and forbearance only with her unflinching faith and devotion with the extraordinary strength that she derived from her Bhakti to Maha Periaval that sustained her throughout her life.

Her study and practice of classical music was at the highest level. She was a vocalist with a mellifluous voice and also a fine vainika. In the 50's She had given a few Veena concerts on AIR, Chennai but gave it up on the advice of Maha Periaval. She was a good teacher and taught veena to a large number of youngsters, both girls and boys, for almost a quarter of a century. Her outstanding contribution to music is, setting to music Mooka Panchaśati of Sri Mooka Kavi of 500 verses in 80 ragas. This is a high quality work with a depth of music expertise.

Smt. Neela Subramanian was a well read person in Hindu and Vedic literature in Tamil. She was also very well informed in current affairs, keeping herself updated, reading, to include political, social and cultural periodicals and books. She could vigorously engage friends in interesting conversations on these subjects with insightful understanding of different topics.


**T. N. Rajan**

# Shishya Parampara of Saint Tyagaraja



**Krishna Bhagavathar (1820-1908)**


Umayalpuram Krishna Bagavathar and Sundara Bhagavathar were the fifth and sixth of the seven children born to Srinivasa Iyer and Alamelu Manga. They were under the guardianship of their eldest brother Venkatarama Bhagavathar who was himself a *pauranika* giving musical discourses on Ramayana. The brothers thus had their initial introduction to musical discourses, Sanskrit and Ramayana. At the request of the eldest brother Venkatarama Bhagavathar, Saint Tyagaraja accepted the two brothers as his disciples. The Gurukulavasa of the brothers commenced at their tender age of 11 and 9 respectively at the feet of the greatest music scholars of all times. The saint must have been in his sixties at that time. For the next fifteen years, the brothers were under the total influence of the saint in his advanced age when he was at his peak of creativity, reaching the height of spirituality. Krishna Bhagavathar and Sundara Bhagavathar sat at the feet of their Great Guru and learnt all that they could possibly learn in the fifteen formative years of their lives. Their only mission in the rest of their lives was to propagate the music of the great saint. It is primarily to these representatives of the Sishya Parampara of Saint Tyagaraja along with the Sishya groups of Thillaisthanam and Walajapet, and others, we owe the rich treasure of great compositions bequeathed to posterity.



**Sundara Bhagavathar (1822-1910)**



On the day when saint Tyagaraja attained mukti, the two brothers along with a few others were present and were responsible for the erection of the Samadhi and the Brindavan (Tulasi madam) over it in Thiruvaiyaru. They used to perform the Aradhana of the Great Saint every year at Thiruvaiyaru as long as they were physically fit. In fact they performed aradhana for 52 long years and just before their demise, the brothers in 1907 entrusted the responsibility of performing the Aradhana to one of their disciples, Panchapakesa Iyer, who continued this task with great devotion and Bhakti till his death. A detailed stone inscription to this effect could be found at the Brindavan, which is behind the statue of Saint Tyagaraja of the present Samadhi at Thiruvaiyaru. Other disciples of the brothers were Bharatham Nallur Narayanaswami Iyer and Manjakudi Ramachandra Bhagavathar, the latter being the grandson of Sundara Bhagavathar.



**Tyagaraman (1896-1959)**

Krishna Bhagavathar adopted Sri Tyaganatarajan, son of his daughter as his *svekara putran*. Sri. Tyagaraman was the son of Sri. Tyaganatarajan. Sri Tyagraman taught his sons and daughters the music of Saint Tyagaraja and was regularly performing the Aradhana of Saint Tyagaraja with great devoting and Bhakthi at his house. He mesmerized Mahatma Gandhi by playing *Santamulekha* in his Gottuvadhyam. He also had the rare blessing from the Kanchi Mahaswamigal to continue his studies. Smt. Neela Subramaniam was the eldest daughter of Sri Tyagaraman and Smt Lakshmi Ammal. It is strange but true, both Sri Tyagaraman and Smt Neela Subramanian departed this world on Bhagula Panchami, the thithi when Saint Tyagaraja attained Videha Mukti though the month was different.



